₹10

fmpb

அழைகூவல்

Volume 56 Issue 4 April 2026

ஒப்புக்கொடுக்க அழைப்பு



"நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை".
(ரோமர் 12:1)

ஆரம்ப வரிகள்...

நிரப்பப்படுவதற்காக வெறுமையாக்கப்படுதல்...

“இயேசுவுக்கு ஒப்புவித்தேன்... ஒப்புவிக்கிறேன், ஒப்புவிக்கிறேன்” என்ற பாடல் 1896இல் ஜட்சன் W வான் டெவென்டர் என்பவரால் எழுதப்பட்டது. இவர் ஒரு அமெரிக்கக் கலை ஆசிரியர். இவர், ஒரு மதசார்பற்ற கலை வாழ்க்கையைத் தொடர்வதற்கும், முழுநேர பணிக்குத் தன்னை அர்ப்பணிப்பதற்கும் இடையில் பல ஆண்டுகளாகப் போராடினார். வான் டெவென்டர், பாடுவதிலும், இசைக்கருவிகளை வாசிப்பதிலும் தேர்ச்சிப் பெற்றிருந்தார். அவர் கலந்துகொள்ளும் மேதடிஸ்ட் எபிஸ்கோபல் தேவாலயத்தின் இசை ஊழியத்தில் அதிகமாக ஈடுபாடுகொண்டார். முழுநேர ஊழியத்திற்கான அழைப்பின் தாக்கம் தனக்குள்ளாக வளர்ந்து வருவதை அவர் உணர்ந்தாலும், நீண்ட காலமாக அவ்வுணர்வை தவிர்த்து வந்தார். ஒஹியோவில் கற்பித்துக்கொண்டிருந்தபோது, இறுதியாக தனது தனிப்பட்ட ஆசைகள் அனைத்தையும் தேவனிடம் “ஒப்புவிக்க” முடிவு செய்தார். அது அவருக்கு ஆழ்ந்த அமைதி உணர்வைக் கொடுத்தது. எனவே. இந்த முக்கியமான ஆவிக்குரியப் போராட்டத்திலிருந்து அந்தப் பாடல் பிறந்தது. இது தேவனின் சித்தத்திற்கு அவர் இறுதியாக ஒப்புவித்ததையும், ஊழியத்தில் இணைய அவர் எடுத்த முடிவையும் பிரதிபலிக்கிறது. அவரது நண்பரான வின்ஃபீல்ட் எஸ். வீடன், இந்தப் பாடலுக்கு இசையமைத்து, 1896இல் இருவரும் இணைந்து அதை வெளியிட்டனர். வீடன் அந்தப் பாடலை மிகவும் விரும்பியதால், 1908இல் அவர் இறந்த பிறகு, அதன் வரிகள் அவரது கல்லறைக் கல்லில் பொறிக்கப்பட்டன. இந்தத் துதிப்பாடல், தனிப்பட்ட உரிமைகளையும், உலக இன்பங்களையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதை உணர்த்தும் ஒரு முழுமையான அர்ப்பணப் பாடலாகும். இம் மாதம் **“ஒப்புக்கொடுக்க அழைப்பு”** – (ரோமர் 12:1) என்ற தலைப்பில் நாம் தியானிக்க இருக்கிறோம்.



ஒப்புக்கொடுத்தல் என்பது ஒருவரிடம் இதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று ஒப்புக்கொள்வது ஆகும். 1தெச.5:23இன் படி மனிதன் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் என்ற மூன்று கூறுகளை உடையவன் ஆவான.

(8ஆம் பக்கம் தொடரும்...)

"உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்" *(நீதி. 16:3)*

நாம் புரிந்துக்கொள்ளவே முடியாத சில காரியங்கள் இருக்கும். சில வேளையில் அதை நாம் ஏற்றுக்கொண்டு சரணடைய வேண்டியதாயிருக்கும்.
– ராண்டி ஜி ஃபைன்

"பிதவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்" *(லூக். 22:42).*

தேவனின் கைகளில் சரணடைந்த வாழ்க்கையை விட சக்தி வாய்ந்தது வேறெதுவும் இல்லை.
– ரிக் வாரன்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நமது ஊழியம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு நற்செய்தி பணி இயக்கம். இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்வதே இதன் பிரதானப் பணி.

இந்திய திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப் பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.

இணைந்திடுங்கள்.
பிறரை அறிமுகம் செய்யுங்கள்.

feedbackfmpb@fmpb.org
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ

பொதுச்செயலாளர்: விஜய் பிரசன்னா ஜசக்
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

தனிப்பிரதி ரூ.10/-
ஆண்டு சந்தா ரூ.48/-
ஆயுள் சந்தா ரூ.500/-

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

பொதுச்செயலாளரிடமிருந்து...



கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெபப் பங்காளர்களே, உடன் ஊழியர்களே!

ஏப்ரல் மாதம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், காலியாக உள்ள கல்லறை என்பதை ஒரு சரித்திர நிகழ்வை நினைப்பூட்டுவது மட்டு மல்லாமல், நம் இருதயத்தை ஏவி எழுப்பி இவ்வெளிச்சத்தில் தலைமுறைதோறும் ஒவ்வொரு விசுவாசியையும் முழு மனதுடன் அவருடைய ஆளுகைக்கு அர்ப்பணிக்கவும், நமது விசுவாசத்தை பறைச்சாற்றவும் அழைப்பாக இருக்கிறது.

எனக்கு ஒப்படைக்கப்பட்ட இந்த ஊழியத்தை ஒரு வருடம் செய்து முடிக்கின்ற இத்தருணத்தில், இப் பொறுப்பை சிறப்புடன் செய்ய தேவன் எனக்கருளின அளவற்ற கிருபைகளுக்காகவும், பாதுகாப் பிற்காகவும் அவருக்கு இருதயத்தின் ஆழத்திலிருந்து மனமகிழ்ச்சியுடன் ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். இப்பார மானப் பணியில் பல்வேறு அழுத்தங்கள் இருந்தாலும், மாறாத தேவன் தமது பிரச்சனத்தினாலும், தயவினாலும் தாங்கி நடத்தியதோடு, சக ஊழியர்களின் ஐக்கியம் எனக்கு உற்சகாத்தையும், ஆவிக்குரிய செறிவூட்டலையும் தந்தது. இத்தருணத்தில் என்னை பலப்படுத்தி வழிநடத்த கடந்த ஓராண்டு காலமாக என்னை ஜெபத்தில் தாங்கியும், ஆலோசனைகள் வழங்கியும் உற்சாகப்படுத்திய ஒவ்வொருவருக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், இயேசு மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார் என்ற வெற்றி தொனியாக மட்டுமல்லாது, நாம் தேவனுடையவர்கள் என்பதை வெளிப்படுத்துவதுமாகும். மரணத்தை வென்று ஜெயமாக மாற்றியவர் நமது உள்ளம், வாஞ்சை, திட்டம் மற்றும் எதிர்க் காலத்தை அவர் சித்தம் நிறைவேற்ற, அவர் பாதம் அர்ப்பணிப்பதுமாகும். எனவே உயிர்த்தெழுதல் என்பது கொண்டாட்டம் மட்டுமல்லாமல் தேவனின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற அர்ப்பணிக்கும் நாட்களாகும்.

காலி கல்லறையில் தொடங்கும் அர்ப்பணிப்பு

விடியற்காலையில் கல்லறையை நெருங்கின பெண்மணிகள், பிரமிப் போடும், கீழ்ப்படிதலோடும் அங்கிருந்து புறப்பட்டார்கள். சீடர்கள் உயர்த்தெழுந்த தேவனை நேருக்குநேர் எதிர்கொண்ட போது, பயத்தினால் தங்களை

அர்ப்பணித்தனர். பயந்துபோயிருந்த சீடர்களுக்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தைரியமுள்ள சாட்சிகளாக அவர்களை மாற்றினது. உயிர்தெழுந்த அதே தேவன், நமது சுய சித்தத்தைக் கைவிட்டு, அவருடைய தெய்வீக அதிகாரத்தின் கீழ் எவ்வித ஐயமின்றி வாழ நம்மை அழைக்கிறார்.

அர்ப்பணிப்பு என்பது பெரும்பாலும் பெலவீனம், இழப்பு அல்லது தோல்வி என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. அர்ப்பணிப்பு என்பது தேவனுடைய ராஜ்யத்தின் நோக்கத்திற்கும், வாழ்க்கைக்கும் பலன் தருகிற நுழைவாயிலாகும். உயிர்த்தெழுந்த தேவன் விசுவாசத்தை நம்மீது கட்டாயப்படுத்தி திணிக்காமல், அன்போடு அழைக்கிறார். பிதாவின் விருப்பத்திற்கு தன்னை முதற்பலனாக மரணத்திற்கு அர்ப்பணித்தார் என்பதை அவருடைய காயங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன.

உயிர்த்தெழுந்த தேவனும் சீரமைக்கப்பட்ட வாழ்வும்:

உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, அவருடைய சீடர்களுக்கு ஆறுதலை வழங்கியதோடு, வாழ்வின் முக்கியத்துவங்களை சீர்ப்படுத்தினார். பேதுரு தன் தோல்விகளை எதிர்க்கொள்ளாமல், மாறாக **"நீ என்னை நேசிக்கிறாயா?"** என்ற அன்பின் கேள்வியை எதிர்க் கொண்டார். உயிர்த்தெழுதல் அவரை மீட்டெடுத்தது மட்டுமல்லாமல், அவருக்கு புதியதொரு ஊழியத்தையும் கொடுத்து. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மீதான அன்பு, அவருடைய ஊழியத்திற்கு அடித்தளமாகவும், அவருடைய தியாகத்திற்கு உந்து சக்தியாகவும் அமைந்தது.

அதேபோல, உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம்மை வெறும் மதப்பற்றுதலுக்கு அழைக்காமல், வைராக்கியமான, முழுமையான அர்ப்பணிப்பிற்காக நம்மை அழைக்கிறார். அவரது ஊழியத் தினிமித்தம் நமது சௌகரியங்களையும், அவருடைய அழைப்பிற்காக நமது பாதுகாப்பையும், அவருடைய நாமத்திற்காக நமது நற்பெயரையும், அவருடைய ராஜ்யத்திற்காக நமது எதிர் காலத்தையும் அர்ப்பணிக்க அவர் நம்மை அழைக்கிறார். இத்தகைய அர்ப்பணிப்பு என்பது ஏதோ ஒரு தருணத்தில் எழும் உணர்ச்சி வேகத்தோடு நின்றுவிடுவதில்லை. மாறாக இது ஒவ்வொரு நாளும் இதயத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கென்றே வாழத் துடிக்கும் மனநிலையாகும்.

அர்ப்பணிப்பும், ஊழியமும் பிரிக்க முடியாதவை:

உயிர்த்தெழுந்தப் பின் அவரின் ஒவ்வொரு சந்திப்பும் ஒரு கட்டளையோடுதான் நிறைவுபெறுகிறது. **"சென்று அறிவியுங்கள்..."**, **"பிதா என்னை அனுப்பினதுபோல, நானும் உங்களை அனுப்புகிறேன்"**, மற்றும் **"நீங்கள் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்"** போன்ற கர்த்தரின் செய்தி, அவருடைய ஊழியப்பணியுடன் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

அர்ப்பணிப்பு ஒரு தனிப்பட்ட காரியம் மட்டுமன்றி ஊழியத்தின் ஆழமான சத்தியமாகவும் காணப்படுகிறது. அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு செயலற்ற ஒன்றாக இருக்கவே முடியாது. அர்ப்பணிப்பு என்பது கிறிஸ்து இயேசு

நம் மூலமாக உலகிற்குள் பாய்ந்து செல்லும் ஒரு வாய்க்காலாவே இருக்க வேண்டும். நம்மை அவரிடம் ஒப்படைக்கும்போது, நாம் அறிந்திராத இடங்களுக்கும், நாம் கேள்விப்படாத இனக் கூட்டங்களுக்கும், நாம் தரிசனம் கண்டிராத ஊழியங்களுக்கும் நேராக நம்மை அவர் வழிநடத்துகிறார்.

ஊழியம் என்பது அர்ப்பணித்த மனிதர்களின் சாட்சியின் வரலாறு ஆகும். ஆகவே, உயிர்த்தெழுந்த தேவனால் கவரப்பட்ட அவர்கள் எதையும் தங்களுக்காக வைத்துக்கொள்வதில்லை.

அர்ப்பணிப்பின் விலைகிரையமும், மகிமையும்

அர்ப்பணிப்பு என்பது விலைமதிப்பற்ற கிரையம் செலுத்துவதாகும். அது நம் சுயவிருப்பத்தையும், நம் தனிப்பட்ட கட்டுபாடுகளையும் சிலுவையில் அறைய நம்மை ஏவுகிறது. நமது அர்ப்பணிப்பு எதுவுமே ஒருபோதும் இழந்துபோவதில்லை. மாறாக அது மகிமையடைகிறது என்று உயிர்த்தெழுதல் நமக்கு உறுதியளிக்கிறது. சிலுவை கிரீடம் மகிமையாக மாறினதுபோல், நமது அர்ப்பணிப்பும் மண்ணிலும், விண்ணிலும் மகிமையாக விளங்கும்.

உயிர்த்தெழுந்த இயேசு **''உயிர்த்தெழுந்தவரை மரித்தோரிடத்தில் ஏன் தேடுகிறீர்கள்?''** என்று இன்னமும் நம்மைக் கேட்கிறார். இலவசமாக கொடுக்கப்படுகிற கிறிஸ்துவின் ஐக்கியத்தைப் பற்றிக்கொள்ளாமல், வீணான லட்சியங்கள், பாதுகாப்புகள் மற்றும் பாரம்பரியங்களை நாம் ஏன் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறோம்?

இன்றைய திருச்சபைக்கான ஓர் அழைப்பு

நிச்சயமற்ற தன்மை, கவர்ச்சிகள் மற்றும் ஆவிக்குரிய மனநிறைவு பெற்றிருக்கிற இன்றைய தலைமுறையில், நம்மை புதுப்பிக்க அழைக்கப்படுகிறோம். இன்று திருச்சபைக்கு பார்வையாளர்கள் தேவையில்லை; கிறிஸ்துவின் சீடர்களாக உயிர்த்தெழுந்த தேவனின் பாதத்தில் தங்கள் எல்லாவற்றையும் அர்ப்பணித்தவர்களே தேவை. நம்மை கிறிஸ்துவுக்கு முழுவதுமாக அர்ப்பணிக்கும்போது மட்டுமே நமது ஊழியங்கள், யுக்திகள் மற்றும் கட்டமைப்புகள் மூலம் நிலைநிற்கும் கனியைத் தரமுடியும். திட்டங்கள் அர்ப்பணிப்பிற்கு மாற்றாக அமையாது, திறமைகள் கீழ்ப்படிதலுக்கு மாற்றாக அமையாது, செயல்பாடுகள் ஒருபோதும் உயிர்த்தெழுந்த இரட்சகருடனான உறவுக்கு மாற்றாக அமையாது.

இந்த மாதம் நாம் உயிர்த்தெழுதல் ஞாயிறைக் கொண்டாடும்போது, கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற பிரகடனத்தைத் தாண்டி, கிறிஸ்து என் வாழ்வின் ஆண்டவராக என்னை ஆளுகிறார் என்று உறுதிகொள்வோம்.

நமது ஜெபமும், அர்ப்பணமும்

இந்த உயிர்த்தெழுதல் காலம் நம்மை இன்னும் ஆழமான அர்ப்பணிப்பிற்கு நேராக வழிநடத்துவதாக. இக்காலத்தில் நம்முடைய அழைப்புகள், முன்னுரிமைகள் மற்றும் பற்றுக்களையும் சீர்தூக்கி பார்ப்போம். நேர்மையுடனும், தாழ்மையுடனும் நம்மை நாமே எனக்காக எல்லாவற்றையும்

கொடுத்த ஆண்டவரிடமிருந்து நான் எதையாவது மறைக்கிறேனா? என்று கேட்டுக்கொள்வோம். உயிர்த்தெழுந்த இயேசு நம் மத்தியில் நின்று சமாதானம் கூறி தமது காயங்களை வெளிப்படுத்துகிறார். அவர் தமது உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்துவதற்கு மட்டுமின்றி அதன் பலனை நம் வாழ்வின் மூலமாக வெளிப்படுத்த அழைக்கிறார்.

இந்த மடலை முடிக்கும் வேளையில் நமது தேசத்திற்காக 1000 மணி நேரம் ஜெபிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளை உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். இது ஒரு வழக்கமான நிகழ்வு அல்ல, இது நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து தெளிவான நோக்கத்துடனும், ஒரு மனதுடனும் சூழ்நிலைகள் மாற கூடி ஜெபத்திற்கான தருணமாகும். ஜெபப் பிரிவில் தளர்வில்லாமல், உத்தமத்தோடு செயல்படுகிற அருள்திரு. கில்பர்ட் வில்லியம் மற்றும் குழுவினருக்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கீழ்க்கண்ட காரியங்களுக்காக ஜெபிக்க உங்களை வேண்டுகிறேன்.

- நமது பள்ளிகளுக்கு அர்ப்பணமுள்ள, திறமையான ஆசிரியர்கள் கிடைக்க...
- தலைமை அலுவகத்திற்கு அர்ப்பணமுள்ள தன்னார்வர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் கிடைக்க...
- மே மாதம் 21 முதல் 24 வரை சேலம், பெத்தேலில் நடைபெறும் தமிழ்நாடு மாநில முகாமில் தேவனுடைய வழிநடத்துதல் மற்றும் ஆவிக்குரிய எழுச்சிக்காக...
- ஏப்ரல் 30 மற்றும் மே 2ஆம் தேதிகளில் அசாம் மற்றும் மணிப்பூரில் நடக்கவிருக்கும் நேர்முகத் தேர்வில் கர்த்தரின் ஊழியத்திற்காக உத்தமமான ஊழியர்களை தேவன் எழுப்பித்தர ஜெபியுங்கள்.

மேலும் நிர்வாகக் குழுவின் மூலம் **அருள்திரு. என். ராஜதுரை** (வட இந்தியர்) மற்றும் **அருள்திரு. பி. பால்ராஜ்** (தென்னிந்தியா) ஆகிய இருவர் பணித்தள செயலாளர்களாக ஜெபத்துடன் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏப்ரல் 1ஆம் தேதி முதல் தங்கள் பொறுப்புகளை மேற்கொள்ளும் இவர்கள் தாழ்மையுடனும், விவேகத்துடனும், தேவ அழைப்பினை மனதில் பதித்தவர்களாக ஊழியம் செய்ய உங்கள் ஜெபங்களில் இவர்களை தாங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காலியான கல்லறையின் பிரமிப்பில் நின்றுவிடாமல், அதிலிருந்து நம்மை அழைத்த தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போமாக. வார்த்தைகளால் மட்டுமே தேவனுக்கு சாட்சிகளாக வாழாமல், உண்மையாகவே கிறிஸ்து நம்மில் வாழத்தக்கதாக கீழ்ப்படிந்து, அர்ப்பணித்து வாழ்வோமாக!

உயிர்த்தெழுந்து ராஜ்யம் பண்ணுகிற தேவனின் ஊழியத்தில்



அருள்திரு. விஜய் பிரசன்னா ஜசக்


(ஆரம்ப வரிகள் தொடர்ச்சி...)

பவுல், நம் சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது நமது முழு மனிதனையும் அது குறிப்பிடும். பழைய ஏற்பாட்டில் பலிக்கான மிருகங்கள் பழுதற்றவைகளாகவும், சிறந்தவைகளாகவும் இருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியமாயிருந்தது. ஏனென்றால் அது நம் பரிசுத்த தேவனுக்கு செலுத்தும் காணிக்கையாகும். இப்படி செய்வதே தேவனை ஆராதிப்பது ஆகும்; இதில் தேவன் பிரியப்பட்டார். இன்று தேவன் அப்படிப்பட்ட மிருகத்தின் பலியை விரும்பவில்லை. மாறாக நம்மையே ஜீவபலியாக தர எதிர்பார்க்கிறார். ரோமர் 6:6இன் படி நமது பாவ சுபாவத்திற்கு அடிமைப்பட்டிருந்த பழைய மனுஷனை அல்ல நமது சரீரம், அதுவும் தேவனுடைய ஆளுகைக்குக் கீழ்ப்பட்ட மறுரூபமாக்கப்பட்ட புதிய மனுஷனை, பாவமற்ற பரிசுத்தமான தேவனுக்கு பிரியமான ஆவிக்குரிய பலிகளை செலுத்தும் பரிசுத்த ஆசாரிய கூட்டத்தையே அவர் விரும்புவதும், ஏற்றுக்கொள்வதாகும் (1 பேதுரு 2:5).

ஆபிரகாம் ஈசாக்கை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார். 1சாமு. 15:22இல் பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் என்று கூறப்படுள்ளது. தேவனுக்கு கீழ்ப்படிவது என்பது கடினமான காரியமாகும். ஏனென்றால் பல வேளைகளில் நாம் விரும்பும், நேசிக்கும் சில காரியங்களை விட்டுக்கொடுக்க நேரிடும். ஆனால் ஆபிரகாம் தனது ஜீவனிலும் மேலாக கருதிய தன் மகனை, தன் இருதயத்தில் முதலாவது பலி செலுத்திவிட்டதன் மூலும் தேவனின் கட்டளைக்குக் கீழ்படிந்து சோதனையில் வெற்றி கண்டார். இவ்வாறு தன் கீழ்ப்படிதலின் மூலம் ஈசாக்கை காட்டிலும் தேவனை நேசித்தார் என்று தனது செயலின் மூலம் நிரூபித்துவிட்டார். பழைய ஏற்பாட்டில் பலிக்கான மிருகம் பலவீனத்தில் கட்டப்பட்டு அசையாமல் கிடந்தன. மாறாக ஜீவ பலியானது உயிரோடு இருப்பதால் அவ்வப்போது ஒப்புக்கொடுத்தல் கடினமாகும் போதும், பலனற்றதுபோல் தோணும்போதும் மற்றும் அசௌகரியமாக மாறும் போதும் பலிபீடத்தை விட்டு வழுவி செல்ல எத்தனிக்கின்றது என்று டி.எல். மூடி அடிக்கடி தனது செய்திகளில் குறிப்பிடுகிறார். நாமும் நம் அன்றாட வாழ்வில் தேவனை காட்டிலும் நேசிக்கும் விரும்பும் காரியங்களை அனுதினமும் பலிபீடத்தில் வைப்பதன் மூலம் நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலப்படுகிறோம். மற்றும் நம் அர்ப்பணிப்பில் இன்னும் ஆழம் காண்கிறோம். ஆபிரகாம் தேவனுக்கு தன்னையும், தன் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தபோது நம் தேவன் யேகோவா யீரே என்று தனது வாழ்வில் அனுபவித்தார். எனவே பக்தனோடு இணைந்து நாமும் நம்முடைய ஒவ்வொரு அவயவங்களையும் தேவனுக்கு ஒப்படைக்கிறோம் என்று பாடி, பாடி நம் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நம் வாழ்வில் அனுபவித்து தேவையோடு ஏங்கிக் கொண்டிருக்கும் இத்தேசத்து மக்களுக்கும் இந்த தேவனை காட்டுவோம்.

- மெர்சி செல்வின் *(தகவல் தொடர்புத்துறை)*

பலிபீடத்தில் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை



"நிக்கோலஸ் சின் சென் டார்ப்" என்பவர் 24.05.1700இல் ஜெர்மனி தேசத்திலுள்ள மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தார். அவ்வூரில் நடத்தப்பட்ட ஓர் ஓவிய கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஏராளமான ஓவியங்களில் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் இயேசு கிறிஸ்துவின் திரு உருவம் அவரை கவர்ந்தது. அந்த ஓவியத்தின் கீழே **"இவை எல்லாவற்றையும் உனக்காக சகித்தேன், எனக்காக நீ என்ன செய்தாய்?"** என்று எழுதப்பட்ட வாசகத்தை படித்து உடனே தன் வாழ்வை முழுமையாக இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தார். என்னை நீண்ட நாட்களாக நேசித்து வரும் இந்த இயேசுவிற்காய் இதுவரைக்கும் நான் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் இனிமேல் அவர் என்னை நடத்துகிற பாதையில் அவருக்காக ஏதாகிலும் செய்வேன் என முடிவு செய்தார். இவர் 1732ஆம் ஆண்டு **"மோராவியன் மிஷனெரி மூவ்மெண்ட்"** என்ற அமைப்பை ஏற்படுத்தி, இவரது நாட்களில் 10 நாடுகளுக்கு 200 மிஷனெரிகள் அனுப்பப்பட்டனர். மேற்கிந்திய தீவுகளுக்கு மிஷனெரிகளை அனுப்ப முடியாத காலத்தில், அங்கு அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தங்களை தாங்களே அடிமைகளாக விற்க ஒப்புக்கொடுத்து, அவர்கள் வயற்றுக்கு அவர்களே உழைத்து சாப்பிட்டு தியாகமான ஊழியம் செய்யும் மிஷனெரிகளை உருவாக்கினார்.

அழைப்பின் தேவன்

ரோமர் 12:1இல் "சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று எழுதுகிறார். இந்த நிருபத்தில் பலவிதமான அழைப்புகளைப் பற்றி பவுல் எழுதுகிறார். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே (ரோ.11:29) என்று கூறும் இவர், தன்னை அப்போஸ்தலனாக அழைத்த தேவன் (ரோ.1:1), இல்லாதவைகளை

இருக்கிறவைகளைப்போல் அழைத்தவருமாயிருக்கிற தேவன் (ரோ.4:17), சகல ஜாதிகளையும் (1:6), தனக்கு ஜனங்களாக இல்லாவர்களையும் (9.25), புறஜாதிகளிலிருந்தும் (9.24), தேவனுக்குப் பிரியரும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கிற தேவன் (1:12) மற்றும் அவர்களை தமது தீர்மானத்தின்படியும் (2:28), முன்குறித்தவர்களையும் (8:20), அவருக்கென்றும், அவரது ராஜ்யப் பணிக்கென்றும் அழைக்கிற தேவன் என்றும் பவுல் சபையாருக்கு ஆண்டவரை அறிமுகம் செய்தபின், 12ஆம் அதிகாரத்தில் ஓர் ஒப்புக்கொடுத்தலுக்கான அழைப்பை விடுக்கிறார்.

ஒப்புக்கொடுத்தலுக்கு அழைக்கிறார்

ஒப்புக்கொடுத்தல் என்ற தமிழ் வார்த்தைக்கு சரணடைதல், ஒப்படைப்பு, சரணாகதி, அடிபணிதல் என்ற பல அர்த்தங்களில் அழைக்கலாம். ஆங்கிலத்தில் Surrender எனப் பொருள்படும். இதன் அர்த்தம் முழு கட்டுபாட்டையும், முழு உரிமையையும், கையளித்தல் அல்லது மேலான வல்லமை மற்றும் அதிகார முடைய ஒருவருக்கு முற்றிலும் இனங்கிபோவதாகும். ஒப்புக்கொடுத்தல் என்ற வார்த்தைக்கு எபிரெய மொழியில் **கேளியா** என்ற பதம் உபயோகிக்கப்படுகிறது. இதன் பொருள் நிபந்தனையின்றி சரணாகதி அடைதலாகும்.

தாயின் வயிற்றில் நாம் உருவாகும் முன்பே அறிந்தும், அழைத்திருக்கிற நம் ஆண்டவரின் கரத்தில் நம்மை முழுமையாக ஒப்படைத்திட அழைக்கிறார். ரோமர் 12:1இல் நான்கு விதமான ஒப்புக்கொடுத்துதலைப் பற்றி எழுதுகிறார். அவை...

1. சரீரங்களை ஒப்புக்கொடுப்போம்

பவுல் ரோமர் 12:1இல் **நீங்கள் உங்கள் சரீரங்களை** ஒப்புக்கொடுகங்கள் என்று அழைப்பு கொடுக்கிறார். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் அறியீர்களா? என்று 1 கொரி. 6:19இல் குறிப்பிடுகிறார். மேலும் இந்த சரீரம் கர்த்தருக்குரியது (1 கொரி. 6:13). ஆகையால் தேவனுக்கு சொந்தமான இந்த சரீரத்தால் தேவனை மகிமைப்படுத்தவே நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு பழைய பாடல் வரிகள் இப்படி கூறுகிறது. **நீ உனக்கு சொந்தமல்லவே, மீட்கப்பட்ட பாவி நீ உனக்கு சொந்தமல்லவே.**

மேலும் இந்த சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவங்கள் மூலமாகவும் நாம் ஆண்டவரை கனப்படுத்தவே அவைகள் அருளப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல்... உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (ரோ. 6:13) என்று வாசிக்கிறோம். நாம் நம் சரீரத்தின் அவயவங்களைக் கொண்டு இனிப் பாவத்திற்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேக் கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று

அறிந்திருக்கிறோம் (ரோ. 6:6) என்று பவுலடியார் சபைக்கு எழுதுகிறார். எனவே நம்மை பாவம் செய்ய தூண்டும் கண், நாவு, கை, கால் போன்ற நம் பாவ சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களையும், முழுமையாக தினமும் கிறிஸ்துவின் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுப்போம்.

இரயில் பிரயாணத்தில் வேத வசனங்களை தியானித்துக் கொண்டிருக்கும் ஓர் விசுவாச வாலிபனை சூதாட்டம் ஆட, தங்களுக்கு தேவையான ஒரு நபருக்காக அந்த வாலிபனிடம் 'சகோதரரே, எங்கள் அட்டத்திற்கு ஒரு கை கொடுப்பாயா?' என்று கேட்ட அந்த அந்நிய வாலிபர்களிடம் 'ஐயா, நான் உங்களுக்கு உதவ முடியாது, ஏனென்றால் என் கைகளை என் வீட்டிலே விட்டுவிட்டு வந்துவிட்டேன் என்றான்'. அதற்கு அவர்கள் ஆச்சர்யத்துடன் 'சகோதரா, உனக்கு இரண்டு கரங்கள் நன்கு இருக்கிறதே, பின் ஏன் இப்படி சொல்கிறாய்' என்றபோது, 'இப்பொழுது எனக்கு இருப்பது என் இயேசுவின் கரங்கள். என் பழைய கரத்தை காலையிலே என் இயேசுவிடம் ஒப்படைத்துவிட்டேன். இந்த இயேசுவின் கரங்களால் சூதாட்டம் விளையாட முடியாது, என்னை மன்னியுங்கள்' என்றான்.

ஆம் பிரியமானவர்களே! இந்த வாலிபனைப் போல நாமும் ஒவ்வொரு நாளும் பாவம் செய்ய தூண்டும் நம் சரீரத்தின் அனைத்து அவயவங்களையும் இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாக, அவருக்கு சாட்சியாக வாழ்வோம்.

2. பரிசுத்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம்

இந்த 12:1ஆம் வசனத்தில் இரண்டாவது **பரிசுத்தம்** என்ற வார்த்தையை பவுல் பயன்படுத்துகிறார். பரிசுத்தமாக வாழ ஒப்புக்கொடுக்க அழைக்கிறார். உங்கள் தேவனும், கர்த்தருமாகிய நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் (லேவி. 19:2). பரிசுத்த தேவனை ஆராதிக்கிற நாம் நம்முடைய கிரியைகள் எல்லாவற்றிலும் கிறிஸ்துவை சமுதாயத்தில் பிரதிபலிக்க அழைக்கப்பட்டுள்ளோம். பிரியமான வர்களே! மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துகொண்டு, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தகடவோம் (2 கொரி. 7:1) என்று பவுல் கூறுகிறார். பாவத்தால் நிறைந்துள்ள சமுதாயத்தில் நாம் பரிசுத்தமாக வாழ்ந்து, நம்முடைய தனித்துவத்தை எல்லா இடங்களிலும் நிலை நாட்டுவோம்.

வட அமெரிக்காவின் குளிர் பிரதேசங்களில் வாழும் **எர்மைன்** என்ற சிறிய விலங்குகள் மிகவும் சுத்தமான குகைகளில், பாறையின் சந்துகளில் வாழும். இவை மிகவும் வெண்மையான ரோமங்களையும், மென்மையான சரீரத்தையும் கொண்டவை. இதன் குணத்தை அறிந்த வேட்டைகாரர்கள், இவைகள் வெளியேறும் பாதைகளில் அசுத்தமான சேற்றைக் கொட்டி வைத்து விடுவார்கள். அந்த அசுத்தத்தை கடந்து சென்று தங்கள் சரீரங்களை அசுத்தமாக்கிக்கொள்ள விரும்பாமல் மரணத்தை ஏற்றுக்கொள்ள துணிந்து விடும். இவ்வாறு இந்த விலங்குகளை வேட்டையாடுகிறார்கள்.

ஐந்து அறிவு கொண்ட **எர்மைன்** விலங்கு தான் பிடிப்பட்டு மரித்துப் போனாலும் பரவாயில்லை, என்று தன் சரீரத்தை ஒருபோதும் அசுத்தத்திற்கு இடம் கொடுக்காமல் வாழும் ஐந்துக்களைப்போல நாம், நம் பரிசுத்தத்தை என்றும் காத்து வாழ நம்மை நாமே ஒப்புக்கொடுப்போம்.

3. தேவனுக்குப் பிரியமாய் வாழ ஒப்புக்கொடுப்போம்

இந்த வசனத்திலே பவுல் பயன்படுத்தும் மூன்றாவது பதம் **தேவனுக்குப் பிரியமாய்** என்பதாகும். நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிற வனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே (கலா.1:10) என்று பவுல் குறிப்பிடுகிறார். 2 கொரி. 5:9இல் நாம்... அவருக்குப் பிரியமான வர்களாயிருக்க நாடுகிறோம் என்று எழுதுகிறார். தாவீது, என் தேவனே, உமக்கு பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் (சங். 40:8) என்றும், உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன் (சங்.143:10) என்றும் கூறுகிறார். தானியேலை குறித்து ஆண்டவர், நீ மிகவும் பிரியமானவன், ஆகையால், நீ வேண்டிகொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது (தானி.9:22). கர்த்தருக்குப் பிரியமானவன் எவனும் அவருக்குச் சித்தமானதை மட்டுமே செய்வான். அவருக்காக, அவருடைய சித்தத்தை தன் வாழ்வில் நிறைவேற்றுவதற்காக எந்த ஒரு தியாகத்திற்கும் தயாராயிருப்பான். தன் முழு இருதயத்தோடு அவரை நேசித்து, தேவ திட்டத்தில் பங்காளியாக அவருக்கு ஒப்புக்கொடுப்பான்.

சாது சுந்தர்சிங் என்ற பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இந்தியாவின் அப்போஸ்தலர் என அழைக்கப்பட்ட இவர் இயேசுவை ஏற்றுக்கொண்ட காரணத்திற்காக வீட்டை விட்டு அடித்து துரத்தப்பட்டார். உணவில் விஷமிட்டு புசிக்க கொடுத்தனர். எத்தனையோ மிரட்டல்கள், அடி, உதைகள் மத்தியிலும் இயேசுவின் மேல் கொண்ட அவரது விசுவாசத்திலிருந்து விடுபடாமல் உறுதி யாய் நிலைத்திருந்த அவரை ஒருமுறை அவரது தந்தை வஞ்சகமாய் அழைத்து, என் முழு ஆஸ்திகளையும் உனக்குக் கொடுக்கிறேன். உன் மாமாவின் ஒரே மகளையும் திருமணம் செய்து வைக்கிறேன். நீ பெரிய ஆஸ்திக்கு சொந்தகாரனாவாய், நீ உன் அழகிய மாமா மகளை மணம் முடிக்க சம்மதமா? என்று கேட்க, அவர் எனக்குள்ள ஒரே இதயத்தை நான் பிரியமாய் நேசிக்கும் என் இயேசுவிற்கே ஒப்படைத்துவிட்டேன். என் மாமா மகளுக்கென்று கொடுக்க வேறே இதயம் இல்லை என்றார்.

பிரியமானவர்களுக்கே இதயத்தின் முழு இடத்தையும் அருளுவீர். நாமும் கூட சாது சுந்தர்சிங் போல, நமக்குள்ள ஒரே இதயத்தை, நம்மை அளவுகடந்து நேசிக்கும் நம் இயேசுவிற்கே பிரியமாய் வாழ ஒப்புக்கொடுப்போம்.

4. ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்போம்

இந்த வசனத்திலே பவுல் பயன்படுத்தும் நான்காவது வார்த்தை **ஜீவ பலி.** ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களைமுன்னிட்டு வேண்டிக்கொள்கிறேன் (12:1). **பலி** என்றாலே கொலை செய்யப்படுதல் அல்லது மரணத்திற்கு ஒப்புவித்தல்

எனப்படும். அப்படியிருக்க **ஜீவ பலி** என பவுல் எதை பற்றி குறிப்பிடுகிறார்? ஜீவ பலியின் அர்த்தம் என்ன? பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள பாவ நிவாரணபலி, சமாதானபலி, சர்வாங்க தகனபலி, குற்ற நிவாரண பலி என்கிற எல்லா பலிகளிலும் ஒரு மிருகமாவது, பட்சியாவது கொல்லப்பட வேண்டும், இரத்தம் சிந்தப்பட வேண்டும். ஜீவ பலி என்றால் பலி செலுத்துபவர் தன்னையே ஆண்டவருடைய சந்நிதியில் (பலிபீடத்தில்) முற்றிலுமாக அர்ப்பணிப்பதாகும். நம் சரீரத்தை மரணத்திற்கு ஒப்படைப்பதில்லை. நாம், நம் சுயசித்தத்தை, சுய விருப்பத்தை, நோக்கங்களை, ஆசை இச்சைகளை சாகக் கொடுக்க வேண்டும். **நான்** என்ற ஆணவத்தை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து, அதற்கு பதிலாக தேவ சித்தம், திட்டம், விருப்பம், என் மூலம் நிறைவேற்ற, நான் என்னையும், எனது தினசரி வாழ்க்கை முறைகளையும் தேவனுடைய கரத்தில் பரிபூரணமாக ஒப்படைப்பதாகும்.

தாவீது, நான் சாவாமல் பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் (சங்.118:17) என்று கூறுகிறார். நான் ஜீவனோடிருப்பேன், ஆனால் நான் எனக்காக வாழாமல், என் எல்லாம் என் இயேசுவிற்கு கையளித்து, முற்றிலும் அவருக்காகவே வாழ ஒப்புக்கொடுப்பதே ஜீவ பலி.

சுவிசேஷகர் நடராஜ முதலியார் ஒரு பாடலில்... ***பலிபீடத்தில் என்னை பரனே, படைக்கிறேனே இந்த வேளை, அடியேனை திருச்சித்தம்போல ஆண்டு நடத்திடுமே...*** என்று பாடுகிறார்.

நாம் நம் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தலே, நாம் செய்யதக்க புத்தியுள்ள ஆராதனை.

அருள்திரு. ஜான் டேவிட்ராஜ்
(மிஷனெரி – ஓய்வு)



மாநில் முகாம் 2026

சிறுவர் மனப்பாட வசனங்கள்

தொடக்க நிலை (Beginner)

வயது – 3 முதல் 5 வரை

வேத வசனம் – 1 பேதுரு 1:14-16

முதன்மை நிலை (Primary)

வயது – 6 முதல் 8 வரை

வேத வசனம் – 1 தெசலோனிக்கேயர் 4:1-8

இளநிலை (Junior)

வயது – 9 முதல் 12 வரை

வேத வசனம் – எபேசியர் 4:1-15

நிலத்தில் விழுந்த கோதுமை மணி



திருமதி. சுனிதா சிங்கின் வாழ்வும் மரபும்

விரக்தியில் பரம அழைப்பு

ஒவ்வொரு தலைமுறைலும் தேவன் தம் அன்பிற்குள் இழுக்கும் வல்லமையை வெளிக்காட்ட சிலருடைய வாழ்வு நமக்கு ஆசீர்வாதமாக அமைகிறது. அத்தகைய வாழ்க்கை சமுதாயம் நம்பிக்கையை விடாமல் எல்லா நிலைமையிலும் தேவ திட்டத்தை நிறைவேற்ற தூண்டும் சாட்சியாக அமைகிறது. திருமதி. சுனிதா சிங் அவர்களின் வாழ்க்கையும் அவ்வாறான ஒன்று.

1971ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி பிகார் மாநிலம், ஜகதீஷ்பூரில் பிறந்த இவர், மகாத்மா காந்தியுடன் தனது பிறந்தநாளைப் பகிர்ந்துகொண்டது மட்டுமல்லாமல், தேசத்திற்கு ஒரு ஆசீர்வாதமாகத் திகழ வேண்டும் என்ற அவரது தொலைநோக்குப் பார்வையையும் பகிர்ந்துகொண்டார். மரபுகளும், வலுவான கலாச்சார பழக்கவழக்கங்கள் இவரது ஆரம்பகால வாழ்வை வடிவமைத்தன. கிராமப்புற இந்தியாவிலுள்ள பல இளம் பெண்களைப் போலவே இவரது வாழ்வும் எளிய சூழ்நிலைகளுடனும், போராட்டங்களுடனும் தொடங்கியது.

இளம் வயதிலேயே திரு. வீரேந்திர குமார் என்பவருடன் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. இவர்களது திருமண வாழ்வின் ஆரம்ப ஆண்டுகள், ஆவிக்குரிய போராட்டங்களாலும், உணர்வுபூர்வமான துயரங்களாலும் நிறைந்திருந்தன. தனது சாட்சியில், தான் அசுத்தாவியின் கட்டுக்களுக்கும், வாழ்க்கையில் நம்பிக்கையற்றவராக இருந்ததாக சுனிதா பகிர்ந்து கொண்டுள்ளார்.

இருப்பினும், சரியான தருணத்தில் தேவன் இவரது வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார். கடவுளின் திட்டத்தின்படி இவரது கணவர் **இயேசு திரைப்படத்தைக்** காண நேர்ந்தது. அது அவரிடம் சத்தியத்தையும், நம்பிக்கையையும் தேடும் ஆர்வத்தைத் தூண்டியது. மறுநாளே அவர் சுனிதாவை ஒரு போதகரிடம் அழைத்துச் சென்றார். அந்தப் போதகர் அவருக்காக ஜெபித்தபோது சுனிதா சுகத்தையும், விடுதலையையும் அனுபவித்தார். நம்பிக்கையின்மையின் சங்கிலிகள் அறுக்கப்பட்டன. வாழ்வின் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது.

சுனிதா சிங்கும், அவரது கணவரும் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக்கொண்டபோது, அவர்களது தனிப்பட்ட மாற்றம் விரைவில் ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களை உயர்த்துவதற்கான தேவனின் அழைப்பாக உருவெடுத்தது. அதன்பின் விரைவில் சுனிதா ஒரு ஆழமான ஆவிக்குரிய தரிசனத்தைப் பெற்றார்;

அதில் ஆண்டவர் காடுகள், ஆறுகள், மலைகள், பள்ளத்தாக்குகள் என தாம் வழிநடத்திச் செல்லும் கடினமான இடங்களில் தமக்கு ஊழியம் செய்ய விருப்பமா? என்று கேட்டார். அசைக்க முடியாத விசுவாசத்துடனும், முழுமனதுடனும் ''ஆம்'' என்று பதிலளித்து, தனது வாழ்வையும், குடும்பத்தையும் தேவனின் பணிக்கு அர்ப்பணித்தார்.

1992ஆம் ஆண்டு FMPBயில் இணைந்ததிலிருந்து இவரது வாழ்வு இந்தியாவில் சென்ற இடங்களில் எல்லாம் பலருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. தனது கணவர் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து ஹரியானா, உத்தரப்பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்கம், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர் மற்றும் பீகார் ஆகிய ஏழு மாநிலங்களில் இவர் ஊழியம் செய்தார்.

இவர்கள் ஊழியம் செய்த பணித்தளங்கள் அனைத்திலும் தியாகம், விடாமுயற்சி மற்றும் தேவ அழைப்பிற்குப் பணிந்து நடத்தல் ஆகியவற்றின் அடையாளங்களாகத் திகழ்ந்தன. தொலைதூர கிராமங்கள், பழங்குடிப் பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகளில் சுனிதா அமைதியாக கிறிஸ்துவின் செய்தியை வாழ்ந்து காட்டினார். இரக்கத்துடன் சமூகங்களுக்கு சேவை செய்தார். இவரை பீகாரைச் சேர்ந்த மற்றொரு **அன்னை தெரேசா**வாக இருக்க தேவன் அனுமதித்தார் என்று நான் கூறுவேன்.

சுனிதாவை அறிந்தவர்கள், இவரை ஒரு ஜெப வீரராக, பணிவு, மென்மையான வலிமைக் கொண்ட அழகான மற்றும் கண்ணியமான பெண்ணாக நினைவுக்கூறுவார்கள். இவர் தனது கணவரை ஊழியத்தில் அதிகமாக ஆதரித்தார். தனது அன்பு மகள்களான நவோமி, சலோமி மற்றும் ரூத்தை தேவ பக்தியில் வளர்த்தார்.

மார்ச் 9, 2026 அன்று, தனது கணவர் மற்றும் குழந்தைகளால் சூழப்பட்ட திருமதி. சுனிதா சிங் தேவ இராஜ்யத்திற்குள் அழைக்கப்பட்டார். இவர் இப்போது தேவ சமுகத்தில் இளைப்பாரிக் கொண்டுள்ளார். அங்கு இனி துக்கம் இல்லை, வலி இல்லை, கண்ணீர் இல்லை. ஆனால் கர்த்தருடைய பிரச்சன்னத்தில் நித்திய மகிழ்ச்சியான இடத்தில் உள்ளார்.

அவரது வாழ்க்கை அர்த்தமுள்ள வாழ்க்கை. இது செல்வம், அந்தஸ்து அல்லது அங்கீகாரத்தால் அளவிடப்படுவதில்லை. மாறாக தேவனின் அழைப்பிற்கு உண்மையாகவும், மற்றவர்கள் மீது இரக்கத்துடனும் இருப்பது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. தேவனுக்கும், தேசத்திற்கும் தியாகம் நிறைந்த அர்ப்பணிப்பிற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் திருமதி. சுனிதா சிங் மற்றும் அவரது குடும்பத்தினக்கு FMPB மிகவும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

வேதாகமத்தின் வார்த்தைகள் அவரது ஊழியத்திற்கான பிரதிபலனை அழகாக சுருக்கமாகக் கூறுகின்றன...“நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” (மத். 25:21).

சத்தியம், அன்பு மற்றும் சேவையின் பாதையில் மேலும் உண்மையாக நடக்க அவரது வாழ்க்கை நம்மை தொடர்ந்து ஊக்குவிக்கட்டும்.

திரு. ஜாண் சாமுவேல்,
தலைவர் – FMPB

தேவனின் அழைப்பைக் கனப்படுத்துதல்



ஒருமுறை மிஷனெரியானால், என்றென்றும் மிஷனெரியே

இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கிக்கவும், சீஷர்களை உருவாக்கவும் தேவனால் அழைக்கப்பட்டு, அனுப்பட்டவர்களே மிஷனெரிகள். அவர்கள் கலாச்சாரம் கடந்து, சுவிசேஷம் சென்றடையாத மக்கள் இனங்களை சந்தித்து, நற்செய்தி அறிவித்து, சபைகளை ஸ்தாபித்து, சமூகங்களுக்குள் ஆவிக்குரிய மற்றும் சமூக மறுமலர்ச்சியடைய செய்பவர்கள்.

மிஷனெரி என்ற வார்த்தை, லத்தீன் மொழியில் உள்ள **மிஸ்ஸியோ** (அனுப்பும் செயல்) மற்றும் கிரேக்க மொழியில் உள்ள **அப்போஸ்டோலோஸ்** (அனுப்பப்பட்டவர்) ஆகிய வார்த்தைகளிலிருந்து உருவானது. இது இயேசு கிறிஸ்துவின் இறுதி கட்டளையை அடிப்படையாகக் கொண்டு மக்களின் கலாச்சாரங்களுக்கும், மொழிகளுக்கும் மதிப்பளித்து நற்செய்தியைப் பகிர்ந்து, ஆவிக்குரிய மற்றும் சமுதாய வளர்ச்சியடைய தேவப் பணியைச் செய்ய தனி நபர்களாக தேவனால் அழைத்து, பிரித்தெடுத்து அனுப்பட்டவர்கள்.

வெளிநாட்டு மிஷனெரிகள் சென்றபின், தேவன் இந்தியாவிற்குள்ளே கலாச்சாரம் கடந்து ஊழியம் செய்யும் மிஷனெரிகளை தேவன் நம் நாட்டில் எழுப்பினார். இவர்கள் பல்வேறு ஊழிய அமைப்புகள் மூலம் சந்திக்கப்படாத மக்களுக்கிடையே ஊழியம் செய்கிறார்கள். இவர்கள் மூலம் அநேகர் தேவன் இலவசமாக அருளும் இரட்சிப்பையும், பாவத்திலிருந்து கிடைக்கும் விடுதலையையும் பெற்று அனுபவிக்கிறார்கள். இவ்வாறான ஊழிய அமைப்புகளில் நமது இயக்கம் முன்னோடியான ஒன்று.

நமது மிஷனெரிகளின் அழைப்பையும், அர்ப்பணிப்பையும் உணர்ந்து, செய்து முடிக்கவேண்டிய ஊழியத்தின் தேவையையும் கருத்தில் கொண்டு நம் இயக்கத்தின் நிர்வாகக் குழு **ஒருமுறை மிஷனெரியானால், என்றென்றும் மிஷனெரியே** என்ற கொள்கையை முறையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த முன்னெடுப்பு, வாழ்நாள் இறுதிவரை பணித்தளத்தில் ஊழியம் செய்ய விரும்பும் மிஷனெரிகள், தங்கள் சொந்த மாநிலங்களுக்கு வெளியே உள்ள பணித்தளங்களில் தொடர்ந்து ஊழியம் செய்து தங்கள் அழைப்பையும், அர்ப்பணிப்பையும் நிறைவேற்றிட உதவுகிறது. ஒருமுறை இந்தியாவிற்கு வந்த மிஷனெரிகள் தங்கள் அடிச்சுவட்டை விட்டுச் சென்றதுபோலவே, இப்போது நமது மிஷனெரிகளும் தேவனுடைய ராஜ்யத்திற்காக வரலாற்றை உருவாக்க அழைக்கப்படுகிறார்கள்.

இப்பணிக்காக விசுவாசத்துடனும், தைரியமாகவும், உறுதியுடன் அடியெடுத்து வைக்கும் நம் மூத்த மிஷனெரிகள் சந்திக்கும் சவால்களை மேற்கொள்ள அவர்களுக்காக ஜெபிக்கவும், உற்சாகப்படுத்தவும், ஆதரிக்கவும் உங்களை அழைக்கிறோம்.

அருட்திரு. A.S. ஃபிராங்க்ளின் M.Y. பாதம், தலைவர் – துணை நிர்வாகக் குழு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நடத்தும்

தமிழ் மாநில முகாம் 2026

கருப்பொருள்:

பேர் சொல்லி அழைப்பு

ஏசாயா 43:1

நாள்: **மே 21 முதல் 24 வரை**

வியாழன் காலை 9:30 மணி முதல்
ஞாயிறு காலை 7:30 மணி வரை

இடம்:

பெத்தேல் வளாகம்,
டேனிஷ்பேட்டை, சேலம்

செய்தியாளர்கள்:

Dr. ராஜேஷ் டதி
Mr. G. ஜாண் சாமுவேல்
Rev. விஜய் பிரசன்னா ஐசக்
Mr. Y. நவநீதர்
Rev. J. ரூபன் சாமுவேல்
Rev. S. இம்மானுவேல் ரஞ்சித் சிங்
மற்றும் பணித்தள மிஷனெரிகள்

சிறப்பு அம்சங்கள்:

பெரியவர்கள், இளம் தம்பதியினர், வாலிபர்கள், இளம் வாலிபர்கள், சிறுவர்களுக்கென தனித்தனி கூடுகைகள்.

பதிவுக்கட்டணம்:

பெரியவர்களுக்கு	சிறுவர்களுக்கு
ரூ.300/-	ரூ.200/-

தரிசனமிகு பாடல்கள், அனலூட்டும் செய்திகள், ஊக்கமூட்டும் சந்தியா வேளைகள் மற்றும் பயனுள்ள பணித்தளப் பகிர்வுகள்.

முகாம் முன்பதிவுக்கான QR குறியீடு

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும்,
மிஷனெரித் தரிசனத்தில் வளரவும்,
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக
பங்குபெற அழைக்கிறோம்



தலைமைத்துவ பயிற்சி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, என்றும் வாலிபர் இயக்கம் என்னும் சொல்லிற்கேற்ப நமது இயக்கத்தை ஆண்டவர் இன்றும் ஆசீர்வதித்து வருகிறார். மார்ச் 7, 8 ஆகிய தேதிகளில் பூண்டி, இறைவனின் தோட்டத்தில் நடந்த தலைமைத்துவ பயிற்சியில் இந்த ஆண்டின் மாநில முகாமில் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்ய துடிப்புள்ள 55 வாலிபத் தலைவர்கள் தமிழகத்தின் சில பகுதிகளிலிருந்து கூடி வந்திருந்தனர். இதில் ஆண்டவருடைய வார்த்தையைப் பகிர்ந்துக்கொடுத்த திரு. வேலன்டைன் தேவிதார், அருட்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் மற்றும் திருமதி. வசந்தி இம்மானுவேல் ஆகியோருக்காக ஆண்டவருக்கு நன்றி சொல்கிறோம். இனிவரும் நாட்களில் இந்த இயக்கம் தொடர்ந்து வீரிய வளர்ச்சி பெற வாலிபத் தலைவர்களின் பங்கு மற்றும் அர்ப்பணிப்பு எவ்வளவு அதி முக்கியம் என்ற கரிசனையை திரு. ஐசக் கமலேஷ் அவர்கள் பகிர்ந்துகொண்டது மிகவும் சவாலாக இருந்தது.

இரண்டு நாட்களும் இறைவனின் தோட்டத்தில் ஜெபத்தோடு மாநில முகாமில் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்ய நமது வாலிபத் தலைவர்கள் எடுத்த தீர்மானத்தை கர்த்தர் ஆசீர்வதித்து கனப்படுத்துவார் என்ற நிச்சயத்தோடு தங்கள் தங்கள் பகுதிக்கு திரும்பினோம்.

வாலிபர் பிரிவு ஊழியங்களைத் தொடர்ந்து உங்கள் ஜெபங்களில் தாங்கும்படி அன்புடன் நினைப்பூட்டுகிறோம்.

அருள்திரு. ஜே. அருள்மணி, செயலர் – வாலிபர் பிரிவு

மகிமைக்குள் பிரவேசித்தார்

திருமதி. G.J. எலிசபெத் அவர்கள் (79 வயது) 03.03.2026 அன்று தனது நித்திய இளைப்பாறுதலை அடைந்தார். இவர் பெங்களூர் பட்டணத்தில் கடந்த 35 ஆண்டுகளாக FMPBயில் ஜெபக்குழுத் தலைவியாகத் தீவிரமாக செயல்பட்டு வந்தவர். தேவனுடைய ராஜ்யத்திற்காக இவர் அளித்த பங்களிப்பிற்காக தேவனைத் துதிக்கிறோம். இவர் காலஞ்சென்ற திரு. ஜான் பீட்டர் அவர்களின் துணைவியார் ஆவார். இவரை பிரிந்து வாடும் மகன் ஜான் அலெக்சாண்டர் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



திரு. Y. ஜஸ்டின், விரிவுப்பணி செயலர் – தெற்கு பெங்களூர்.

வீட்டு ஜெபக்குழுக்கள்





பின்வரும் நோக்கத்துடன் குடும்பங்களை மையப்படுத்தும் ஜெபக்குழுக்களைத் துவக்க வழிநடத்தப்படுகிறோம்.

அதன் மூலம்:

- கிறிஸ்தவ குடும்பங்களை ஆவியிலும், சமுதாய வாழ்விலும், பொருளாதாரத்திலும் ஸ்திரப்படுத்துவது.
- திருச்சபையின், சமுதாயத்தின், தேசத்தின் நடப்பு நிலையை எடுத்துச் சொல்லுவது.
- அரசியல், பொருளாதார மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க வேதத்தில் அவர்களை வேரூன்றச் செய்வது.
- கிறிஸ்தவ வாழ்விலும், சாட்சியிலும் மற்றவர்களுக்கு மாதிரியாக்குவது.
- அதற்கு அனுசரணையாக முறையான வேத பாடங்களை, சீராக எல்லாக் குழுக்களுக்கும் அனுப்பி வைத்து நடமுறைப்படுத்துவது.
- கிறிஸ்தவ அந்நியோனியத்தில் அவர்களைக் கட்டி, அவர்களது வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அக்கறைப்படுவது. அதற்கு சாதகமாக சூழ்நிலைகளை உருவாக்குவது.
- ஆலோசனை, போதனை, சரீர மற்றும் மன ஆரோக்கியம், ஜெபம், கட்டவிழ்ப்பு போன்ற உதவிகளை இக்குழுக்களில் இணைந்தே நிகழச்செய்வது.
- மேலும் கிறிஸ்துவை அறியாதபடி சுற்றிலும் வாழும் மக்கள் மீது அக்கறைப்படுவதோடு, கிறிஸ்தவ அன்போடும், சுகந்த வாசனையின் அழகோடும் வெளிப்படுத்துவது.

நமது விடுதிகளில் பயிலும் விசுவாசிகளின் பிள்ளைகளின் கல்வி மற்றும் பராமரிப்புத் தேவைகள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, ஏப்ரல் 1, 2026 முதல் குழந்தை ஆதரவு நிதியுதவியை மாதத்திற்கு ரூ.1200லிருந்து ரூ.1500ஆக உயர்த்த நண்பர் சுவிசேஷி ஜெபக்குழுவின் நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தயவுக் கூர்ந்து இந்த புதுப்பிப்பை அனைத்து ஆதரவாளர்களுடனும் பகிர்ந்து கொள்ளுங்கள். மேலும் உங்கள் தொடர்ச்சியான மற்றும் தியாகமான ஆதரவை ஜெபத்தோடு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பணித்தள விஜயம் & ஆலயப் பிரதிஷ்டை







தூத்துக்குடி வட பிராந்தியம் சார்பாக 17 பேர் கொண்ட குழுவாக 25.09.2025 அன்று அதிகாலை நெல்லையிலிருந்து புறப்பட்டு 27.09.2025 காலை கெர்காம் சென்றடைந்தோம். பின்பு ஜாகிரிபாரி என்ற கிராமத்தில், கோயம் புத்தூரைச் சார்ந்த திரு. டேவிட் ராஜாசிங், தூத்துக்குடி பகுதி திரு. பீட்டர், திரு. தேவசகாயம், திரு. ரத்தினராஜ் ஆகியோர் தூத்துக்குடி சண்முகபுரம் ஜெபக்குழு சார்பாக கட்டப்பட்ட ஆலயத்தை 29.09.2025 அன்று CNI Rev. சஞ்சய் கிறிஸ்டியான் அவர்கள் ஜெபிக்க Rev. I. மெயின்ராஜ் அவர்கள் ஆலயத்தை திறந்து வைத்தார்கள். கல்வெட்டை திரு. பீட்டர் மற்றும் குழுவினராக ஜெபித்து திறந்து வைத்தார்கள். ஆலய ஆராதனையில் திரு. I.K. தாமஸ், அவரது சகோதரர் சிலுவை மற்றும் திருவிருந்துக்கான உபகரணங்களை காணிக்கையாகப் படைத்தார்கள். ஆலயப் பிரதிஷ்டை வைபவம் மிகவும் மங்களகரமாக நடைபெற்றது. சுமார் 500க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். தோளில் தூக்கி வைத்து நடனத்துடன் வரவேற்றது, கனிவான உபசரிப்பு, ஆராதனையை நடத்தும் அழகும் வந்த அனைவரையும் மெய்சிலிர்க்கச் செய்தது. பின்பு மாலையில் தராம்பூர் பணித்தளத்திலுள்ள அம்பேசிபுட்டான், அசூரா ஆகிய ஆலயங்களையும் பார்வையிட்டு இரவு கூடுகைக்காக சில்வாசா பணித்தளத்தில் ஜிர்வல் கிராமத்தின் ஆலயத்திற்கு சென்றோம். மிகுந்த காற்று மழையின் மத்தியிலும் திரளான மக்கள் கூடிவந்தனர். இவர்களின் விசுவாச வாழ்வைப் பார்க்கும்போது அது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

28.09.2025 அன்று சில்வாசா பணித்தளத்திலுள்ள சிக்கல்தா கிராமத்தில் ஆலயம் இல்லாமல் வீட்டில் 80க்கும் மேற்பட்டோர் ஆராதித்த விதம் எங்களை அதிகம் கவர்ந்தது. ஆராதனை முடிந்தபின் 15 பேர், கொட்டும் மழையின் மத்தி யிலும் இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கையிட்டு மந்தையில் சேர்ந்தனர். அந்த

இடத்தில் ஆலயம் கட்டிக்கொடுக்க தீர்மானித்தோம். பின்பு ராந்தா சிறுவர் விடுதிக்குச் செல்லும் பாதையில் வெள்ளம் புரண்டு வாகனத்தை இழுத்து செல்லும் வாய்ப்பு நேரிட்டது. எந்த சேதமும் இல்லாமல் கர்த்தர் பாதுகாத்தார். பின்பு கலோண்டா கிராமத்தில் இரவு 12 மணியளவில் கூடுகையில் பங்குப் பெற்று கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொண்டோம். திரு. தேவசகாயம் மற்றும் குழுவினர் விடுதிகளைச் சந்தித்துக் குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வண்ணம் இனிப்பு மற்றும் ஆலோசனைகளை கூறி ஜெபித்து வந்ததோம். திரு. பீட்டர் (Surya Chapel, Tuticorin) அவர்கள் அனைத்து பிள்ளைகளுக்கும் ஷூஸ் (Shoes) மற்றும் சாக்ஸ் (Shocks) வழங்கி பிள்ளைகளை மகிழ்வித்தார். இப்படிப்பட்ட பணித்தள விஜயத்தின் மூலம் அநேகர் தரிசனத்தோடு மிஷனெரி பணியைச் செய்ய தீவிரமாய் செயல்படுகின்றனர். இவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

Rev. I. மெயின்ராஜ், விரிவுப்பணி செயலர் – தூத்துக்குடி வட பிராந்தியம்



மகிமைக்குள் பிரவேசித்தார்

கோயம்புத்தூர் பட்டணத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழிய வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர் தானைத் தலைவர் திரு. J.P. ஜேக்கப் அண்ணன் அவர்கள். வியாபாரம் செய்து கொண்டே ஊழியத்தையும், மிஷனெரிகளையும் நேசித்தவர். பணித்தள விஜயம் செல்லவும், மிஷனெரிகளை ஊக்குவிக்கவும், பாரத்தோடு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும் மக்களை உற்சாகப்படுத்தினார். அண்ணன் அவர்கள் நமது இயக்கத்தில் மாவட்டத் தலைவராகவும், ஸ்கேன் தலைவராகவும், அதே நேரத்தில் திருச்சி ரோடு, சி.எஸ்.ஐ. கிறிஸ்து நாதர் ஆலயத்தின் செயலராகவும் இருந்தவர்கள். அநேக தலைவர்களை உருவாக்கினவர். பணித்தளத் தேவைகளுக்கென்று குழுக்களை உருவாக்கி செயல்பட வைத்தவர். கோவையில் நடைபெறும் ஒவ்வொரு ஸ்கேன் கூடுகையும் வரலாற்று சிறப்புமிக்கது என்று சொன்னால் அது மிகையாகாது; அதில் அண்ணனுடைய ஈடுபாடும், செயற்பாடுகளும், ஜெபங்களும் முக்கிய பங்காற்றின. அண்ணன் குடும்ப வாழ்வில் தம் மனைவியையும், பிள்ளைகளையும் மிகவும் நேசித்தார். இறுதி மூச்சுவரை சுவிசேஷ வாஞ்சையும், ஆத்தும பாரமும் நிறைந்தவராய் இருந்தார். வயது மூப்பின் காரணமாக 26.02.2026 அன்று தனது உலக ஓட்டத்தை முடித்தார். அவர் விட்டுச்சென்றுள்ள பிள்ளைகள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் அனைவரையும் கர்த்தர் ஆறுதல்படுத்த ஜெபிப்போம்.

Rev. P. டேவிட், தென்னிந்திய விரிவுப்பணி செயலர்

ஆலயப் பிரதிஷ்டை



திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருநின்றவூர் பகுதியைச் சேர்ந்த திரு. ஜெயபாலன் (அலீஸ் ஸ்டோர்ஸ்) அவர்கள் குடும்பத்தின் சார்பாக குஜராத், கப்ராடா பணித்தளத்திலுள்ள பாட்டில்பாடா கிராமத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட ஆலயம் 30.11.2025 அன்று தேவ நாமம் மகிமைப்படும்படி பிரதிஷ்டை செய்யப்பட்டு, திரு. ஜெயபாலன் அண்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த பிரதிஷ்டை விழாவில் 1000க்கும் அதிகமான விசுவாசிகள் கலந்துக்கொண்டனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! அல்லேலூயா!!

திரு. பென்னிங்டன், கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – திருநின்றவூர்

பணித்தள விஜயம்



கடந்த மாதம் 17.02.2026 அன்று திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து 16 பேர் கொண்ட குழுவாக ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள நமது பணித்தளங்களைப் பார்வையிட சென்றோம். 22ஆம் தேதி, திண்டுக்கல் சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயத்தின் சார்பாக கதுவா கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தைப் பிரதிஷ்டைச் செய்ய தேவன் கிருபை செய்தார். கதுவா கிராம விசுவாசிகள் எங்களது கால்களை கழுவி வரவேற்ற விதம் எங்களை நெகிழச் செய்தது. 23ஆம் தேதி சந்தால் மக்களால் மூன்று நாட்கள் நடத்தப்பட்ட கன்வென்ஷன் கூடுகையில் கலந்துகொண்டு தேவனை ஆராதித்தோம். இம்மேளாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். மேளாவில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் அவர்கள் தேவனை ஆராதித்த விதமும், அமைதியாக அமர்ந்திருந்த விதமும், சமையல் செய்த விதமும், வரிசையாக நின்று உணவு பெற்றுச் சென்ற விதமும் எங்களுக்கு மிகுந்த வியப்பை அளித்தது. இது அவர்கள் மத்தியில் தேவன் அருளிய பெரிய மாற்றமாகும். தேவன் இவர்கள் மத்தியில் செய்து வரும் கிருபைகளை நினைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தினோம். இதைத் தொடர்ந்து மால்தோ கிராமத்திற்கு சென்று அவர்களுடன் தேவனை ஆராதித்து வந்தோம். மால்தோ கிராமத்திலும் கலாச்சார முறைப்படி எங்களதுக்

கால்களை கழுவி வரவேற்றார்கள். தொடர்ந்து பர்ஹர்வாவிலுள்ள கல்லறைத் தோட்டத்தில் நமது மறைந்த மிஷனெரிகளின் கல்லறைகளைப் பார்வையிட்டு, பந்தேனியிலுள்ள மால்தோ ஆங்கிலப் பள்ளிக்குச் சென்றோம். கங்குபாடா, சப்பாண்டே சிறுவர் விடுதி மற்றும் சமுதாயக் கல்லூரிக்கும் சென்று பார்வையிட தேவன் உதவி செய்தார். புதிய உற்சாகத்துடன் 27ஆம் தேதி காலை திண்டுக்கல் வந்து சேர தேவன் கிருபை செய்தார். அல்லேலூயா!

அருள்திரு. ஆல்பர்ட் சாமுவேல் – திண்டுக்கல்



பணித்தள விஜயம்

தேவனுடைய பெரிதான கிருபையால் கன்னியாகுமரி மாவட்டம் களியாக்காவிளை பணி மாவட்டத்திலிருந்து 13 பேர் கொண்ட குழுவாக 19.02.2026 முதல் 27.02.2026 வரை மஹாராஷ்டிரா மாநிலம் சித்தாரா பிராந்தியத்தில் 2 நாட்களும், காந்தேஷ் பிராந்தியத்தில் 3 நாட்களும் தங்கி ஊழியங்களில் கலந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். சித்தாரா பிராந்தியத்தில் நவஜீவன் சிறுவர் விடுதியிலும், உமர்தா இம்மானுவேல் ஆலய ஆராதனையிலும், பன்சேமால் பணித்தளத்திலுள்ள பாவ்ரா இன மக்களுக்காகக் கட்டப்பட்ட கலம்பா ஆலயம் பிரதிஷ்டையிலும் கலந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். எங்களோடு இரண்டு நாட்கள் பயணித்த மிஷனெரிகள் விஜயன் & ஜெபா குடும்பத்திற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.

காந்தேஷ் பிராந்தியத்திலுள்ள நந்துர்பார், தலோதா, தட்காவ், ஜீகினி, டுண்ட்லா, கட்கியா, ஓல்பாடா பணித்தள ஆராதனையிலும், காலேப் விடுதி மாணவர்களையும், நட்வாவில் விடுதி மாணவிகளையும் சந்தித்து அவர்களை ஊக்குவிக்கவும் கர்த்தர் உதவி செய்தார். இந்த பிராந்தியத்தில் பெரிய மலைகுன்றுகளும், பள்ளத்தாக்குகளும், கரடுமுரடான ஊசி வளைவுகளும் கொண்ட பகுதிகளில் பயணித்து ஊழியம் செய்யும் மிஷனெரிகள் படும் பாடுகளை அறிந்து, அவர்களுக்காக கண்ணீரோடு ஜெபிக்கும் பாரத்தை தேவன் எங்கள் ஒவ்வொருவருக்கும் தந்தார். மூன்று நாட்களும் எங்களோடு பயணித்த மிஷனெரிகள் ஜுபராஜ் மற்றும் ஷீபா ஜாஸ்பின், எபினேசர் சாமுவேல் மற்றும் ஜோஸ்னா அவர்களுக்காகவும், எங்களை அன்போடு வரவேற்று கவனித்த மிஷனெரிகள் விசுவாசிகளுக்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கின்றோம்.


திரு. I. டேவிட் வின்சர்,
கௌரவ விரிவுப்பணி பிராந்தியச் செயலர் – களியாக்காவிளை

மேச்சேரி பணித்தளம்

சேலம் மாவட்டம் தமிழ் நாடு



தொகுப்பாளர்:
அருள்திரு. ஆர்.ஆர். தர்மராஜ்



அறிமுகம்

மேச்சேரி பணித்தளம் தமிழ் நாட்டின் சேலம் மாவட்டத்திலுள்ள, மேட்டூர் தாலுக்காவிலுள்ள பேரூராட்சி ஒன்றியமாகும். உண்மையில் **"சேலம்"** என்ற பெயர் மலைகளால் சூழப்பட்ட பகுதி என்று பொருள்படும். சேலம் **எஃகு நகரம்** மற்றும் **மாம்பழ நகரம்** என்றும் அழைக்கப்படுகிறது. சேலத்தின் வரலாறு கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்த சேலம் நகரம், பாண்டியர்கள், பல்லவர்கள் மற்றும் விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. 1965ஆம் ஆண்டில் சேலம் மாவட்டமானது தர்மபுரி, சேலம் என இரு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது.

சேலம் புகழ் பெற்ற சுற்றுலா ஸ்தலமான யெர்குலாட் (ஏற்காடு) மலைகளின் அடிவாரத்தில் உள்ளது. சேலம் வெள்ளி கொலுசுகளை உற்பத்தி செய்யும் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாகும். இங்குதான் மேட்டூர் அணை உள்ளது. இந்த மேட்டூர் தாலுக்காவில்தான் மேச்சேரி பேரூராட்சி ஒன்றியம் உள்ளது. மேட்டூர் அணை காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணைகட்டு ஸ்டேன்லி என்பவரால் கட்டப்பட்டது. அவருடைய பெயரிலே **ஸ்டேன்லி நீர்த்தேக்கம்** என்றும் அழைக்கப்படுகிறது. இது தமிழகத்தின் மிகப் பெரிய அணையாகும். இதன் அதிகப்பட்ச உயரம், அகலம் முறையே 214 மற்றும் 171 அடியாகும். இங்கு

இரண்டு நீர் மின் நிலையங்கள் உள்ளன. இந்த அணை 1934ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இவ்வணை கட்டிமுடிக்க 9 ஆண்டுகள் ஆனது. மேட்டூர் அணையில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட்டிருந்தனர். இதில் 9347 கோடி கன அடி தண்ணீர் தேக்கி வைக்கப்படுகிறது

மேச்சேரி: மேச்சேரி பேரூராட்சியில் 19 கிராமங்கள் உள்ளன. 2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 6,330 வீடுகளும், 25,676 மக்கள் தொகையும் இருந்தது. தற்பொழுது 38,300 ஜனத்தொகை கொண்டதாகக் கணிக்கப்படுகிறது. **மேச்சேரி** என்ற பெயர் கன்று கறவைகளை மேய்க்கும் இடம் என்று பொருள்படும். **மேய்ச்சல் ஏரி** என்ற பெயரே பின்நாட்களில் மேச்சேரி என்றானது. மேச்சேரி சாம்ராஜ்பேட்டை பகுதியில் கைத்தறி நெசவு உலகப் புகழ்பெற்றவை. இந்த பகுதியில் இருந்து அனைத்து இந்திய மாநிலங்களுக்கும் பட்டு புடவைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேச்சேரி செம்மறி ஆடுகள் உலக அளவில் மிகவும் பிரசித்திப்பெற்ற ஆடு வகைகளாகும். இவ்வகை ஆடுகளுக்கென்று தனி ஆராய்ச்சி நிலையம் இங்கு உள்ளது.

தொழில்: மேச்சேரியில் ஜின்டால் எஃகு நிறுவனம் தனது மிகப் பெரிய இரும்பு தொழிற்சாலையை (JSW) அமைத்துள்ளது. இதனை சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் இந்த தொழிற்சாலையில் பணிபுரிகின்றனர். மேலும் செங்கல் சூளைகளிலும் விவசாய வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். ஆடு, மாடு மேய்த்தல், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவு தொழிலையும் செய்து வருகின்றனர். 5000க்கும் அதிக மானோர் இந்த நெசவுத் தொழிலை செய்து வருகின்றனர். இங்கு கேழ்வரகு, சோளம், கம்பு, வேர்க்கடலை, தட்டைப்பயிர் போன்ற பயிர்கள் அதிகம் பயிரிடப்படுகின்றன. வியாபாரமே முக்கியத் தொழிலாக காணப்படுகிறது.

மக்கள் இனம்: மேச்சேரி பகுதியில் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களே அதிகம் உள்ளனர். இப்பகுதியில் பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், வன்னியர், வெள்ளாளர், கவுண்டர் மற்றும் ஐயர், தேவாங்க நெசவாளர் போன்ற இன மக்கள் வாழந்து வருகின்றனர்.

இறை வழிபாடு: இப்பகுதியில் 99.26% பேர் இந்துக்களாக உள்ளனர். இஸ்லாமியர்கள் 0.3.% மட்டுமே உள்ளனர். இவர்களுக்கு தொழுகை ஸ்தலங்கள் கிடையாது. கிறிஸ்தவர்கள் 0.2.% பேர் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வேலைக்காக வந்தவர்கள் ஆவர். இவர்கள் மேட்டூரிலுள்ள திருச்சபைக்கு சென்று வருகிறார்கள். தற்போது சி.எஸ்.ஐ. சார்பாக சிற்றாலயம் கட்டப்பட்டு ஆராதனை நடந்து வருகிறது. இப்பகுதியில் கிறிஸ்தவத்திற்கோ மற்ற மதத்திற்கோ யாரும் ஆர்வம் காட்டுவதில்லை. இங்கு குல தெய்வ வழிபாடு அதிகமாக காணப்படுகிறது. மூதாதையர்களின் கோவில்கள் அதிகமாக உள்ளன.

பணித்தள ஆரம்பம்: மேச்சேரி பணித்தளம் 20 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு, ஆத்தும ஆதாயப் பணியில் தொய்வு ஏற்படவே பணித்தளம் மூடப்பட்டது. மேலும் 12 வருடத்திற்கு பின்பு 2021 ஆகஸ்டு மாதம் முதல் நாங்கள் குடும்பமாக இப்பணித்தளத்தில் ஊழியத்தைத் துவங்கினோம். மேச்சேரியை சுற்றியுள்ள பகுதிகளில் 10க்கும் மேலான கிராமங்களைச் சந்தித்து சுவிசேஷம்

அறிவித்து வருகிறோம். சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் குடும்பங்களை சந்தித்து ஜெபித்து வருகிறோம். இவர்கள் அனைவரும் ஒன்றாய்க்கூடி ஜெபிக்க விருப்பம் காட்டுவதில்லை.

ஊழிய அணுகுமுறைகள்: தனி நபர் சுவிசேஷம், இல்லங்கள்தோறும் சுவிசேஷம், புதிய கிராம சந்திப்பு மற்றும் வாஞ்சை காட்டுவோரை சந்தித்து ஜெபித்தல், குழுவாக சந்தித்தல் போன்ற ஊழிய அணுகுமுறைகளை பின்பற்றி வருகிறோம்.

ஊழியத்தின் சவால்கள்

- சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள தடையாகவுள்ள பயம், எதிர்ப்புகள், குடும்பத்தில் புறக்கனிப்பு போன்றவை நீங்க...
- மூட நம்பிக்கை மற்றும் விக்கிரக வணக்கத்திலிருந்து மக்கள் விடுதலைபெற...
- சுவிசேஷத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைய, எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட...
- இப்பகுதியில் ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்க காணப்படும் தடைகள் நீங்க...
- ஜாதி, இன வேற்றுமைகள் நீங்கி விசுவாசிகள் யாவரும் ஒன்றுக்கூடி தேவனை ஆராதிக்க...
- இப்பணித்தளத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிடவும், திரளானோர் நற்செய்திக்கு செவிசாய்க்கவும், இயேசுவே மெய்யான தெய்வ மென்பதை அறிந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

நிதி அலுவலகத்திலிருந்து

இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

ICICI Bank UPI ID: fmpb@icici

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

தொடர்பு கொள்ள: **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.



மகிமைக்குள் பிரவேசித்தார்

திரு. A.S. ஜேம்ஸ் ஹாரிசன் அண்ணன் அவர்கள் கடந்த 55 ஆண்டுகளாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில், ஈரோடு பணிமாவட்டத்திலுள்ள பள்ளிப்பாளையம் ஜெபக்குழுத் தலைவராக செயல்பட்டு வந்தார். இவர்கள் வன அதிகாரியாக பணி யாற்றிய காலத்திலிருந்தே FMPB ஊழியத்தில் அதிக ஈடுபாடுடன் பணியாற்றி அநேக இளம் தலைவர்களை உருவாக்கியுள்ளார். இவர் உருவாக்கின தலைவர்களில் அநேகர் தற்போது முன்னேற்றப் பணி செயலர்களாக பொறுப்பேற்று சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். நேர் முழங்களில் நின்று ஜெபிக்கும் பழக்கமுடைய இவரின் மூலம் அநேகர் ஜெபிக்கக் கற்றுக்கொண்டுள்ளனர். எங்கு சென்றாலும் நடந்தே சென்று ஊழியம் செய்யும் இவர், பள்ளிப்பாளையம் ஜெபக்குழுவின் மூலம் அநேகரை மாநில முகாமிற்கு அழைத்து வந்து மிஷனெரி ஊழியத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இவ்வாறாக தன்னுடைய இறுதி மூச்சுவரை தேவனுடைய ஊழியத்தை செய்து வந்தார். மூப்பின் காரணமாக 94ஆம் வயதில் தன்னுடைய ஓட்டத்தை முடித்து தேவ ராஜ்யம் சென்றுள்ளார். அண்ணன் விட்டுச் சென்ற ஆறு மகள்கள் மற்றும் ஒரு மகனின் குடும்பங்களுக்கு தேவன் ஆறுதலளிக்க ஜெபிப்போம்.

ஈரோடு பணி மாவட்டத் தலைவர்

மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. சாமுவேல் பாண்டியன் (வயது 42) அவர்கள், ஆவடி பிராந்தியத்திலுள்ள கோவில்பதாகை பகுதியில் கடந்த 18 ஆண்டுகளுக்கு மேலாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் தன்னை இணைத்துக்கொண்டு, தானும் தன்னுடைய குடும்பத்தாரும் இணைந்து தேவ ராஜ்யக் கட்டுமானப் பணிக்காக வீடுகள் தோறும் காணிக்கை சேகரிப்பதிலும், ஜெப குழுக்களை நடத்தி வருவதிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். இவர் கடந்த 06.03.2026 அன்று பணியில் இருக்கும்போது மாரடைப்பின் காரணமாக இவ்வுலக ஓட்டத்தை முடித்து தேவ ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். இவர் விட்டுச் சென்றுள்ள மனைவி மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகளுடைய எதிர்காலத்திற்காகவும், அவர்களுடைய குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும் ஜெபிப்போம்.

திரு. ஜான் டிக்சன், கௌரவ விரிவுப்பணி செயலர் – ஆவடி பிராந்தியம்

மணியம்பாடி ஆலய வரலாறு

மரக்கட்டா கிளஸ்டர்

தேன்கனிக்கோட்டை, தமிழ்நாடு



எழுதியவர்: திருமதி. டி. ஆக்னஸ் எட்வர்ட்

பொதுவான தகவல்கள்

மணியம்பாடி கிராமம், தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தேன்கனிக் கோட்டை தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த கிராமத்தில் இந்து மதம் முக்கிய மதமாக பின்பற்றப்படுகிறது. மணியம் பாடி கிராமத்தில் சுமார் 250 குடும்பங்கள் வசிக்கின்றனர். கிராம மக்களில் பெரும்பாலானோர் விவசாய கூலி வேலை செய்யும் தினக் கூலி தொழிலாளர்கள் ஆவர். இந்த கிராமத்தின் மக்கள் தொகையில் ஆசாரி, வன்னியர், ஆதி திராவிடர், லிங்காயத்து, பலிஜா நாயுடு ஆகிய சமூகங்களைச் சேர்ந்த மக்களும், முகமதியர்களும் அடங்குவர்.

தேவாலயத்தின் ஆரம்பம்

தேன்கனிக்கோட்டை பணித்தளம் ஏப்ரல் 1983இல் தொடங்கப்பட்டது. திரு. வி. தாமஸ் & திருமதி. வசந்தா தாமஸ் இப்பணித்தளத்தில் ஊழியம் செய்த முதல் மிஷனெரி குடும்பத்தினர் ஆவர். 1987இல் இருதுக்கோட்டையைச் சேர்ந்த டாக்டர் ஜாண்சன் அவர்களை தேவன் பயன்படுத்தி, ஒரு அற்புத சுகமளிப்பின் மூலம் மணியம்பாடி கிராமத்திற்கு நற்செய்தி யைக் கொண்டுவந்தார். மணியம்பாடியில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட முதல் நபர் ஒரு இந்து கோயில் பூசாரியான திரு. சாக்கப்பா ஆவார். ஞானஸ்நானம் பெறும்போது அவருக்கு சாமுவேல் சாக்கப்பா என்று மறுபெயர் சூட்டப்பட்டது.

திரு. சாமுவேல் சாக்கப்பாவின் சாட்சி:



மணியம்பாடியைச் சேர்ந்த கோயில் பூசாரியான திரு. சாக்கப்பாவின் மகன் பென்னாகரத்தில் படித்துக்கொண்டிருந்த போது அசுத்தாவியினால் அலைக் கழிக்கப்பட்டு வந்தான். இவர் தனது மகனுக்காக பல பூஜைகள், மந்திரங்கள் செய்தபோதிலும் அவனது நிலைமை மிகவும் மோசமடைந்தது. எனவே டாக்டர்

ஜாண்சனின் ஆலோசனையின் பேரில் படுத்தபடுக்கையாக இருந்த தனது மகனை பேருந்தில் இருதுக்கோட்டைக்கு அழைத்துச் சென்றார். பயணத்தின் போது மகனது சுவாசம் நின்றுவிட்டது. இருப்பினும் மருத்துவர் அவனுக்கு சிகிச்சை அளித்து, குடும்பத்தினரை காத்திருக்குமாறு கூறினார். அன்று இரவு ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் தேவன் இவரது மகனுக்கு அற்புதமாய் ஜீவனைத் தந்தருளினார். மறுநாள் காலை அவரது மகன் முழுமையாக குணமடைந்து எழுந்து நடந்தான். இந்த அற்புதத்தால் நெகிழ்ந்த சாக்கப்பா சிலை வழிபாட்டை கைவிட்டார். ஒரு புதிய எற்பாட்டை பெற்றுக்கொண்டு நற்செய்தியைக் கேட்ட இவர் தனது குடும்பத்துடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். சுதேச ஊழியரான திரு. பேதுரு முனியப்பா மூலம் இக்குடும்பம் ஆவிக்குரிய வாழ்வில் வழிநடத்தப்பட்டு, பஞ்சப்பள்ளி அணையில் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் இணைந்தனர்.

ஆராதனை தொடக்கம்

முதல் விசுவாசி ஞானஸ்நானம் பெற்ற பிறகு திரு. பேதுரு முனியப்பா மூலம் செப்டம்பர் 1987இல் மணியம்பாடியில் ஆராதனைக்குழு தொடங்கப்பட்டது. படிப்படியாக மற்ற கிராமவாசிகள் பலரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். திரு. சாமுவேல் சாக்கப்பாவின் சகோதரர்களின் குடும்பங்களும், அவரது மருமகன் திரு. டேனியல் மாதுவின் குடும்பமும் விசுவாசத்திற்குள் வந்தனர்.

சபை வளர்ச்சி

விசுவாசிகளின் உறவினர்களும், சகோதர சகோதரிகளும் தேவனால் சந்திக்கப்பட்ட தின் மூலம் மணியம்பாடி சபை வளர்ந்தது. சபையின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க மற்றொரு காரணி, இருதுக்கோட்டையின் டாக்டர் ஜாண்சனின் குணமாக்கும் ஊழியமாகும்.

சில விசுவாசிகளின் சாட்சிகள்

திரு. டேனியல் மாது:



திரு. டேனியல் மாது, குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு கடுமையான வறுமையுடன், பல குடும்பப் பிரச்சனைகளையும் சந்தித்து வந்தார். அச்சமயம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அவரது மாமனார் அவருக்கு நற்செய்தியை அறிவித்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதைப் பற்றியும், கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்தும் அவருக்கு விளக்கினார். பின்னர் டேனியல் மாது கிறிஸ்துவை விசுவாசித்து திரு. பேதுரு முனியப்பா மூலம் ஞானஸ்நானம் பெற்றார்.

திரு. ஆண்ட்ரூ சாலப்பா:

வாலிபனான ஆண்ட்ரூ சாலப்பா தனது கிராமத்தில் விநியோகிக்கப்பட்ட கைப்பிரதி யின் மூலம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டார். அச்சமயம் அவர் டைபாய்டு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார். கிராம மக்கள் அவருக்கு பேய் பிடித்திருப்பதாக தவறாக புரிந்துகொண்டனர். அவர் மந்திரவாதிகளிடம் அழைத்துச் செல்லப்பட்டு மையிடுதல் மற்றும் தாயத்துகளுக்கு உட்படுத்தப்பட்டார். சிறிதும் குணமாகாததால் அவரை இருதுக்கோட்டைக்கு டாக்டர் ஜாண்சனிடம் அழைத்துச்சென்றபோது அவரது

நிலைமை கவலைக்கிடமாக இருந்தது. மிஷனெரி திரு. ராஜன் ஆண்ட்ரூஸ் மருத்துவமனையில் அவரை சந்தித்து தேவனின் வல்லமையைக் குறித்து அவருடன் பேசி அனைத்து தாயத்துக் களையும் அகற்றியப் பிறகு அவருக்காக ஊக்கத்துடன் ஜெபித்தார். ஒரு வாரத் திற்குள் பூரண சுகம்பெற்ற அவர் ஏழாம் நாளில் மாரண்டஹள்ளியில் நடைபெற்ற ஞானஸ்நான ஆராதனையில் கலந்துகொண்டு 1990இல் திரு. வி. தாமஸ் அவர்களிடம் ஞானஸ்நானம் பெற்றார். அந்நாட்களில் அவரது கிராமத்தில் 62 மாணவர்களுடன் துவங்கப்பட்ட முதியோர் கல்வி திட்டத்தில் இவர் இணைந்தார். ஆனால் அது பாதியில் நிறுத்தப்பட்டதால் திரு. ஆண்ட்ரூ சுயமுயற்சியுடன் வேதாகமத்தை வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

திரு. நஹான்:

முதல் விசுவாசியின் உறவினரான திரு. நஹான் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் திருமணங்களில் மேளம் வாசிப்பவராக பணிபுரிந்தார். இவர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். இவருடைய பெற்றோரும், சகோதர சகோதரிகளும் விசுவாசிகளாக இருந்தபோதிலும், அவர்களின் தொடர்ச்சியான ஆலோசனை களை இவர் புறக்கணித்து வந்தார். இரண்டு ஆண்டுகளாக 41 நாட்கள் இருமுடி சுமந்து சபரிமலைக்கு யாத்திரை மேற்கொண்டார். ஆனாலும் இவருக்கு இருந்த கடன் பிரச்சனை தீரவில்லை. மூன்றாவது ஆண்டில் மலையேறும்போது இவருடைய இருமுடி 15 மீட்டர் பள்ளத்தில் விழுந்தது. ஆனால் இவர் எவ்வித பாதிப்பு மின்றி தப்பிப் பிழைத்தார். எனவே இவர் சிலை வழிபாட்டை நிராகரித்து இயேசு கிறிஸ்துவே தெய்வமென்று உணர்ந்து கொண்டார். கிராமத்திற்குத் திரும்பிய இவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொண்டு பஞ்சப்பள்ளி அணையில் ஞானஸ்நானம் பெற்றார். முன்பு மிகவும் வறுமையில் தவித்த இவரது குடும்பத்தை பின் நாட்களில் தேவன் அதிகமாய் ஆசீர்வதித்தார்.

திருமதி. தபித்தாள்:

தபித்தாள் என்று பெயரிடப்பட்ட திருமதி. கனகா ஓசள்ளி கிராமத்தில் கிறிஸ்துவை அறியாத குடும்பத்தில் பிறந்தவராவார். மணியம்பாடியைச் சேர்ந்த ஒரு கிறிஸ்த வரை மணந்த இவர் திருமணத்திற்குப் பின் எப்படி ஜெபிக்க வேண்டும் என்று போதகர் ஆண்ட்ரூஸ் மூலம் கற்றுக்கொண்டார். ஜெபிக்கும் வேளையில் தேவனுடைய பிரசன்னத்தை உணர்ந்தார். வேதத்தைப் படித்ததின் மூலம் இயேசு கிறிஸ்து ஒருவரே தேவன் என்று விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார். தேவன் இரண்டு மகள்களைத் தந்து இவர்களது குடும்பத்தை ஆசீர்வதித்தார். பின்னர் அதிகாலை 3-4 மணிவரை ஜெபிக்கும் பழக்கத்தின் மூலம் தேவன் இவருக்கு ஒரு மகனைத் தந்து தமது வாக்குத்தத்தை நிறைவேற்றினார்.

திரு. யுவராஜ்:



திரு. யுவராஜ் ஆரம்பத்தில் ஜெபக் கூட்டங்களை கேலி செய்வதற்காகவே அதில் கலந்துகொண்டார். இருப்பினும் மூன்றாவது வாரத்தில் அவர் உண்மை யாகவே ஜெபிக்க ஆரம்பித்தார். பின்னர் குடும்ப எதிர்ப்பையும் மீறி 2012இல் திரு.

ஜேம்ஸ் என்பவரால் ஒரு கிராமக் கிணற்றில் ஞானஸ்நானம் பெற்றார். மது உட்பட அனைத்து கெட்டப் பழக்கங்களிலிருந்தும் தேவன் அவருக்கு விடுதலை அருளினார்.

நவஜீவன் சேவா மண்டல் (NSM): நவஜீவன் சேவா மண்டலத்தின் மூலம் சாலைகள் அமைத்தல், ஆடுகள் மற்றும் மரக்கன்றுகள் விநியோகித்தல், பள்ளிகளை நடத்துதல், ஆடைகள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்ற சமூகப் பணிகள் மூலமாகவும் சபை வளர்ந்தது. சிலர் சொந்த பலன்களுக்காக சபையில் சேர்ந்து பின்னர் விலகிச் சென்றாலும், தற்போதைய சபை மக்கள் கர்த்தரை உண்மையாக ஆராதித்து வருகிறார்கள்.

ஆலய நிலம்: ஆலயம் கட்டுவதற்காக 15 சென்ட் அளவுள்ள நிலம் 1989, ஏப்ரல் மாதம் ரூ.50/-ஐ முன்பணமாகச் செலுத்தி வாங்கப்பட்டது. அச்சமயம் திரு. பேதுரு முனியப்பா மற்றும் மிஷனெரி திரு. ராஜன் ஆண்ட்ரூஸ் அப்பகுதியில் ஊழியம் செய்து வந்தனர்.

சபை மற்றும் சமூகம்: ஆரம்ப காலத்தில் அலஹள்ளி, சமந்தக்கோட்டை, பிக்கனப்பள்ளி மற்றும் எல்லூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஆராதனையில் கலந்துகொண்டனர். சாதிப் பிரச்சனைகளின் காரணமாக அநேகர் ஆராதனையில் கலந்துகொள்வதை விட்டுவிட்டனர். தற்போது மணியம்பாடி கிராம மக்கள் மட்டுமே ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். அனைத்து விசுவாசிகளும் ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயக் கட்டுமானப்பணி: புனித ஆண்ட்ரூஸ் தேவாலயம் 40×20 அடி அளவுடையது. அதன் சுவர்கள் மண்ணினாலும், மேற்கூரை ஓடுகளால் வேயப்பட்டதாயும் இருந்தது. எந்தவித எதிர்ப்பும் இன்றி உள்ளூர் விசுவாசிகளின் உழைப்பால் கட்டுமானம் மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆலயம் 12.04.1990 அன்று தேவனுடைய நாம மகிமைக்காக அர்ப்பணிக்கப்பட்டது. இதில் கிராம மக்கள் அனைவரும் கலந்துகொண்டனர். பின்னர் 2000ஆம் ஆண்டில் ஆலயத்தின் மேல் கூரை ஆஸ்பிரா ஷீட்டாக மாற்றப்பட்டது.

ஆலய ஒழுங்குகள்: ஆலய மூப்பர்களாக திரு. சாமுவேல் சாக்கப்பா மற்றும் திரு. ஆண்ட்ரூ சாலப்பா ஊழியம் செய்து வருகின்றனர். மாதம் ஒருமுறை நடத்தப்படும் இரவு கூட்டத்தில் சுமார் 25-30 பேர் கலந்துகொண்டு தேவனை ஆராதித்து வருகின்றனர். இதை திரு. ஆண்ட்ரூ சாலப்பா நடத்தி வருகிறார்.

ஜெபக் குறிப்புகள்

- கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் ஞாயிற்று கிழமைகளில் தனிப்பயிற்சி வகுப்புகளை நடத்தி, குழந்தைகள் ஆராதனைக்குச் செல்வதைத் தடைசெய்து வருகின்றனர். எதிர்ப்பாளர்களின் இருதயங்களில் தேவன் இடைபட...
- சாதிப் பிரச்சனைகளின் காரணமாக மற்ற கிராம மக்கள் மணியம்பாடி கிராம விசுவாசிகளுடன் இணைந்து தேவனை ஆராதிக்க மறுக்கின்றனர். இந்நிலை மாறவும், அனைவரும் இணைந்து ஒருமனதுடன் தேவனை ஆராதிக்கவும்...
- திருச்சபை மற்றும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், இத் திருச்சபையை மிகுந்த கனிகளால் தேவன் ஆசீர்வதிக்கவும்...
- இங்கு ஊழியம் செய்யும் ஊழியர்களை தேவன் தமது வல்லமையினால் நிரப்பி ஊழியத்தில் பயன்படுத்த ஜெபிப்போம்.



ஓர் உண்மை கிறிஸ்தவனின் கடந்த காலம் கிறிஸ்துவின் இரத்தத்தால் மன்னிக்கப்பட்ட காலம்! அவனது நிகழ்காலம் கிறிஸ்துவின் சித்தப்படி நடத்தப்படும் காலம்! அவனது வருங்காலம் கிறிஸ்து அவன் மூலம் மகிமை அடையும் காலம்! இதைத்தான் சங். 18:35இல் கற்றுக்கொண்டோம்.

- "உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் **தந்தீர்!**
- உம்முடைய வலது கரம் என்னைத் **தாங்குகிறது!**
- உம்முடைய காருண்யம் என்னைப் **பெரியவனாக்கும்!**"

தந்தீர் – கடந்த காலம்

தாங்குகிறது – நிகழ்காலம்

பெரியவனாக்கும் – வருங்காலம்

கடந்த காலம் மன்னிக்கப்பட்டது

கடந்த காலத்தில் இழைத்த பிழைகள் உங்களை கலங்கப்பண்ண வேண்டாம். பாவம் செய்யாத மனிதன் இல்லையே என சாலமோன் தேவாலய பிரதிஷ்டையின் போது ஜெபித்தான் (1 இராஜா. 8:46). கடந்த காலத்தில் தேவனுக்கு விரோதமான பாவத்தைச் செய்திருந்த தாவீது கூறுகிறார். "உமது இரட்சிப்பின் கேடகத்தை எனக்குத் தந்தீர்".

பாவம் செய்தேன் – மன்னிப்பு தந்தீர்!

கடந்த காலத்தில் நீங்கள் செய்த பாவங்கள், துரோகங்கள், அக்கிரமங்கள் அனைத்தையும் சுட்டிக்காட்டி பிசாசானவன் ஓர் அம்பு போல உங்கள் மனசாட்சியினைக் குத்திவிடாதபடி தடுப்பதே இரட்சிப்பின் கேடகம். அந்த கேடகம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே ஆகும்.

"பிதாவே நான் தவறு செய்யவில்லை எனக் கூறவில்லை, கடந்த காலத்தில் நான் செய்த எல்லாவிதமான தப்பிதங்களையும் இயேசு சிலுவையில் எனக்காக சிந்தின இரத்தத்தினால் மன்னியும் என்று கெஞ்சுகிறேன்" என்று விசுவாசத்துடன் ஓர் மனிதன் தேவனை நோக்கி ஜெபித்த உடனே அவன் கடந்த காலத்தில் செய்த எல்லா பாவங்களையும் இயேசு மன்னித்துவிடுகிறார். அவனது பாவங்கள் அவனைத் தொடர்ந்து பிடிப்பதில்லை. அதற்கு பதிலாக நன்மையும், கிருபையும் அவனைத் தொடரும்.

"உமக்கு பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு" என்று சங்கீதம் 130:4 கூறுகின்றது. எனவே கடந்த காலங்களைக் குறித்து

நீங்கள் வருந்தவேண்டாம். ''என் பாவத்தினால்தான் என் குடும்பத்தில் இப்படியெல்லாம் நடந்துவிட்டது" எனக் கூறவேண்டாம். என் பாவத்தை இயேசு மன்னித்துவிட்டார், ஸ்தோத்திரம் என்று கூறுங்கள்.

நிகழ் காலம் வழிநடத்தப்படுகிறது

இரட்சிப்பைத் தந்தவர் தாங்குகிறவராக இருக்கிறார்.

ஒவ்வொரு நாளும் அந்த நாளின் தேவைக்குத் தக்கதான ஞானம், பெலன், வல்லமை தந்து தமது வலது கரத்தினால் தேவன் உங்களைத் தாங்குவார். ஓர் சிறந்த வாழ்வு **அன்றன்றுள்ள அப்பத்தை** மட்டுமே நாடும் வாழ்வு. நாளைய தினத்தில் என்னை எப்படிப்பட்ட மனிதர்கள் சந்திக்க இருக்கிறார்களோ, எத்தனை மேடுகளில் நான் ஓடவேண்டுமோ நான் அறியேன். ஆனால் ஒன்றே ஒன்று எனக்குத் தெரியும் உம்முடைய வலது கரம் என்னைத் தாங்கும்.

"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே நான் உன் தேவன், நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்'' (ஏசா. 40;10). ஆம் அதுவே ஓர் உண்மை கிறிஸ்தவனுக்கு இன்று கொடுக்கப்படும் தேவனின் வாக்குத்தத்தம்.

மனிதனின் கடந்த கால பாவங்களை மன்னிக்க அதிகாரம் பெற்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறியாதவர்கள் இன்று எப்படியோ, நாளை எப்படியோ என பதட்டத்துடன் வாழ்வார்கள். காரணம் அவர்களுக்கு இரட்சிப்பின் கேடகம் இல்லை.

ஆனால் உங்கள் கடந்த கால எல்லா தவறுகளையும் இயேசுவின் இரத்தம் மன்னித்துவிட்டது. தீங்கு உங்கள் கூடாரத்தை அணுகுவதில்லை. ஏனென்றால் வல்லமையுள்ள தேவனின் வலது கரம் உங்களை இன்று தாங்குகிறது.

வருங்காலம் மகிமையாக அமையும்

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் அடைக்கலம் பெற்ற எந்த மனிதனும் பெரியவனாவான். கல்வியில் பெரியவனாவான், தொழிலில் பெரியவனாவான், பொருளாதாரத்தில் பெரியவனாவான், அவனது பிள்ளைகள், அவர்களது சந்ததி மிகப் பெரியவர்களாவார்கள்.

"என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்" என்றவர் வாக்குமாறாதவர். பொய் உரைக்காதவர். எனவே இனிவரும் காலங்கள் அனைத்தும் இயேசுவின் அடைக்கலம் பெற்ற உங்களுக்கு இனிமையாகவே இருக்கும். தேவ சமாதானத்தையும், இரட்சிப்பின் சந்தோஷத்தையும் எதுவும் உங்களைவிட்டு எடுக்கமுடியாது.

அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். எதிர்ப்பும், வரவேற்பும், கைவிடப்படுதலும், ஏற்றுக்கொள்ளப்படுதலும், இன்பமும், துன்பமும் எதுவந்தாலும் அது என்னை பெரியவனாக்கவே இடம்பெறும் என்று அறிவேன்.

- நாளைய தினம் நமக்குத் தெரிவதில்லை
- நாளைய தினத்தை அறிந்தவரை நமக்குத் தெரியும்
- அவர் ஜீவனுள்ள தேவன்
- அவர் உங்களைப் பார்த்து கூறுகிறார்: ''தாயின் வயிற்றில் தோன்றியது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படி செய்து வந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், நான் தப்புவிப்பேன்" (ஏசா. 46:3-4).

இரட்சிப்பின் கேடகம் தந்தீர் – கடந்த காலம்

உம்முடைய வலது கரம் என்னைத் தாங்குகிறது – நிகழ் காலம்

உம்முடைய காருண்யம் என்னைப் பெரியவனாக்கும் – வருங்காலம்

எனவே கடந்த கால சிந்தனைகள் கனத்த சிந்தனைகளாக வேண்டாம். இன்றைய தினத்தின் எண்ணங்கள் பதட்டம் தரவேண்டாம். இயேசுவின் வலது கரம் இன்று உங்களைத் தாங்குகிறது. நாளைய தினத்தில் நீங்களும், உங்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும் மிகப் பெரியவர்களாக இருப்பீர்கள்.

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரும், மனிதர்களின் பாவங்களை மன்னிக்க அதிகாரம் பெற்றவருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இதை உங்களுக்குக் கட்டளையிடுவார்!

திரு. எமில் ஜெபசிங்
(அறைகூவல் 1992 பிப்ரவரி மாத இதழிலிருந்து எடுக்கப்பட்டது).

காலச் சுவடுகள்



மார்க் டேனியல் பன்டைன்
(1923 - 1989)

இந்தியாவில் ஏழைகளுக்கு சேவை செய்த ஒரு மிஷனெரி

மார்க் டேனியல் பன்டைன் ஒரு அர்ப்பணிப்புள்ள மிஷனெரி ஆவார். அவருடைய வாழ்க்கை ஏழைகள் மற்றும் தேவையுள்ளவர்கள் மீது கிறிஸ்து கொண்டிருந்த ஆழ்ந்த இரக்கத்தைப் பிரதிபலிக்கிறது. இவர் ஜனவரி 26, 1923 அன்று கனடாவின் மனிடோபா மாகாணத்தில் உள்ள பின்னிபெக் நகரில், ஒரு பெந்தேகோஸ்தே போதகரின் குடும்பத்தில் பிறந்தார்.

சிறுவயது முதலே மார்க் மிஷனெரி கதைகளால் ஈர்க்கப்பட்டார். மேலும் தனது வாழ்க்கையை **தேவனுக்கு சேவை செய்வதற்காகவே** அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஒரு தீவிரமான விருப்பத்தை வளர்த்துக்கொண்டார்.

இவர் வானொலி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தபோது தேவனின் உறுதியான அழைப்பைப் பெற்றார். எனவே தனது பணியை விட்டுவிட்டு முழுநேர ஊழியத்திற்குச் செல்ல தன்னை அர்ப்பணித்தார். ஹுல்டா மன்றோவை மணந்த பிறகு இவர் வானொலிப் பணியிலிருந்து விடுபட்டு, கனடாவின் சஸ்காட்செவனில் ஒரு போதகராகப் பணியாற்றினார். பின்னர் தைவான், இலங்கை, பிலிப்பைன்ஸ், ஹாங்காங் மற்றும் ஜப்பான் உட்பட பல நாடுகளில் ஒரு மிஷனெரி சுவிசேஷகராக ஊழியம் செய்த இவர் வெவ்வேறு கலாச்சார ஊழியத்தில் மிக சிறந்த அனுபவத்தைப் பெற்றார்.

இந்தியாவுக்கான தேவனின் அழைப்பு

1954ஆம் ஆண்டு தேவனின் தெளிவான அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து மார்க்கும், ஹுல்டா பன்டைனும் தங்கள் ஒரு வயது மகள் போனியை கைகளில் ஏந்தியபடி, மூன்றுமாத கடல் பயணத்திற்குப் பிறகு இந்தியாவின் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தனர். இந்தியாவில் ஏழைகளுக்கு சேவை செய்வதற்காக ஒரு வருடம் மட்டும் செலவிடுவதுதான் இவர்களின் ஆரம்ப நோக்கமாக இருந்தது. ஆனால் இவர்கள் ஒரு மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டனர். அந்த ஒரு வருட அர்ப்பணிப்பு விரைவில் வாழ்நாள் முழுவதும் நீடித்த ஒரு தியாகமான சேவையாக மாறியது.

இவர்கள் தங்கள் ஊழியத்தை ஒரு எளிய முறையில் தொடங்கினர். தங்களுக்கென ஒரு கூடாரத்தை அமைத்து, இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பிரசங்கித்தனர். ஒருமுறை இவரது பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு மனிதர் மார்க்கின் பேச்சை இடை மறித்து, போதகரே! முதலில் எங்கள் வயிற்றுக்கு உணவளியுங்கள், பிறகு பரலோகத்தில் எங்களை நேசிக்கும் கடவுளைப் பற்றி எங்களுக்குச் சொல்லுங்கள் என்றார். இந்த வார்த்தைகள் மார்க்கின் இதயத்தை துளைத்து, ஊழியம் பற்றிய இவரது புரிதலை மாற்றியது. நற்செய்தியை வார்த்தைகளால் மட்டுமல்ல, இரக்க முள்ள செயல்களாலும் வெளிப்படுத்த வேண்டும் என்பதை இவர் உணர்ந்தார்.

கல்கத்தா மெர்சி மிஷனின் பிறப்பு

இந்த திருப்புமுனையான தருணம் 1964இல் கல்கத்தா மெர்சி மிஷன் நிறுவப்படுதற்கு வழிவகுத்தது. இந்த மிஷன் பசியுள்ளவர்களுக்கு உணவளித்தல், ஏழைகளுக்கு கல்வி அளித்தல் மற்றும் நோயுற்றவர்களுக்கு மருத்துவ பராமரிப்பு வழங்குதல் போன்ற முழுமையான ஊழிய அணுகு முறைகளைக் கையாண்டது. தேவனால் அருளப்பட்ட இந்த தரிசனத்தின் கீழ் கல்கத்தாவில் அசெம்பிளி ஆஃப் காட் சர்ச் பள்ளி நிறுவப்பட்டது. இது ஆயிரக்கணக்கான பின்தங்கிய குழந்தைகளுக்கு கல்வியையும், நம்பிக்கையையும் வழங்கியது. மேலும் ஒரு சிறிய மருத்துவமனையும் நிறுவப் பட்டது. அது பின் நாட்களில் ஒரு பன்முக சிறப்பு மருத்துவமனையாக வளர்ந்து

எண்ணற்ற மக்களுக்கு சுகத்தையும், ஆறுதலையும் அளித்தது.

ஊழியத்தின் வளர்ச்சியும், விரிவாக்கமும்

மார்க் டேனியல் பன்டைன் பல ஆண்டு களாக கல்கத்தாவிலுள்ள அசெம்பிளி ஆஃப் காட் சர்ச்சின் போதகராகப் பணியாற்றினர். அந்த சபை வட இந்தியா முழுவதும் சபை நிறுவுதல் மற்றும் ஊழியத்திற்கான ஒரு மையமாக மாறியது. இந்த ஊழியத்தின் மூலம் 900க்கும் மேற்பட்ட சபைகள் நிறுவப் பட்டன. இவர் இந்தி, ஆங்கிலம் மற்றும் பெங்காலி மொழிகளில் வானொலி நிகழ்ச்சிகள் மூலம் நற்செய்தியை ஒலிபரப்பி, இந்தியா மற்றும் அதற்கு அப்பாலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் சுவிசேஷத்தை கேட்கும்படி செய்தார்.

துணிச்சலான ஹேல்டா பன்டைன் - நிலைத்து நிற்கும் ஒரு மரபு

ஜூன் 4, 1989 அன்று தனது கணவர் மார்க் பன்டைனின் திடீர் மரணத்திற்குப் பிறகு, ஹேல்டா பன்டைன் துணிச்சலுடன் கல்கத்தாவிலேயே தங்கி, அவர்கள் இருவரும் சேர்ந்து உருவாக்கிய ஊழியத்தையும், தரிசனத்தையும் தொடர தன்னை அர்ப்பணித்தார். பெரும்பாலும் ஆண்களால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு சமூகத்தில், ஹேல்டா வலிமை யான, துணிச்சலான மற்றும் விசுவாசம் நிறைந்த தலைமைத்துவத்திற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

அவரது தலைமையில் கல்கத்தா மெர்சி ஊழியம் உலகளவில் விரிவடைந்தது. இப்போது 21க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு, ஏழைகளுக்கு அன்பு, கண்ணியம் மற்றும் கருணையுடன் சேவை செய்து வருகிறது. இன்று இவர்களின் மகள் போனி, மற்ற குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஒரு சர்வ தேசக் குழுவினருடன் இந்த ஊழியத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். போனி ஒரு பதிவு பெற்ற செவிலியர் ஆவார். இவரது கணவர் ஜிம் ஒரு மார்பக அறுவை சிகிச்சை நிபுணர் ஆவார். இவர்களின் தொழில் முறை நிபுணத்துவமும், கருணையான வளர்ப்பும் மெர்சி மருத்துவமனையின் தற்போதைய ஊழியத்தில் அவர்களை விலைமதிப்பற்ற பங்காளிகளாக ஆக்கியுள்ளன.

முடிவுரை

மார்க் டேனியல் பன்டைனின் வாழ்க்கை, கடவுளின் அழைப்பிற்குக் கீழ்ப்படிவதற்கும், செயல்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் விசுவாசத் திற்கும் ஒரு வலிமைமிக்க சான்றாகத் திகழ்கிறது. அவர் நற்செய்தியை பிரசங்கித்தது மட்டுமல்லாமல் பசியுள்ளவர்களுக்கு உணவளித்தல், ஏழைகளுக்கு கல்வி அளித்தல், நோயாளிகளை குணப்படுத்துதல் மற்றும் நம்பிக்கையற்றவர்களுக்கு நம்பிக்கை அளித்தல் ஆகியவற்றின் மூலம் அதை வாழ்ந்தும் காட்டினார். கல்கத்தாவின் தெருக்களில் இரக்க உணர்விலிருந்து பிறந்த அவருடைய தொலைநோக்குப் பார்வை, இன்று உலகம் முழுவதும், பலரது வாழ்க்கையை மாற்றி அமைத்துவரும் ஒரு உலகளாவிய இயக்கமாக வளர்ந்துள்ளது.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. தௌஜபாவ் குயிட்டே
திரு. சுங்லென்லால் சிங்சிட்
திருமதி. மெலொடி டிம்சன்டிங் வய்ஃபெய்
திரு. ஸியான்லுன்தாங்க் ஸௌ T.
திரு. லியான் சின் தாங் H

ஜம்மு

நரோட்: சியான்லுன்தாங் ஸௌ டி. & லிங்நெய்ஹோய்

துதிக்க: ஞாயிறு சிறுவர் வகுப்புகளின் மூலமாக சிறுவர்கள் கர்த்தருக்குள் வளர்ந்து வருவதோடு, 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்காக ராஜ்பாக் பகுதியில் மூன்று நாள் உபவாச ஜெபத்தை முன்னின்று நடத்த தேவன் கிருபை செய்துள்ளார். நமது விசுவாசி பரஸின் தொழில் நலிவடைந்ததால் பிள்ளைகளின் கல்விக் கட்டணம் கட்டமுடியாமல் மனவேதனையடைந்தார். அனைவரின் ஜெபத்தின் மூலம் மீண்டும் தனது தொழிலை துவங்க தேவன் உதவி செய்துள்ளார். மலைவாழ் மற்றும் பகர்வால் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். பிசாசின் பிடியிலிருந்து ஸ்வேதா ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்ற தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள சபி, ரோஹித், ஈஸ்வர் தாஸ், பிந்து, டேனியல், ஜார்ஜ், பரஸ் ஆகியோர் இப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; கதுவா மாவட்டத்தில் பல பகுதிகளில் வசிக்கும் குஜார் மற்றும் மலைவாழ் மக்கள் மத்தியில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. தேவன் கிரியைச் செய்ய; கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்துள்ள யசோதா குடும்பம், மங்கள் குடும்பம், சுனிதா குடும்பம், லக்ஷ்மி குடும்பம், குஷால், மான்வி, விஜய், ரோஹித், பிந்து, குஷி ஆகியோர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; மூல வியாதியினால் அவதிப்பட்ட சஷி பாலுக்கு அறுவை சிகிச்சை செய்தும் உட்கார முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார். தேவன் பூரண சுகமருள; எதிர்ப்பினால் நிறுத்தப்பட்டுள்ள நக்ரி, பாலால், ஜீட்டானா, மஹிச்சக், சோந்தாலி ஆகிய கிராமங்களில் மீண்டும் ஆராதனைகள் துவங்கப்பட ஜெபிப்போம்.

விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்

ஆந்திரப் பிரதேசம், தாமலசெருவு பணித்தளத்தைச் சேர்ந்த லீதியாள் மருத்துவமனையில் பாதுகாப்பு பணியில் வேலை செய்து வருகிறார். ஒருநாள் அம்மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்த ஹவுசா என்ற பெண் அழுது கொண்டிருப்பதை லீதியாள் பார்த்து அவரிடம் விசாரித்த போது அந்த முகமதிய சகோதரி, தனது வயிற்றில் ஒரு பெரிய கட்டி (10 கிலோ) இருப்பதாகவும், அறுவை சிகிச்சை செய்தால் தான் மரிக்க நேரிடுமென மருத்துவர்கள் கூறியதாகவும் லீதியாளிடம் கூறினாள். இதைக் கேட்ட லீதியாளும், அவரது தாயரும் அப்பெண் தங்கியிருந்த அறைக்குச் சென்று மூன்று நாள் உபவாசித்து கரிசனையோடு ஜெபித்து இயேசுவை அறிவித்து வந்தனர். ஜெபத்தின் மூலம் அறுவை சிகிச்சை முடிந்து அப்பெண் நலமுடன் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம். அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. செந்தில் முருகன் V.
திருமதி. ஆலிவ் ஜெனிஃபர் நத்தானியேல் எட்வர்ட்
திருமதி. ஜெப ரோஸ் விஜயன்

ரியாசி:

ஷேக் சுபானி & எமி பாக்கியா

துதிக்க: ஹெர்பட மற்றும் சூல்பத்ரா கிராமங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்கள் மூலம் ஒரு பிராமண குடும்பம் உள்ளிட்ட இரு குடும்பங்கள் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். மந்த்ரா மற்றும் மனு பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். மார்பக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த அஞ்சலி ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருகிறார். முதன்முறையாக நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் அநேகர் கலந்துகொண்டு தங்கள் வாழ்வினை கர்த்தருக்கென்று அர்ப்பணித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: விசுவாசியின் மகள் தானியாவுக்கு ஏற்ற வரன் கிடைக்க; சிர்பட் கிராமத்தைச் சேர்ந்த பூஜா விசுவாசத்தில் வேரூன்றி வளர; சூல், சிர்பட், முத்தல் மற்றும் சம்பா கிராமங்களிலுள்ள தொடர்பாளர்கள் அனைத்து கூடுகைகளிலும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு விசுவாசத்தில் உறுதிப்பட; நடக்க விருக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி மற்றும் சபை மூப்பர் பயிற்சி தடையின்றி சிறப்பாக நடைப்பெற ஜெபிப்போம்.

ஹிமாச்சலப் பிரதேசம்

கர்சோக்:

பவன் குமார் & பிரபாஷினி தேவி

துதிக்க: வயிற்றுத் தொற்றிலிருந்து தனது தாயாரின் ஜெபத்தினால் சிறுவன் ஆர்க் பூரண சுகம் பெற்றான். அசுத்தாவியின் ஆதிக்கத்தினால் இரவில் கூச்சலிட்டுக்கொண்டிருந்த சப்னாவுக்கு விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலை அருளினார். கர்த்தரின் பெரிதான கிருபையால் அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற்று வருவதற்காக அவரைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆலயம் செல்லவிடாமல் தடுக்கும் கஜோலின் கணவர் மனந் திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; திருமணமாகி அநேக ஆண்டுகளாக குழந்தையின்றி தவிக்கும் சுனிதாவின் குடும்பத்தை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; விசுவாசிகளுக்கு நல்ல விளைச்சலை தேவன் கட்டளையிட; இப்பகுதியில் ஊழியம் செய்யும் மிஷனெரிகள், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளை தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மரியம்மாள் பால் சாலமோன்
திரு. ஜசக் R., திருமதி. பியூலா முரளிதரன்
திருமதி. ஜெய சௌந்தரி ஜெபராஜ் சாமுவேல்
திரு. ரபீந்திர முர்மு, திரு. தாவுட் டுடு
திருமதி. மாயா தினேஷ் தவார்

பஞ்சாப்

புத்லாடா:

பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

துதிக்க: புத்லடா, தல்வாடி, மூணக் மற்றும் பாரேட்டாவில் துவங்கப்பட்டுள்ள ஆராதனை தொடர்ந்து நடைபெற தேவன் உதவி செய்தார். பிரோக் காலன் கிராமத்தில் ஆலயம் கட்ட கிராமத் தலைவரின் அனுமதி கிடைக்க தேவன் கிருபை செய்துள்ளார். தொடர் ஜெபத்தினால் பாலோ கௌர் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். ஒரு புதிய குடும்பம் மூணக் ஆலய ஆராதனையில் பங்குப் பெற்று வருகின்றனர். பின்மாற்றத்திலிருந்த ஒரு குடும்பம் மீண்டும் கர்த்தரைத் தேடி வருகிறதற்காக அவரைத் துதிப்போம்.

ஜெபிக்க: சோட்டியன், பிரோக் காலன், தரியாப்பூர் மற்றும் பைண்ட் கிராமங்களில் நடைபெறவுள்ள சத்சங் கூட்டங்களுக்காக; சோட்டியன், புரார், சக் பைகே, கிஷன் கர் கிராமங்களில் நடைபெறவுள்ள இயேசு திரைப்பட ஊழியங்களுக்காக, புத்லாட ஆலயத்தின் மேற்கூரை சீரமைப்புப் பணிக்கு வேண்டிய பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

லேஹ்ரகாகா:

ஜசக் ஆபேல் &
அன்னா ரோஸ்லின்

துதிக்க: காடிலா பஸ்தி கிராமத்தில் புதிதாக இரவு கூட்டம் நடத்தி நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மூல வியாதியிலிருந்து சோனியா ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். பணியா இனத்தைச் சேர்ந்த ராம்கா பாயின் குடும்பம் ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். காடியால் பஸ்தி மற்றும் ஜகத்பூரா கிராமங்களில் லெந்து கால தினசரி ஜெபக் கூட்டங்கள் ஆரம்பிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ள காடிலா பஸ்தி மற்றும் உலானா கிராம மக்களின் இருதயங்களில் தேவன் கிரியை செய்ய; பின்மாற்ற மடைந்துள்ள மிட்டா சிங், கரம் சிங் மற்றும் சோனியா மீண்டும் விசுவாசத் திற்குள் வர; அரசாங்கத்தின் மூலம் வீடு கட்ட பண உதவி கிடைத்துள்ள தர்ஷன் நல்லபடியாக வீட்டை கட்டிமுடிக்க; கிராமத்தில் போதை வஸ்துக்களை விற்பனை செய்து வரும் ராம் சிங் மனந்திரும்ப ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கிரேஸி ஸ்டான்லி ஜார்ஜ்
திருமதி. கௌரம்மா @ சுவேதா அமரேந்திரன்
திருமதி. அன்னா ரோஸ்லின் ஜசக் ஆபேல்

உத்தராகண்ட்

தினேஷ்பூர்:

சிவகுமார் & சுசிலா மராக்

துதிக்க: மூன்று புதிய கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். விசுவாசியின் மகள் ஜோதியின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி அவர்கள் சொந்த கிராமத்தில் சிறப்பாக நடைபெற்றது. கர்ப்பப்பை வியாதியிலிருந்து பிரியங்கா ஜெபத்தின் மூலம் குணமடைந்தார். சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து 10 வயது பிரபூத் என்ற சிறுவனுக்கு அவனது பெற்றோரின் ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சைலிகஞ்ச் கிராமத்தில் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள பாம்பெட் சத்பால் குடும்பத்திற்கு நிலவும் எதிர்ப்புகள் மறைய; தனது குடும்பத்தை ஆலயம் செல்லவிடாமல் தடுக்கும் தேஜா பலியா என்பர் தேவனின் அன்பினால் தொடப்பட; தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தினால் கஷ்டப்படும் தர்மபால் மற்றும் ஓம்பிரகாஷ்க்கு தேவன் உதவி செய்ய; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களில் தேவன் மிகுந்த அறுவடையைக் கட்டளையிட ஜெபிப்போம்.

மல்தன்சோர்:

ஷிஷு பால் & அனிதா

துதிக்க: நடத்தப்பட்ட சிறுவர் முகாமில் 35 சிறுவர்கள் கலந்து கொண்டு வேத வசனங்களைக் கற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்தார்.ஹிம்மத்பூரில் புதிய தொடர்பாளர்களை தேவன் தந்துள்ளார். எவ்வித எதிர்ப்புமின்றி ஜீப் குழு மூலம் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். நான்கு பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கனியா மற்றும் தான்டியா கிராமங்களில் புதிதாக ஜெபக் கூடுகைக்கு வரும் மக்கள் இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவனென்று அறிந்துகொள்ள; நுரையீரல் தொற்றினால் அவதிப்படும் மிட்டு மற்றும் மெடுட் அற்புத சுகம்பெற; அஜய், கீதா, சுக்லவிந்தர், குர்மித், அயூஷ் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; குடிப்பழக்கத்திலிருந்து விடுபட முடியாமல் தவிக்கும் சில விசுவாசிகளின் விடுதலைக்காக ஜெபிப்போம்.

கிச்சா: பிபாபா பானி & பித்திகா

துதிக்க: இருசக்கர வாகன விபத்திலிருந்து பூரான் சிங்கை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். குர்மீத் சிங் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். ஜெபத்தின் மூலம் லக்ஷ்மி கால் அறுவை சிகிச்சை முடிந்து சுகம்பெற்று வருகிறார். விசுவாசிகளின் பிள்ளைகள் பள்ளி மற்றும் அரசுத் தேர்வுகளை நல்லமுறையில் எழுத கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: விசுவாசத்தினிமித்தம் எதிர்ப்பை சந்தித்து வரும் சாக்ரி பார்ம் கிராமத்தைச் சேர்ந்த அமீன் குடும்பத்தை தேவன் பாதுகாக்க; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் சமூக பயங்கள் நீங்கி தைரியத்துடன் ஆராதனையில் கலந்துகொள்ள; மங்கலா மற்றும் சஜானா பகுதிகளில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராம கிருஷ்ணா அகிபாடா
திரு. பாலாஜி நெட்டாலம், திரு. அமரேந்திரன்
திருமதி. ஜெபா கிரேஸ் டேவிட்
திருமதி. ருக்மணி ஹெம்ரோம்

பாஸ்பூர்:

கிறிஸ்டியன் பிரகாஷ் &
கோகனி சுமித்ராபேன்

துதிக்க: தலி கிராமத்தைச் சேர்ந்த பாலிஜீத் என்பவர் ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். ஜெபத்தினால் தொலைந்துபோன கைபேசி கிடைக்க தேவன் உதவி செய்தார். கனக் என்ற சகோதரி செவிலியர் படிப்பில் சேர தேவன் கிருபை செய்தார். விபத்தில் நெஞ்சு எலும்புகள் நொறுங்கிய 12 வயது சிறுவன் ஹர்ஷ்க்காக பெற்றோர் மற்றும் சபையாரின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் விரைவில் குணமடைய கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மூன்று மாத கர்ப்பிணியான நித்தீம் உடல் வீக்கத்திலிருந்து சுகம்பெற; விசுவாசி ஹர்மன்சிங் வெளிநாடு செல்ல எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற; விசுவாச வாலிபர்களான சோனி மற்றும் லக்கி ஆகியோருக்கு விரோதமாக செய்யப்படும் மந்திரங்கள் வாய்க்காமல் போக; மந்திர வேலைகளை செய்து வரும் சரோஜ் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

ஹரியானா

பர்வாலா:

மிண்டு குட்டும் & சுப்ராபாக்

துதிக்க: கபிபூர் கிராம சபையில் மூப்பர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். நீண்ட நாட்களாக இருமல், சளியினால் அவதியுற்ற போத்தி பேன் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். நெடுநாள் சுகவீனத்திலிருந்து பர்வாலா கிராமத்தைச் சேர்ந்த அஜ்மீர் மற்றும் கம்ரீத் என்ற சிறுவர்களுக்கு ஜெபத்தின் மூலம் பூரண சுமருளின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சிறுநீரகக் கல் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள ராஜ்பிலா மற்றும் ஆஷிஷ் என்ற சிறுவர்களை தேவன் குணப்படுத்த; கேட்கும் திறனை இழந்துள்ள மஞ்சுவுக்கு தேவன் அற்புதம் செய்ய; பர்வாலாவில் நடக்கவிருக்கும் சத்சங் மற்றும் வாலிபர்கள் முகாம் தடையின்றி சிறப்பாக நடைபெற; கபிபூரில் நடக்கவிருக்கும் சபை மூப்பர்கள் கூடுகை, புதன் கிழமைகளில் நடைபெறும் பெண்கள் கூடுகை ஆகியவை தடையின்றி நடைபெறவும், அநேகர் இக்கூடுகைகளில் பங்குபெற்று தேவனின் அன்பை அறிந்துகொள்ளவும் ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
திரு. ஃபிராங்ளின் M.Y. பாதம் A.S.
திருமதி. சூர்ஜ்யகாந்தி உதிப்தகுமார் பாக்
திரு. கொடிசெலா பிரவீன்

ஜீவன் நகர்:

அலியாக்கீம் ஜெனா & தீபிகா

துதிக்க: சிறுநீரகக் கல்லினால் அவதியுற்று வந்த 27 வயது ஹரீஷ் சௌரியா கர்த்தரின் கிருபையால் ஜெபத்தின் மூலம் குணமானார். பிலாஸ்பூர் கிராமத்தைச் சேர்ந்த சில்லாசிங் & காந்தா தம்பிதியனர் தங்கள் குடும்பத்தின் அங்கத்தினர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி வருகின்றனர். ராகுல் & மீனாட்சி தம்பதியினருக்கு நீண்ட நாட்களுக்கு பிறகு தேவன் தந்த கர்ப்பத்தின் கனியை ஆலயத் திற்கு கொண்டு வந்து பெயர் சூட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜெர்கார் கிராமத்தில் பானை வனையும் தொழில் செய்யும் ஒன்பது குடும்பங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போதிலும் ஆலயத்திற்கு வர தயக்கம் காட்டுகின்றனர். இவர்களது பயங்கள் நீங்கி ஆலயத்திற்கு வந்து தேவனை ஆராதிக்க; இரத்தக் குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள ராணி தேவிக்கு தேவன் சுகமருள; பூஜா குமாரிக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; நமது மிஷனெரி தீபிகா ஜெனாவிற்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள காசநோய் விரைவில் குணமடைய ஜெபிப்போம்.

ஃபத்தேஹ்பாத்:

டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்

துதிக்க: 14 இடங்களில் இரவுக் கூட்டங்களும், 13 இடங்களில் சத்சங் கூடுகைகளும் நடத்த தேவன் கிருபை செய்தார். பொய் புகாரினால் சிறைப்பட்டிருந்த விக்கிக்காக அவரது மனைவி பிரியங்கா கண்ணீரோடு ஜெபித்தபோது, ஜெபத்தைக் கேட்ட தேவன் சிறையிருப்பிலிருந்து விக்கி விடுதலை பெற உதவி செய்தார். அசோக்நகர் ஆலயத்தின் மூன்றாம் ஆண்டு விழா மிக சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அசோக்நகர், சாஸ்திரி நகர், சுபாஷ் நகர், பட்லிதபார், பாட்டியா காலனி ஆகிய இடங்களில் விசுவாசிகள் நடத்தும் ஜெபக்கூடுகைகள் தடையின்றி நடைபெற; விசுவாசிகள் மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள ஆத்தும ஆதாயக் குழு சிறப்பாக செயல்பட; புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள குட்டுவின் கணவர் ஜெசி இருசக்கர வாகனத்தி லிருந்து கீழே விழுந்து காயமுற்றுள்ளார். அவர் விரைவில் சுகம்பெற; திருண மாகி 15 வருடங்களாக குழந்தையின்றி மனவேதனையிலிருக்கும் சானசிங் & கிருஷ்ணா தம்பதியினரை தேவன் கர்ப்பத்தின் கனியினால் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பவன் குமார்

ரத்தியா: விஜயகுமார் & ஜெபலா

துதிக்க: நடத்தப்பட்ட வேத அறிவு போட்டியில் சுமார் 80 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றனர். வாகன விபத்தினால் சுயநினைவை இழந்த கோஹி, விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். ஒவ்வொரு விசுவாசியின் இல்லங்களில் லெந்து கால ஜெபங்கள் நடத்த தேவன் கிருபை செய்துள்ளார். எட்டு இடங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்களில் மூன்று குடும்பங்கள் நற்செய்திக்கு செவிசாய்த்து வருவதற் காகத் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மனநலம் பாதிக்கப்பட்டுள்ள பிர்பான் குணமடைய; ஜாமல்புர் சபை விசுவாசிகளின் மத்தியில் தேவன் ஒருமனதின் ஆவியைக் கட்டளையிட; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள முகேஷ் ராணி சுகம்பெற; சபை மூப்பர்கள் மற்றும் பெண்களுக்கான ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாம்கள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

கலான்வாலி: அனில்பாய் கவித் & கல்பனா சௌத்ரி

துதிக்க: மூன்று வருடங்களாக சுகவீனப் பட்டிருந்த கல்வானா கிராமத்தைச் சேர்ந்த இந்து பேன் ஆலயம் வந்தபோது விசுவாசிகளின் ஜெபத்தினால் சுகம்பெற்றார். நீண்ட நாட்களாக சுகவீனப் பட்டிருந்த குல்தீப் கௌர் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது உடல் நிலை சீரானது. ஜெபத்தின் மூலம் மூன்று வயது சிறுவன் அமாரியாவின் உடலில் இருந்த கட்டிகள் மறைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நுரையீரல் தொற்றினால் அவதியுறும் ராஜ் கௌர் சுகம்பெற; மனநலம் பாதிக்கப்பட்டுள்ள சத்பாலுக்கு தேவன் அற்புத சுகமருள; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள ஓடன் மற்றும் கல்வானா கிராம விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; விசுவாசி சஜனை விட்டு பிரிந்து சென்ற பெற்றோர் மீண்டும் மகனுடன் இணைந்து வாழ ஜெபிப்போம்.

ராஜஸ்தான்

உதய்பூர்:

ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

துதிக்க: பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலும் கிராமத் தலைவரின் ஒத்துழைப்பினால் காட்கியாபாலா கிராமத்தில் ஆலயக் கட்டுமானப்பணி தடையின்றி நடை பெற்று வருகிறது. ஜெபத்தின் மூலம் இரத்தத்தில் ஏற்பட்ட தொற்றிலிருந்து புஷ்பா சுகம்பெற்றார். கண் பார்வை குறைப்பாட்டிலிருந்து லிம்பா மற்றும் ராஜேஷ் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். புதிதாக ஆலயத்திற்கு வரும் பிரகாஷ் & கீதா குடும்பத்திற்காகத் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பக்கவாத நோயிலிருந்து புஷ்பா குணமடைய, பேச முடியாமல் இருக்கும் ராஜ்வின் 5 வயது மகன் ஆர்யனுக்கு தேவன் அற்புதம் செய்ய; 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சிப்பெற; நடக்கவிருக்கும் உள்ளாட்சி தேர்தலில் தேவன் தமக்கு சித்தமானவர்களை தேர்ந்தெடுக்க; உபத்திரவங்களின் மத்தி யிலும் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியுடன் நிற்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் S.
திரு. சாலமோன் ஜெபராஜ் J.
திருமதி. பின்னி ஞானம் ஜாண் தினேஷ்
திருமதி. அனியா ஜோஸ்ஃபின் வெங்கடேசன்
திருமதி. ரேணு அருண் காந்தா
திருமதி. சாரா மால்தோ மார்கூஸ்

கேர்வாடா & டிடி:

தேபாஷிஸ் ஹெம்ரோம் & ஷிஃபாலி ஹன்ஸ்தா

துதிக்க: மம்தாவிற்கு கர்ப்பத்தின் கனியைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். புத்ஹார் கிராமத்தில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்க தேவன் கிருபை செய்துள்ளார். ராஜ் பேனின் வயிற்றுக் கட்டி ஜெபத்தின் மூலம் மறைந்து போனது. இரண்டு மாதங்களாக சுகவீனத்தினால் படுக்கையிலிருந்த வினோத் பாயிக்காக குடும்பத்தினர் மற்றும் விசுவாசிகள் ஜெபித்தபோது தேவன் அவருக்கு பூரண சுகமருளினார். விசுவாசிகளுக்கு நல்ல அறுவடையை தேவன் தந்தருளினார். விசுவாசி பிரகாஷ் புது வீடு கட்டி முடிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 10ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள தீபிகாவும், 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள மகிமா, சந்தோஷ் மற்றும் சஜ் ஆகியோர் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சிப்பெற; புஹார் கிராமத்தில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் ஜெக்தீஷ் மற்றும் காலுபாய் விசுவாசத்தில் வேரூன்றி வளர; ஆலயத்திற்கு செல்லவிடாமல் தடைசெய்து மிரட்டி வரும் ரமேஷ், காக்ரா மற்றும் மோகன் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட ஜெபிப்போம்.

டெல்லி

பட்பர்கன்ஜ்:

ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்

துதிக்க: வேதாகம வகுப்புகள் புதிதாக சில சபைகளில் துவங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒலி வடிவில் வேதாகமத் தட்டுகள் அனைத்து விசுவாசிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு, அனைவரும் வேத வசனங்களை கேட்டு அறிந்துகொள்ள அறிவுறுத்தப்பட்டனர். இரத்த வாந்தி எடுத்து வந்த மல்லிகா மாமி ஜெபத்தின் மூலம் பூரண சுகமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பாலியல் பாவத்திலிருந்து கரீஷ்மா மற்றும் இசா விடுதலை பெற; சுகவீனத்தினால் படுக்கையிலுள்ள தவமணிக்கு தேவன் பூரண சுகமருள; கிறிஸ்துவின் மீது ஆர்வம் காட்டும் தயானந்த், சாவித்ரி, சந்திராவதி ஆகியோர் தைரியத்துடன் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; ஷாலு, தீய சகவாசத்திலிருந்து விடுபட்டு கணவருடன் சமாதானத்துடன் வாழ ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கோல்டன் J. இன்பராஜ்

உத்தரப்பிரதேசம்

கோண்டா: ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌத்ரி

துதிக்க: நட் இன மக்கள் ஆண்டவருக்குள் நன்கு வளர்ந்து வருகின்றனர். ஐந்து வருடங்களாக குழந்தை இல்லாதிருந்த வித்யாராம் குடும்பத்திற்கு தேவன் குழந்தையைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். கடந்த சில மாதங்களாக சரீர பெலவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த நமது ஊழியர் திரு. சுந்தர்லால் தொடர் ஜெபத்தோடு கூடிய மருந்துகளினால் பூரண சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: உச்சநீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள நமது கோண்டா நிலப் பிரச்சனை விரைவில் முடிவடைந்து நமக்கு நீதி கிடைக்கவும்; எதிர்ப்புகளின் மத்தியில் நமது விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும்; 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப் பெறவும் ஜெபிப்போம்.

கைம்கஞ்ச்: ஸ்டீபன் ஹன்ஸ்தா & சுபாஷினி முர்மு

துதிக்க: பத்தேபூர் கிராமத்தைச் சேர்ந்த சிவராம் மரத்திலிருந்து கீழே விழுந்து கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டபோதிலும் அற்புதமாக அவரது ஜீவனை தேவன் பாதுகாத்தார். ஜெபத்தின் மூலம் விசுவாசியின் மகளுக்கு திருமணக் காரியங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வேலை செய்யும் இடத்தில் காலில் அடிப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் சத்தன்தாரா விரைவில் சுகம் பெற; நீண்ட நாட்களாக சுகவீனப்பட்டுள்ள தரம்வீரின் தாயாருக்கு தேவன் பூரண சுகமருள; சுபாஷினி முர்முவின் கர்ப்பத்தின் கனியை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

ஹசேரன்: சுரேஷ் மால்டோ & பிரேம் லதா மால்டோ

துதிக்க: முட்டேக்கபூரா, தக்வாபூர் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மஞ்ச்கிலா கிராம ஜெபக் கூடுகைகள் தடையின்றி சிறப்பாக நடைபெற்று வருகிறது. தக்வாபூரில் நீண்ட நாட்களாக சுகவீனமாக இருந்த ரஷ்மிதாவின் கணவரை ஜெபத்தின் மூலம் தேவன் குணமாக்கினார். 119ஆம் சங்கீதம் முழுவதையும் படித்து ஜெபித்தபோது அர்ச்சனாவின் பெலவீனம் நீங்கி சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஹசேன் கிராமத்தில் தடைசெய்யப்பட்ட ஆராதனை மீண்டும் துவங்கப்பட; விசுவாசிகள் தேவனோடுள்ள ஐக்கியத்தில் பெலப்பட; தக்வாபூர், முட்டேக்பூரா கிராமங்களில் ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்கப்பட; நுரையீரல் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள சுதேச ஊழியர் முக்குத் சிங்கின் மகன் ராகுராஜ் பூரண சுகம்பெற; கீழே விழுந்து கால் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள மன்ஜிலா கிராமத்தைச் சேர்ந்த அனுராக் விரைவில் பூரண சுகம்பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆபிரகாம் G.
திருமதி. ஜெயந்தி ஃபிரான்சிஸ்

சிக்கந்ரா:

பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

துதிக்க: அநேக கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். உபத்திரவத்தின் மத்தியிலும் விசுவாசிகள் வீடுதோறும் ஜெபம் செய்து தேவனோடுள்ள ஐக்கியத்தில் தங்களை பெலப்படுத்திக்கொண்டு வருகின்றனர். ஷியாம் சுந்தர் மற்றும் பிரேமாவதி ஆகியோருக்கு அறுவை சிகிச்சை வெற்றியாக முடிய தேவன் உதவி செய்தார். கிறிஸ்துவுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரேமாவின் அண்ணன் தற்போது எதிர்ப்பைக் கைவிட்டுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: உபத்திரவத்தின் மத்தியில் வீடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜெபக் குழுக்களில் அநேகர் பங்குபெற்று ஜெபம் தடையின்றி நடைபெற; குஜராடாய், கஜாபோல் மற்றும் காக்ரியா சபைகளில் நிலவும் எதிர்ப்புகள் மறைய; ஜிதேந்திரா, ஆகாஷ் மற்றும் சஞ்சய் குடும்பங்கள் விசுவாசத்தில் பெலப்பட; பாரத்சிங், அக்சயா குமார் மற்றும் கமலேஷ் ஆகியோர் தீயப் பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

பர்த்தனா:

எஸ். ராஜன் & ஜெபமலர்

துதிக்க: கிச்சயா மற்றும் அரவிந்த் பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். டெல்லியில் நடைபெற்ற கலவரத்தில் கைது செய்யப்பட்ட ராம்பூரைச் சேர்ந்த நமது விசுவாசி சீல்மஹியின் இரண்டு மகன்கள் இவரின் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். சுக்காம்பூர் கிராமத்தில் முதன்முறையாக நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஏழு பேர் இயேசு கிறிஸ்துவுக்குள் மறுமலர்ச்சிப் பெற்ற புதிய வாழ்விற்குள் வந்துள்ளதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: எதிர்ப்பினால் மூடப்பட்டுள்ள பைசோலி திருச்சபை மீண்டும் திறக்கப்பட; குடும்பப் பிரச்சனையினிமித்தம் பிரிந்து வாழும் அனுஜ் & அர்ச்சனா தம்பதியினர் சமாதானத்துடன் மீண்டும் இணைந்து வாழ; நமது விசுவாசிகளின் பிள்ளைகளான சாமினி மற்றும் சந்தியாவுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணை கிடைக்க; தொண்டை புற்று நோயினால் அவதிப்படும் சிலந்தருக்கு தேவன் அற்புத சுகமருள; கைப்பேசி கடை நடத்திவரும் அவினாஷ் அதில் வரும் பிரச்சனைகளிலிருந்து விடுபட; முர்சா கிராமத்தில் நடத்தப்படும் டியூசன் சென்டர் சிறப்பாக செயல்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பெரில் சிரோமணி ஏகலைவன்

திரு. பீட்டர் பிரபாகரன்

ஜாலவ்ன்:

கவித் ராகேஷ் ரத்திலால் &
ஈகார் ரேஷ்மா மாருதி

துதிக்க: பாதட்பூரா கிராமத்தில் நடத்தப்பட்ட முழு இரவு ஜெபத்தில் விசுவாசிகள் அநேகர் கலந்துகொண்டு பாரத்தோடு ஜெபித்தனர். சிசியின் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தேற தேவன் கிருபை செய்தார். நமது விசுவாசி ராகுல் எல்லை பாதுகாப்புப் படைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். கோலுன்டா கிராமத்தில் புதிதாக ஆராதனைக்குழு ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். மூன்று பேர் தேவனின் அன்பினை அறிந்துகொண்டதற்காக அவரைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஹேமலதா & தினேஷ் குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; பிரீத்தி மார்பக புற்றுநோயிலிருந்து பூரண சுகம்பெற; புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள பிரம்புரா, உதரகேடா மற்றும் மகுடா கிராமங்களில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அனுப் குணமடைய; டோன் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜெபக்குழுவில் அநேகர் பங்குபெற்று வளர்ச்சிப்பெற ஜெபிப்போம்.

மத்தியப் பிரதேசம்

பால்:

மகேந்திரன் & புஷ்பம்

துதிக்க: சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து சாதர் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். விசுவாசி ரஹ்லிகாய் இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து பலத்த காயம் ஏற்பட்டது. சிகிச்சை மற்றும் ஜெபத்தின் மூலம் விரைவில் குணமடைய தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் விசுவாசி கைலாஷின் மகளுக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். நெஹ்தா கிராமத்தைச் சேர்ந்த மஞ்சுபாய் நமது ஊழியத்தில் புதிதாக இணைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ள காசிராம், சவ்லால், அப்சர், ரூப்சிங் ஆகியோர் மிண்டும் விசுவாசத்திற்குள் வந்து கர்த்தருக்குள் நிலைத்திருக்க; கணவருடன் சண்டையிட்டு பிரிந்து சென்றுள்ள மஞ்சு மீண்டும் தன் கணவருடன் இணைந்து வாழ; பலோனா, பஞ்ச் பைடா, பூண்டா, சுங்கட், நிம்போல், நங்ராடாஸ், ராஜ்ரா ஆகிய கிராமங்களில் தடைப்பட்டுள்ள ஆராதனைக் குழு மீண்டும் துவங்கப்பட பாரத்தோடு ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுசித்ரா லிம்மா

கண்ட்வா பிராந்தியம்:

ஜசக் & சீதா

துதிக்க: ஹசன்பூரா கிராம சபையில் நடைபெற்ற இரண்டு நாட்கள் உபவாச ஜெபத்தில் சுமார் 50 பேர் கலந்துகொண்டு கிராம மக்களின் இரட்சிப்பிற்காக பாரத்தோடு ஜெபித்தனர். கால்வா சபையில் நடத்தப்பட்ட பெண்கள் பயிற்சி கூடுகையில் சுமார் 25 பேர் கலந்துகொண்டு வீடுகள்தோறும் ஜெப கூட்டங்கள் நடத்துவது பற்றிய பயிற்சி பெற்றனர். கால்வா சபையில் அனுசரிக்கப்பட்ட சாம்பல் புதன் கூடுகையில் திரளான விசுவாசிகள் பங்கு பெற்று 40 நாட்கள் உபவாசித்து ஜெபிக்கத் தீர்மானித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மிர்பூரைச் சேர்ந்த பகவதி கர்ப்பப்பை பிரச்சனையினிமித்தம் பலவித சரீர பெலவீனங்களினால் கஷ்டப்படுகிறார்கள். தேவன் பூரண சுகமருள; வயிற்று எரிச்சலினால் சாப்பிட முடியாமல் அவதிப்படும் சவிதா, பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு, குடும்பத்தினரால் கைவிடப்பட்ட ஜீங்லி மாஜி ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; திருமணமாகி அநேக ஆண்டுகளாக குழந்தைக்காக ஜெபித்து வரும் சுகந்தி குடும்பத்தை தேவன் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

தார்:

சாந்து மராண்டி & ராக்கி

துதிக்க: டாட்டாபானி கிராமத்தில் நடத்தப்பட்ட பெண்கள் ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாமில் அநேகர் கலந்துகொண்டு தங்கள் உறவினர் மற்றும் கிராமத்தினரை கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்ய தீர்மானித்தனர். முதன்முறையாக குஜர்மஹானா, சஜானிபூரா மற்றும் முன்டாலி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். அம்ஜிகும்மா கிராமத்தில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்க தேவன் கிருபை செய்துள்ளார். மூன்று பேர் இயேசுவின் மந்தையில் இணைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: டாடாபானி கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள முதியோர் கல்வி திட்டத்தில் கிராமத்தினர் உற்சாகத்துடன் கலந்துகொண்டு பயன்பெற; சிறுநீரகப் பிரச்சனையினால் அவதியுறும் அனில் கேவாரி குணமடைய; சுவிசேஷத்திற்கு கதவடைத்துள்ள மனாவரி தாலுகாவில் பரிசுத்த ஆவியானவர் கிரியைச் செய்ய; திட்டமிட்டபடி பயிற்சி முகாம்கள், சபை மூப்பர், பெண்கள் கூடுகைகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லிடியா சுதர்சன் தாமஸ்
திருமதி. அஹரோனி குட்டோய் அச்சுமி
திரு. கிறிஸ்டியன் பிரகாஷ் S.
திருமதி. ஜெபமலர் ராஜன்

அஸோம்

கோஹ்பூர்:

நிருபோமா

துதிக்க: 11 கிராமங்களில் முதன் முறையாக நற்செய்தி அறிவிக்கவும், 19 கிராமங்களில் பின்தொடர் பணி செய்யவும், கைப் பிரதிகள் விநியோகிக்கவும், ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். கோஹ்பூர் பணித் தளத்தில் மிஷனெரி குடும்பத்திற்கு வாடகைக்கு வீடு கிடைக்க தேவன் உதவி செய்தார். சிலுவை தியான கூட்டங்களில் திரளானோர் பங்குபெற்று பயன்பெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கோஹ்பூர் பணித்தளத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள வாலிபர் முகாமில் திரளானோர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற; நமது சுதேச ஊழியர்கள் உற்சகாத்துடன் சக சமுதாய மக்களின் இரட்சிப்பிற்காக பணியாற்ற; விசுவாசிகளின் ஜெபம் மற்றும் சாட்சியுள்ள வாழ்க்கைக்காக; இயேசு திரைப்படம் திரையிட எல்லா கிராமங்களிலும் அனுமதி கிடைக்கவும், மிகுந்த பலனை தேவன் தரவும் ஜெபிப்போம்.

பீஹார்

அரரியா:

தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி

துதிக்க: தீபக்கின் திருமணம் கிறிஸ்தவ முறைபடி சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் நீத்தாவின் குடும்பம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்று தற்போது ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். விசுவாசி கஜோலின் குடும்பத்திற்கு புதிதாக கடை திறக்க தேவன் உதவி செய்தார். நீண்ட நாட்களாக சுகவீனத்தினால் அவதியுற்று வந்த உமாதேவி ஜெபத்தினால் பூரண சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நீண்ட நாட்களாக சுகவீனப் பட்டுள்ள சிருஷ்டி குமாரி மற்றும் கஜோல் தேவியின் மாமியாருக்கு தேவன் பூரண சுகமருள; விசுவாசி சுமித்ரா தேவியின் வீட்டின் மீது இரவு நேரத்தில் கற்கல் விழுவதுபோன்ற சத்தங்களை உண்டாக்கும் பிசாசின் கிரியைகள் அதமாக்கப்பட; நற்செய்தி பிரதிகளை வாங்கியவர்கள் அதனை வாசித்து உண்மையான தெய்வத்தை அறிந்துக்கொள்ள ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபா ஜேக்கப் பிரதீப் குமார்
திருமதி. கண்மணி பரிமளம் ராஜாசிங்

ஜார்க்கண்ட்

மோஹல் பஹாடி: இம்மானுவேல் கார்த்தி & ஜோதி லக்ஷ்மி

துதிக்க: நமது சபை மூப்பரின் மனைவி பரிமளா தேவிக்கு கர்ப்பப்பையில் கட்டியும், ஹெபடைடிஸ் 'பி பாசிட்டிவும்' இருந்தது, அறுவை சிகிச்சை செய்ய அதிக பணம் செலவாகும் என்பதால் அவர் சந்திரகோடாவிலுள்ள மிஷன் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார், அங்கு தமிழ்நாட்டிலிருந்து ஒரு மகளிர் மருத்துவ நிபுணர் புதிதாக வந்துள்ளார், கர்த்தரின் கிருபையால் அவர்களின் மூலம் நல்ல சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நெஞ்சு வலியிலிருந்தும், சாலை விபத்தி லிருந்தும் நமது சுதேச ஊழியர் சாம் சுந்தருக்கு பாதுகாப்பையும், சுகத்தையும் தேவன் அருளினார். தன்னார்வ ஊழியர் ராம்சிங் குடும்பதை சாலை விபத்திலிருந்து அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 8 சபைகளில் விசுவாசத்தை விட்டு பின்வாங்கி சென்ற 54 குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; துலி ராணி, புதன்டெஹ்ரி ஆகியோர் பக்கவாதத் திலிருந்து பூரண சுகம்பெற; புதிய தொடர்பாளர்களான புரான் டெஹ்ரி, ராமி டெஹ்ரி மற்றும் சூரஜ் முனி டெஹ்ரி இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பால் பஹாடியா வாலிபர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; சபை மூப்பர்கள் பயிற்சி, விசுவாசிகள் முகாம், இளைஞர் கூட்டங்கள், ஆத்தும ஆதாயப் பயிற்சி கூட்டங்கள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

நகர் உண்டாரி: பிபின் பிஹாரி பிரதான் & ஜர்னா பரிச்சா

துதிக்க: அல்கர் சபையைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் வேத வசனங்களை கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர். அல்கர் மற்றும் துளசிதாமர் கிராமங்களில் பெண்கள் கூடுகை நடத்த தேவன் கிருபை செய்தார். விசுவாச சகோதரிகள் இரண்டு பேர் 20 நாட் களுக்குள் தையல் கற்றுக்கொள்ள தேவன் உதவி செய்தார். சுயநினைவை இழந்து, பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருந்த துர்கி கிராமத்தைச் சேர்ந்த கைலாஷ் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று தற்போது வேதாகமத்தை நன்றாக வாசித்து வருகிறார். அல்கர் மற்றும் துளசிதாமரில் ஆலயக் கட்டு மானப் பணிகள் தடையின்றி நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: காசி இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் தன்னார்வ ஊழியர் திருமதி. ரீனா குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்க; ஆங்கில பள்ளியில் படித்து வரும் நமது விடுதி மாணவர்களான தீபக், அலோக், ராகேஷ், ரஞ்சித், கார்த்திக், விராட், சந்தியா மற்றும் சிவம் காசி ஆகியோர் நன்கு படிக்க; நற்செய்தி அறிவிக்க கடினமாகக் காணப்படும் ரோமில் கிராமத்தில் தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; நகர் உண்டாரி பணித்தளத்தில் காணப்படும் இருளின் அந்தகார கிரியைகள் அதமாக்கப்படவும், விசுவாச குடும்பங்கள் விசுவாசத்திலும், வேத வார்த்தைகளிலும் நிலைத்திருக்கவும் ஊக்கத்தோடு ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பாசுதேவ் மால்தோ
திருமதி. ஜெபா தெபொராள் வேதமாணிக்கம்
செல்வி. சூரஜ் முகி

பாக்குரியா:

செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

துதிக்க: பக்கவாதத்தினால் பாதிக்கப் பட்டிருந்த மட்காவா கிராமத்தைச் சேர்ந்த சுனேய் சோரன் தொடர் ஜெபத்தின் மூலம் தற்போது நடக்க தேவன் கிருபை செய்துள்ளார். சாலை மற்றும் வாகன வசதிகள் இல்லாத கிராமங்களிலிருந்து மக்கள் ஆராதனைக்கு உற்சாகமாக வருகின்றனர். டுமர்டோலா கிராமத்தின் மந்திரவாதி சுனில் ஹன்ஸ்தா கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சாலமோன் மராண்டியின் திருடுபோன இரண்டு மாடுகள் திரும்ப கிடைக்க; மனநலம் பாதிக்கப்பட்டுள்ள சுந்தரி மூர்முவுக்கு தேவன் பூரண சுகமருள; பணத்தாசையைக் காட்டி சில சபை மூப்பர்களை வஞ்சிக்கும் பிசாசின் கிரியைகள் அதமாக்கப்பட; சபைகளில் குழப்பங்களை உருவாக்கும் சில பெண்கள் மனந்திரும்ப; புசும்பூர், நவாடி, தித்தடியா, டிம்பர், சிருடி மற்றும் மக்டா கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

சுந்தர்பஹாடி & லால்மட்டியா:

அமரேந்திரன் & சுவேதா

துதிக்க: வாகன விபத்திலிருந்து சஞ்சலி டுடு மற்றும் ராதா கிஸ்குவை தேவன் அற்புதமாக பாதுகாத்தார். விடியற்காலையில் வீட்டின் வாசலில் படுத்துகிடந்த பாம்பின் தலையை தெரியாமல் மிதித்த சொளமியா தேவியை பாம்பு தீண்டாதபடி தேவன் பாதுகாத்தார். நான்கு பேர் கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொண்டனர். கிறிஸ்துமஸ் தினத்தன்று தோண்டப்பட்ட சிறு கிணற்றில் ஒரு சிறுமி விழுந்து மரித்துவிட்டாள், இதனால் ஏற்பட்ட உபத்திரவத்திலிருந்து சபை விசுவாசிகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நாய் கடித்ததால் சுகவீனப் பட்டுள்ள சுதேச ஊழியர் ஹிஸ்து ஹன்ஸ்தாவின் மகன் சைலஸ் குணமடைய; விசுவாசத்தில் பின் மாற்றம் அடைந்துள்ள கட்டியாரி கிராமத்தினர் மீண்டும் தேவனோடு ஐக்கியம் கொள்ள; சபால்பூர், ஜாம்டியா, கைராபானி மற்றும் புல்கா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; நுரையீரல் பிரச்சனையினால் பாதிக்கப் பட்டுள்ள கிராமத் தலைவரின் உறவினர் அமின் ஹெம்ரோம் சுகம்பெறவும், இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிடவும் ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கிங்ஸ்லி ஜசக் ஜாண்சன் M.
திருமதி. அமுதா குமார் பால்
திரு. ஸ்ரீனிவாசன் J., திரு. டென்சிங் R.
திரு. அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா

கைராபானி சிறுவர் விடுதி:

மனோஜ்குமார் பானி &
சந்தானி பானி

துதிக்க: 27 மாணவர்கள் 10ஆம் வகுப்பு அரசுத் தேர்வினை நல்லபடியாக எழுத தேவன் கிருபை செய்தார். கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட ஒருநாள் முகாமில் அநேகர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். மூன்று நாட்கள் நடைபெற்ற வேத வகுப்பில் 80 மாணவர்கள் பங்கு பெற்று பயன்பெற்றனர். விடுதியின் அனைத்துத் தேவைகளும் சந்திக்கப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுத் தேர்வு எழுதியுள்ள மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களுடன் தேர்ச்சிப் பெற; இந்த மாதம் நடக்கவிருக்கும் பெற்றோர் முகாமில் அனைத்து பெற்றோரும் கலந்துகொண்டு தங்களின் பிள்ளைகளின் எதிர்க்காலத்திற்கான முயற்சிகளை மேற்கொள்ள; விடுதியின் காப்பாளர், சமையல்காரர் ஆகியோர் விடுதியினை நல்ல முறையில் பராமரிக்க; விடுமுறை நாட்களில் விடுதி மாணவர்கள் தங்கள் சரீரத்தையும், தேவ வசனத்தின்படி தங்கள் வாழ்வையும் காத்துக்கொள்ள ஜெபிப்போம்.

மண்ட்ரோ:

கென்னடி சிங் &
ஹயோஜம் லின்தோய்பி

துதிக்க: விசுவாசிகள் இணைந்து குணமாக்கும் கூடுகையை புது கிராமத்தில் நடத்த தேவன் கிருபை செய்தார். ஏழு பேர் இயேசு கிறிஸ்துவில் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்தனர். கெராரா மற்றும் கஹாயா கிராமங்களில் சிறு ஜெபக்குழுக்கள் துவங்க தேவன் கிருபை செய்தார். இச்சாதோலா, கிட்டானியா கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். பிரமிளா முர்முவிற்கு கர்ப்பத்தின் கனியைத் தந்து ஆசீர்வதித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பார்டோலா, மஹின்டி மற்றும் தியாரா பூல்பாரியா கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் மற்றும் அனுமதி கிடைக்க; ஹோப்பன் மராண்டி புற்று நோயிலிருந்தும், சுசீலா மற்றும் பால் சோரன் சிறுநீராகப் பிரச்சனையிலிருந்தும், பாஹா முர்மு மனநல பாதிப்பிலிருந்தும் குணமடைய; கிறிஸ்துவை அறிவிக்கையிடும் நிகழ்ச்சி, ஆத்தும ஆதாயப் பயிற்சி ஆகியவை தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பிரபாகர சாரதி, திரு. பாபு P.
திருமதி. மேரி ஜான்சி ராணி பென்ஹர் M.

தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & ஆஷிஷ் நிவாஸ் சிறுவர் விடுதி – பந்தேனி: விக்டர் ஜெயசீலன் & பிரின்சஸ் நகோமி, டோன் கோலுன் கிப்கென் & லால் நுன் மாவி, ஸ்டாலின் ஜீவா & ராணி

துதிக்க: 24 மாணவர்கள் 10ஆம் வகுப்புத் தேர்வை சிறப்பாக எழுத தேவன் கிருபை செய்தார். கல்கத்தாவில் நடைபெற்ற ஊழியர்கள் முகாமில் சுமார் 100 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். சுகவீனப்பட்டு வீட்டிற்கு சென்றிருந்த காப்ரியேல் மற்றும் ஷீபா ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று மீண்டும் விடுதிக்குத் திரும்ப கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கோடை காலத்தில் கிணற்றில் தண்ணீர் வற்றிவிடாமல் போதுமான அளவு தண்ணீர் கிடைக்க; மேற் படிப்பிற்காக நுழைவுத் தேர்வு எழுதியுள்ள பெஞ்சமின் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப்பெற; புதிதாக கட்டப்படவிருக்கும் பள்ளி கட்டிடங்கள் கிராமத்தினரின் ஒத்துழைப்புடன் விரைவில் கட்டி முடிக்க; விடுதியில் படிக்கும் ராமசந்திரா மற்றும் ராம் சுந்திராவின் பெற்றோர் மற்றும் உடன் பிறந்தோரின் உடல் நலக் குறைவினால் பள்ளிக்கு வராமல் வீட்டிலிருக்கும் இவர்கள் விரைவில் பள்ளிக்கு திரும்பவும், குடும்பத்தாருக்கு தேவன் பூரண சுகமருளவும் ஜெபிப்போம்.

பதரியா: சுச்சௌ & காம்புங் தாபா

துதிக்க: சுனில் மால்தோ குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். குடியா சபை வாலிபர்கள் கிறிஸ்துவில் வேரூன்றி வளர்ந்து வருகின்றனர். விசுவாசிகளின் பிள்ளைகள் அனைவரும் அரசுத் தேர்வுகளை சிறப்பாக எழுத உதவின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தாயாரை இழந்திருக்கும் நமது சபை மூப்பர் சந்தோஷின் ஆறுதலுக்காக; சர்பாரா ஆலயக் கட்டுமானப்பணிகள் விரைவில் முடிக்கப்பட; குடிப்பழக்கத்தை கண்டித்ததினால் கிராம வாலிபர்களால் தாக்கப்பட்ட சபை மூப்பர் மனுவேல் மால்தோ குணமடையவும், வாலிபர்களை தேவன் சந்திக்கவும்; மாங்கோடி பிராந்திய அளவில் நடக்கவிருக்கும் விசுவாசிகளின் கூடுகை சிறப்பாக நடைபெறவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

தொலைந்த பத்திரங்கள் பத்திரமாக கிடைத்தது

மேற்கு வங்க மாநிலத்தின் ராணிகஞ்ச் பணித்தளத்திலுள்ள சாஹர்தகி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி டோலா சோரன். அநேக வருடங்களாக சேமித்துவைத்த பணத்தைக்கொண்டு ஒரு நிலத்தை வாங்கி அதனை பதிவு செய்தார். இரண்டு வருடங்களுக்குப் பின் அதில் வீடு கட்ட முயற்சிக்கும்போது, நிலத்தின் பத்திரப் பதிவு காகிதங்கள் தொலைந்துபோனதைக் கண்டு நிலைகுலைந்துப்போனார். இதை சபையாருடன் பகிர்ந்துகொண்டபோது அனைவரும் உபவாசித்து பாரத்தோடு ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் நில பத்திரங்கள் கிடைக்கவும், அதில் வீட்டின் கட்டுமானப் பணிகள் துவங்கவும் கிருபை செய்தார். அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரூபன் சாமுவேல் J.
திருமதி. லிஸி வாவச்சன்
திருமதி. பிரிசில்லாள் ரமேஷ் வேல்ராஜ்
திருமதி. கீதாஞ்சலி நாயக்
திரு. ஜாண் டேவிட்சன் செல்வராஜ்

பொடுவா விடுதி:

சோன்பு சிங்சன் & டிங்நய்நேங்

துதிக்க: விடுதியில் படிக்கும் மாணவர்கள் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுத் தேர்வை சிறப்பாக எழுத தேவன் உதவி செய்தார். காய்ச்சல், இருமல் மற்றும் சிரங்கு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றனர். விடுதிகளில் பணியாற்றும் காப்பாளர்கள், சமையல்காரர்களுக்காக நடத்தப்பட்ட ஆவிக்குரிய முகாமில் அநேகர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 8ஆம் வகுப்பு படிக்கும் ஜவ்ரா தர்மா குணமடையவும்; விபத்தில் கால் முறிவு ஏற்பட்டு வீட்டிற்குச் சென்றுள்ள பத்ரஸ் பவுலோஸ் பூரண சுகம்பெற்று நல்ல முறையில் தேர்வு எழுதவும்; காப்பாளர் மற்றும் சமையர்காரர் பணிக்கு அர்ப்பணமுள்ளோர் கிடைக்கவும் ஜெபிப்போம்.

மேற்கு வங்காளம்

சம்சி:

அஸ்தபான் ஆதித்திய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

துதிக்க: பல ஆண்டுகளாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்த ஜிசு மராண்டி ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். இனம்புரியாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த சரஸ்வதி ஹன்ஸ்தா மற்றும் அவரது மகனுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். தேவன் நமது விசுவாசிகளுக்கு தந்த நல்ல அறுவடையில் பத்திலொரு பங்கை ஆலயத்தில் படைத்து தேவனை மகிமைப்படுத்தினர். வாடி கிராமத்தில் இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். எதிர்ப்பின் மத்தியிலும் லபாகிராம் கிராமத்தைச் சேர்ந்த சாம்ரி மிஷோர் விசுவாசத்தில் உறுதியாயிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தைக் கேட்ட அனைவரும் விசுவாசத்திற்குள் வர; பன்படா, படிடோலா மற்றும் ஜோகோட் கிராமங்களில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்கு வாஞ்சைக் காட்டுவோர், அவரே மெய்யான தேவனென்று அறிக்கையிட; ஜிதேல்பூர் கிராமத்தைச் சேர்ந்த கங்காமுனி டுடு, பஜித்பூர் கிராமத்தைச் சேர்ந்த புல்முனி மூர்மு, வாடி கிராமத்தைச் சேர்ந்த ஹிராமுனி பாஸ்கி ஆகியோருக்கு தேவன் சுகப்பிரசவம் அருள ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. மெயின்ராஜ் I.

திருமதி. சுவர்ணலதா சஞ்சீப் ஆன்ட்ரப்

ராணிகஞ்ச்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

துதிக்க: பத்து பேர் கிறிஸ்துவின் அன்பினை ருசித்தனர். டோலா சோரனின் தொலைந்துபோன நிலப்பத்திரம் ஜெபத்தின் மூலம் கிடைக்க தேவன் கிருபை செய்தார். 12 மணி நேரம் சுயநினைவை இழந்திருந்த ஜெசிகா சோரன் சபையாரின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் சுயநினைவுப் பெற்று எழுந்தார். பக்கவாதத்திலிருந்து சஞ்சய் ஹன்ஸ்தாவுக்கு தொடர் ஜெபத்தின் மூலம் பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குடிப்பழக்கம் மற்றும் திருட்டில் ஈடுபட்டு வரும் சர்கார் ஹெம்ரோம் மனந்திரும்ப; பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள பினோத் ஹெம்ரோமுக்கு தேவன் பூரண சுகமருள; குடும்பத்தினர் ஆலயம் செல்வதை தடைசெய்யும் சுனிராம் டுடு மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் விசுவாசி ஹெப்பா ஹெம்ரோம் மரணத்தில் யாரும் கலந்துக்கொள்ளமால் அக்குடும்பத்தை தள்ளி வைத்துள்ள கிராம மக்கள் மனந்திரும்பவும், மனமுடைந்து துக்கத்திலுள்ள ஹெப்பா ஹெம்ரோம் குடும்பத்திற்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள ஜெபிப்போம்.

பாலூர்ஹட்: தீப்ரத்னா & மித்திலேஷ்

துதிக்க: மூன்று பேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். இரத்த மலம் கழித்துக்கொண்டிருந்த அமால் கிஸ்கு ஜெபத்தின் மூலம் குண மடைந்தார். ஜெபத்தின் மூலம் மரண படுக்கையிலிருந்து 9 வயது சிறுவன் கௌசிக் சுகம் பெற்றான். ஜடாய் கிராமத்தில் ஏற்பட்ட எதிர்ப்பினிமித்தம் போன்கட் கிராமத்திற்கு விசுவாசிகளின் எழுப்புதல் கூட்டம் மாற்றப்பட்டபோதிலும் திரளானோர் கலந்துகொண்டு ஆசீவதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பர்லா பகுதியில் நிலவும் எதிர்ப்புகள் மறைய; அமர் சோரன், கௌரி கிஸ்கு, விஷ்வஜீத் ஆகியோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள காணப்படும் தடைகள் நீங்க; லுக்கி மார்டியின் வயிற்றிலுள்ள கற்கள் நீங்கி சுகம்பெற; நடக்க முடியாமல் கஷ்டப்படும் ஜோஹன் முர்முவின் கால் எழும்புகள் பலப்பட; செயலற்று காணப்படும் கௌரி கிஸ்குவின் கை, கால்கள் செயல்பட ஜெபிப்போம்.

கண்ணீரின் ஜெபம் வேண்டி

உத்தரப்பிரதேசம், பஸ்தி பணித்தளத்தில் படேபான் என்ற கிராமத்தில் நமது ஆலய ஆராதனை நடைபெற்று வருகிறது. ஆனால் ஒவ்வொரு வாரமும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கையையும், விசுவாசிகள் அமர்ந்திருப்பதை ஆலயத்திற்கு வெளியே நின்று புகைப்படம் எடுத்தும் உள்ளூர் உளவுத்துறைக்கு அனுப்ப வேண்டிய கட்டாயத்தில் நமது ஊழியர்கள் உள்ளனர். இன்னும் பல நிபந்தனைகள் உள்ளதால் சுதந்திரமாக ஆராதனை நடத்த இயலவில்லை. இச்சூழ்நிலை மாற பாரத்தோடு ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சாந்தா வினயராஜ்

திரு. ஜாஹர் சாய் பன்னா

சத்தீஸ்கார்

பாலோடா பஜார்:

ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

துதிக்க: கோகாரா மற்றும் கோஹ் ரௌடா கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். பிப்ரவரி மாதம் சத்தீஸ்கர் மாநிலத்தில் நடைபெற்ற வெள்ளி விழா காவல் துறை அனுமதியுடன் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை பாராட்டினார். சுய்ஹா கிராமத்தில் மூன்று நாட்கள் உபவாச ஜெபம் சிறப்பாக நடைபெற்றது. குல்குல் மற்றும் பச்பேடி கிராமங்களில் வேதாகம வகுப்புகள் தொடர்ந்து நடைபெற தேவன் உதவி செய்து வருகிறார். முடியாதி மற்றும் கைந்தா கிராமங்களில் சிறிய ஜெபக்குழுக்கள் துவங்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட தராம் சோனி ஆவிக்குரிய ஜீவியத்தில் வேரூன்றி வளர; செம்ராதி கிராமத்தின் விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க; சத்தீஸ்கர் மாநிலத்தில் வீட்டு ஜெபக்குழுக்களை தடைசெய்யும் மதவாதிகள் தேவனால் சந்திக்கப்படவும், இங்கு சுவிசேஷத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைவும்; விசுவாசி ஆனந்த் பட்டேல் தன் சொந்த நிலத்தில் வீடு கட்டுவதை தடைசெய்யும் மக்கள் மனந் திரும்பவும், பிரச்சனையின்றி அவர் வீடு கட்டி முடிக்கவும் ஜெபிப்போம்.

சீத்தாபூர்:

முத்துக்குமார் & நேத்ரவதி

துதிக்க: முறையற்ற திருமணங்கள் நடைபெறும் இச்சமுதாயத்தில் அஸ்காரா சபையைச் சேர்ந்த பப்லு தன்னுடைய இல்லத்தில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் முடிக்க தேவன் கிருபை செய்தார். பர்பகலா திருச்சபையைச் சேர்ந்த விசுவாசிகள் லெந்து காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஜெபக்கூடுகையை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றனர். உலங்க, கேஷ்ரா மற்றும் சமர்டிக்ரா கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பன்ரிபானி சபை மூப்பர் சுபாஷ் டெப்போ, நவபாரா சபை மூப்பர் தரம்சாய் ஆகியோர் மூட்டுவலி மற்றும் நெஞ்சு வலியிலிருந்து சுகம்பெற; தீபக் & ஜெசிந்தா குடும்பத்தை குழந்தைச் செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் விஜய் மாஜி மற்றும் சிவ்நாத் மாஜி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தடைசெய்யும் அஜீத் மவார் குடும்பத்தனர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அருள்மணி R., திரு. தியாகராஜன் P.
திரு. அரவிந்த் குமார் M.

கர்கோடா:

கிங்ஸ்லி ஜசக் ஜாண்சன் & மீனா

துதிக்க: லப்ரா கிராமத்தில் ஊழியர்கள் நுழைய தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையில், அக்கிராமத்திலுள்ள லாசந்தர் என்பவரின் அழைப்பின் பேரில் அவருடைய வீட்டில் ஜெபம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். நான்கு பேர் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டனர். யானைக் கூட்டத்திடமிருந்து விசுவாசி பிரமிளா அற்புதமாய் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரத்தியா, சௌஹான், சாரதி மற்றும் சாஹ் ஆகியோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர; இப்பணித்தளத்திலுள்ள பல கிராமங்களில் ஊழியர்களுக்கு காணப்படும் எதிர்ப்புகள் நீங்கி சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; போக்மான் கிராமத்தில் ஊழியத்தை தீவிரமாக எதிர்த்து வந்த ஓம்பிரகாஷ் என்பவரின் 5 வயது மகன் திடீரென பேசவும், சாப்பிடவும் முடியாமல் போகவே ஊழியரை ஜெபிக்க அழைத்தார். ஜெபத்தின் மூலம் தேவன் பிள்ளைக்கு சுகமருளினார். இக்குடும்பத்தின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

பத்தல்காவ்: பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

துதிக்க: அம்மாபள்ளி, சாஜாபள்ளி மற்றும் தில்டேகா கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் முகாம் மற்றும் மக்காபூர் சபையில் நடத்தப்பட்ட மூப்பர் முகாமில் ஏராளமானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். தில்டேகா சபையில் நடைபெற்ற 25ஆம் ஊழிய வெள்ளி விழாவில் அனைத்து சபை மக்களும் கலந்துகொண்டு சிறப்பித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மக்காபூர் ஆலயக் கட்டுமானப் பணி விரைவில் முடிவடைய; கடந்த மூன்று மாதங்களாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு ஆலயம் வர முடியாமல் தவிக்கும் விமலாவிற்கு தேவன் இரக்கம் பாராட்ட; நடைபெறவுள்ள விசுவாசத்தை அறிக்கைச் செய்யும் நிகழ்ச்சி, இயேசு திரைப்பட நிகழ்ச்சி, முகாம்கள் போன்றவை தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

பழிச்சொல் நீங்கியது

குஜராத் மாநிலம், சூரத் பணித்தளத்தின் சச்சின் கிராம சபையைச் சேர்ந்தவர் மோனிஷ் பாய். ஜவுளி சந்தையிலிருந்து டெம்போவில் சேலைகளை ஏற்றி வாடிக்கையாளர் கடைகளுக்கு கொடுத்து வந்து தன்னுடைய வாழ்வாதாரத்தை நடத்திவந்தார். இந்நிலையில் இவர் விசுவாசி என்பதால் ஒரு வாடிக்கையாளர் இவரை பற்றி குறை சொல்வதையே வாடிக்கையாக வைத்திருந்தார். ஒரு நாள் இவருடைய சேலைகள் டெம்போவிலிருந்து மாயமாகிவிட்டதாக மோனிஷ் மீது பொய் குற்றம் சாட்டப்பட்டது. மோனிஷ் வீட்டிற்கு சென்று தனது தாயாரிடத்தில் பகிர்ந்துகொண்டபோது மகனுக்காக பாரத்தோடு ஜெபித்தார். ஜெபத்தின் மூலம் துணிகள் கிடைத்துவிட்டதாக கூறி வாடிக்கையாளர் புகாரை திரும்பப் பெற்றுக்கொண்டார். நிந்தை நீங்குபடி கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. டேவிட் நிக்கல்சன்
திருமதி. பிது காந்தி லிமா ஸ்ரீதர் மொபிடெனி
திருமதி. ஹட்நெய்கிம் லெட்கோலுன் பய்ட்டே

ஒடிசா

ஜகன்நாத்பூர்: பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ

துதிக்க: புதிதாக அநேக கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். ஒவ்வொரு மாதமும் தடையின்றி சுவிசேஷ ஊழியம் செய்யவும், அநேக புதிய தொடர்பாளர்களையும் தேவன் தந்து வருகிறார். பாரஜாம்டா சபையில் இளைஞர் கூடுகை சிறப்பாக நடத்தப்பட்டது. எதிர்ப்பின் மத்தியிலும் தோராடி கிராமத்தில் அடக்க ஆராதனை நடத்த தேவன் உதவி செய்தார். இரத்தப்போக்கிலிருந்து சுமி சிங் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். இருசக்கர வாகன விபத்திலிருந்து மிஷனெரி அருள்திரு. குணச்சந்திர பைக் மற்றும் பாசுதேவ் மால்தோவின் ஜீவனை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் நிமித்தம் ஜெகநாத்பூர் துணை நீதிமன்றத்தில் வழக்குகளைச் சந்தித்து வரும் நமது விசுவாசிகள் விடுவிக்கப்பட; நக்சலைட் பகுதியான சோட்டா நாகரா மற்றும்சாரண்டா காட்டில் வாழும் சந்தால், ஹோ, கோப், லோஹர் மற்றும் ஒடியா மக்கள் கர்த்தரின் அன்பை அறிந்துகொள்ள, அவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிப்பதற்கான வாசல்களை தேவன் திறந்துத்தர; ஹோ இன மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தை தடைசெய்யும் ஹோ மஹாசபா தலைவர் மற்றும் அங்கத்தினர்கள் மனந்திரும்ப; விசுவாசத்தினிமித்தம் எதிர்ப்பை சந்தித்து வரும் ஜொங்கா சிங் விசுவாசத்தில் பலப்பட; வலிப்பு நோயினால் கஷ்டப்படும் சந்த்முனி லகுரி (3 வயது), பலேஷ்வர் (19 வயது), சுக்லால் லகுரி, உடல் முழுவதும் கொப்புளங்களால் அவதிப்படும் ஒரு வயது குழந்தை சாருல் ஆல்டா, வாய் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சுக்மதி ஹன்ஸ்தா ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

ஜிங்க்பானி:

ஆபிரகாம் எஸ். & அலீஸ் ஷீபா

துதிக்க: மூன்று பேர் இயேசுவின் மந்தையில் இணைந்துள்ளனர். புக்ரிபீயி கிராமத்தில் சபை மூப்பர்களின் மஹாசபா கூடுகை சிறப்பாக நடைபெற்றது. ஜெய்ப்பூர் கிராம ஆலயக் கட்டுமானப்பணி ஜெபத்துடன் துவங்கப்பட்டுள்ளது. அசுத்தாவியின் பிடியிலிருந்து டுட்டா பிரியா ஜெபத்தினால் விடுதலை பெற்றார். ஜோகாத்து, சோனாபுசி, ருகுத்பத்தா, நகாசா ஆகிய கிராமங்களில் பின்தொடர் பணி செய்ய உதவின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சி.கே.பி. பகுதியில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுவோர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; தேச்காவ், மைக்கோ மற்றும் இன்டிஜி கிராமங்களில் பின்தொடர் பணி தடையின்றி நடைபெற; பத்தாகுரியா, பல்வன், சிக்குர்சாய் மற்றும் சோனப்சி கிராமங்களில் புதிய ஜெபக் குழுக்கள் ஆரம்பிக்க எடுக்கப் படும் முயற்சிகளை தேவன் வாய்க்கப் பண்ண; ஊழிய விரிவாக்கத்திற்காக அர்ப்பணமுள்ள வாலிபர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜெபர்சன் B.

குஜராத்

மோட்டாபண்டா:

மர்குஸ் மால்தோ & சாரா

துதிக்க: அனைத்து திருச்சபைகளிலும் அறுவடை திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கோபோர்லி சபையின் 10-ம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாட தேவன் கிருபை பாராட்டினார். பராய் கிராமத்தில் கிறிஸ்துமஸ் தினத்தன்று நடைபெற்ற எதிர்ப்புக்குப் பிறகு எவ்வித தடையுமின்றி ஞாயிறு ஆராதனை நடைபெற தேவன் கிருபை செய்துள்ளார். பிரமோத் பாய் புதிய தன்னார்வ ஊழியராக இணைந்து அனைத்து ஊழியங்களிலும் உதவி செய்ய முன்வந்துள்ளார். தபசு நாட்களில் சில விசுவாசிகள் மற்றும் சில விசுவாச குடும்பங்கள் தங்களின் ஆவிக்குரிய வாழ்வை பெலப்படுத்த உபவாசித்து ஜெபித்து வருகிறதற்காகத் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற; ககட்கோபோர கிராமத்தில் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒரே நபர் பேலு பென். விசுவாசத்தினிமித்தம் சமூக மற்றும் ஆவிக்குரிய ரீதியான பிரச்சனைகளை சந்தித்து வரும் இவருக்கு பாதுகாப்பையும், தைரியத்தையும் தேவன் அருள; அடிக்கடி அசுத்தாவியினால் தாக்கப்படும் குட்லி கிராமத்தைச் சேர்ந்த ஒரே விசுவாசியான ஜாசோதா பேனுக்கு தேவன் பூரண விடுதலையைக் கட்டளையிட; நமது விசுவாச வாலிபர்கள் தேவ பயத்தில் தங்கள் வாழ்வை காத்துக்கொண்டு கர்த்தருக்கு மகிமையைக் கொண்டுவர ஜெபிப்போம்.

வசாவி வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:

தெபோரா விஜயராணி

துதிக்க: 2 நாளாகமம் 18-30 அதிகாரங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1 நாளாகமம் 1-23 அதிகாரங்கள் திருத்தப்பட்டு கணினியில் ஏற்றப்பட்டுள்ளது. கட்காச், கம்போடியா, மீராபூர், ஜடோலி கிராமங்களில் ஞாயிறு ஆராதனையில் செய்தியின் மூலம் விசுவாசிகளை உற்சாகப்படுத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 2 நாளாகமம் 31ஆம் அதிகாரத்திலிருந்து செய்யவிருக்கும் மொழிபெயர்ப்பு பணிக்காக; மீராபூர் கிராம திருச்சபையின் ஞாயிறு ஆராதனை, மற்ற கூட்டங்கள் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக திருச்சபை மூப்பர் பிரதாப் பாய் வீட்டு திண்ணையில் நடைபெற்று வருகிறது. இங்கு விரைவில் ஆலயம் கட்டப்பட; வசாவா திருச்சபையின் எழுப்புதலுக்காக; மொழிபெயர்ப்பை சரிபார்க்கும் மொழி உதவியாளரின் குடும்பத்திற்காக; ஃபோக்டி தலைமைத்துவ பயிற்சி மையத்திற்கு அர்ப்பணமுள்ள ஒரு சமையல்காரர் குடும்பம் கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சூசன் தாமஸ் மேத்யூ
திரு. சௌ புன்யா

பிப்பல்வாடா சிறுமியர் விடுதி:

பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா

துதிக்க: அரசாங்க தேர்வு எழுதும் மாணவ மாணவியருக்காக சிறப்பு ஜெபக் கூட்டம் நடத்தப்பட்டது. மாணவர்கள் அரசாங்க தேர்வினையும், செயல் முறை தேர்வினையும் சிறப்பாக எழுதிட தேவன் அனுகிரகம் புரிந்தார். சிறுநீரகம் செயலிழந்த பள்ளியில் பணிபுரியும் பக்கீர் பாயின் மகன் பீட்டருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். ரமேஷ் பாயின் குடும்பத்தை வாகன விபத்திலிருந்து அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சின்னம்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ள 35 மாணவ, மாணவியர்கள் விரைவில் குணம டைய; கை வீக்கத்தினால் அவதிப்படும் பள்ளி ஊழியர் கீதா பேனுக்கு தேவன் பூரண சுகமருள; நீண்ட நாட்களாக காய்ச்சலினால் அவதியுறும் விக்ரம், கால் வலியினால் நடக்க சிரமப்படும் ஆனந்த் & ஸ்வீட்டி, தலைவலியினால் படிக்க கஷ்டப்படும் ருத்திகா ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; விடுதியின் கட்டுமானப் பணிகள், வர்ணம் பூசுதல் போன்ற பணிகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

சூரத்:

மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

துதிக்க: பொய்யான குற்றம் சுமத்தப்பட்ட மோனிஷ், தனது தாயாரின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டார். மம்தாபேன் கடுமையான வயிற்று வலியிலிருந்தும், ரமாவதி பேன் மூளை கட்டியிலிருந்தும், பூணம் பேன் உடல் வலியிலிருந்தும் ஜெபத்தின் மூலம் குணமடைந்தனர். சுஜீத் பாய் குடியிலிருந்து விடுதலைப் பெற்று தன் மனைவியுடன் சமாதானத்துடன் வாழ தேவன் கிருபை செய்தார். வீடியோ கேம் பழக்கத்திலிருந்து குல்தீப் விடுதலை பெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இருதயத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டையினால் அவதிப்படும் அருஷிக்கு தேவன் அற்புத சுகமருள; பிரியங்கா, மகிமா பேன் மற்றும் சஜிபேன் ஆகியோரின் சுகப்பிரசவத்திற்காக; மீனாபேன் மற்றும் குசம் பேனை இழந்துள்ள இருவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; மீண்டும் குடிப்பழக்கத் திற்கு அடிமைப்பட்டுள்ள சஞ்சய் பாய் முழுமையாக விடுவிக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பெஞ்சமின் B., திரு. பிரதீப் முஷாஹரி
திருமதி. ஜெபஜோதி பால்ராஜ்
திருமதி. மதுகலா ரமேஷ்வர் நிர்மல்
திருமதி. ஏமி பாக்யா சுபானி

அஹ்வா & பிப்பள்வாடா:

விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

துதிக்க: ஜெபத்தின் மூலம் பாரதிபேன் மற்றும் எலிசா பேனுக்கு அங்கன்வாடியில் வேலை கிடைத்துள்ளது. ஜெபத்தினால் நெஞ்சு வலியிலிருந்து ஐசக் சுகம் பெற்றார். சுதேச ஊழியர் சுக்கர் பாய்க்கு, ஹெர்னியா அறுவை சிகிச்சை முடிந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுரேஷ் வயிறு வீக்கத்திலிருந்தும், கருவுற்றுள்ள பிரமிளா பேன் இரத்தக் குறைப்பாட்டிலிருந்தும், யெஷ்வந்த் (9 வயது) மற்றும் ஜிக்னேஷ் (5 வயது) மாலைக்கண் நோயிலிருந்தும் குண மடைய; சுனில் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியுள்ள பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற ஜெபிப்போம்.

தராம்பூர், கெர்காம் விடுதி:

ஜி. குமரன் & ஜெலின் ஜெயா

துதிக்க: மரத்திலிருந்து கீழே விழுந்து காயமுற்றிருந்த திக்விஜய் குணமடைந்து ஆலயம் வர தேவன் கிருபை செய்துள்ளார். ஒருவார காலமாக சாப்பிடவும், நடக்கவும் முடியாமல் கஷ்டப்பட்டு வந்த வைசாலி ஜெபத்தின் மூலம் குணமடைந்தார். மத்திய அரசால் நடத்தப்பட்டும் 8ஆம் வகுப்புத் தேர்வில் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் அனைவரும் தேர்ச்சிப்பெற தேவன் கிருபை செய்தார். கெர்காம் விடுதிக்கு அருகில் இரவில் உலாவி வந்த சிறுத்தையிடமிருந்து மாணவர்களை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஏணியிலிருந்து கீழே விழுந்து வலது கை எலும்பு முறிவு ஏறப்பட்டுள்ள 11ஆம் வகுப்பு மாணவன் ரோகில் விரைவில் சுகம்பெற; தேர்வு எழுதியுள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற; உடம்பின் பின்புறம் முழுவதும் கட்டிகளால் சிரமப்படும் உஜ்வல் பூரண சுகம்பெற; விடுதிக்கு அர்ப்பணமுள்ள சமையல்காரர் கிடைக்க ஜெபிப்போம்.

மோஸ்தா:

பால்ராஜ் & கோயில்புஷ்பம்

துதிக்க: நீண்ட நாட்களாக நெஞ்சுவலி மற்றும் எரிச்சலினால் அவதியுற்று வந்த ராஜேஷ்பாய் ஜெபத்தின் மூலம் குண மடைந்தார். தொண்டை புற்றுநோயினால் பேச, சாப்பிட முடியாமல் தவித்த சித்தல் பேன் ஜெபத்தினால் சும்பெற்று வருகிறார். குமினா சபை மூப்பர் ஈஸ்வர் பாய் மரம் வெட்டிக்கொண்டிருந்துபோது மரம் முறிந்து அவர்மேல் விழபோகும் நேரத்தில் இயேசுவே என்று அவர் கூப்பிட்ட வேளையில் மரம் வேறு பக்கமாக விழுந்து அவரது ஜீவன் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய விசுவாசி ரீனா பேனின் கணவர் கோவிந்த் பாய் மனநோயிலிருந்து சுகம்பெற; கண்ணில் ஏற்பட்டுள்ள நோய்த் தொற்றினால் நீர் வடிந்துகொண்டிருக்கும் சன்னிலால் பாய் குணமடைய; தைராய்டு நோயினால் உடல் மிகவும் பருமனாக இருக்கும் ரோஷ்னி பேன் குணமடைய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கனகநேசம் செல்லத்துரை
திரு. பொன் அகஸ்டின் E., திரு. சிவகுமார் C.
திரு. பென்னிசன் எபினேசர் I.
திருமதி. காயத்ரி ஜெபர்சன்

போடோலி & தபோய்:

ஏசுபாபு & உஷா

துதிக்க: மாலு கிராமத்தில் பாம்பு கடித்த 12 வயது கும்டி என்ற பெண்ணுக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது தேவனால் சுகம்பெற்றாள். கார்னேட் கிராமத்தில் ராஜியா பேன் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது சுயநினைவை இழந்து கீழே விழுந்தார். அவருக்காக சக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது சுயநினைவைப் பெற்று எழுந்தார். சூரத்தால் மற்றும் சார்னெட் கிராமங்களில் பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற உதவின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவின் நிமித்தம் எதிர்ப்பை சந்தித்து வரும் சுமிபேன் விசுவாசத்தில் உறுதியாய் நிற்க; எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; குந்தன் கிராமத்தில் நடைபெறும் மூன்று நாள் வாலிபர் கூடுகையில் அநேகர் கலந்துகொண்டு தங்கள் வாழ்வை கர்த்தருக்கென்று அர்ப்பணிக்க; எலிசா என்ற 6 வயது குழந்தை வியாதியிலிருந்து பூரண சுகம்பெற; கெலடியா கிராமத்தில் எதிர்ப்பினால் தடைசெய்யப்பட்டுள்ள விடுதி மீண்டும் துவங்கப்படவும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கவும் ஜெபிப்போம்.

தாத்ரா & நகர் ஹவேலி

கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

துதிக்க: கால் முறிவிலிருந்து வசோனா கிராமத்தைச் சேர்ந்த அங்கிதா சுகம் பெற்று வருகிறார். நடைபெற்ற பெண்கள் கூடுகையில் சுமார் 250 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். உமரணி கிராமத்தில், தவறி கிணற்றில் விழுந்த நமது விசுவாசியின் மகனை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். கடுமையான உதிரப்போக்கினால் அவதிப்பட்டு வந்த குஷ்மிளா பேனுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தொண்டையில் உள்ள கட்டியினால் சாப்பிட முடியாமல் அவதிப்படும் ஆறு வயது ரித்திக்காவை தேவன் குணப்படுத்த; பக்கவாதத்தினால் நடக்க முடியாமல் கஷ்டப்படும் பிஜ்ல் பேன் சுகம்பெற; குடிப்பழக்கத்தினால் குடும்பத்தை வறுமைக்குள்ளாக்கியுள்ள சங்கலி குடியிலிருந்து விடுபட்டு மனந் திரும்ப; விசுவாசி சுந்தரி பேனுக்கு கிராமத்தில் நிலவும் எதிர்ப்புகள் நீங்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆசீர் மோசஸ் தியாகராஜ் S.
திருமதி. ஜோதிமணி மனோஜ்
திருமதி. இடிகினலா மௌனிகா கொடிசெலா

மகாராஷ்டிரா

நேர்:

மூர்த்தி & பாரதி

துதிக்க: பண்டியகாவ் கிராமத்தில் சிறுவர் முகாம் மற்றும் கேட்பால் & கைராபாணி கிராமங்களில் பெண்கள் கூடுகைகளில் அநேகர் பங்குபெற தேவன் கிருபை செய்தார். பாடி மற்றும் கசேரே கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்களை ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். தேவூர் கிராமத்தில், விசுவாசத்தில் பின் மாற்றமடைந்த குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சத்தாரே, மால்காவ் கிராமங்களில் சுவிசேஷ பிரதிகள் விநியோகிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பீல் இன மக்கள் வாழும் அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை கட்டளையிட; விசுவாசிகளின் சாட்சியுள்ள வாழ்க்கையின் மூலம் தங்கள் உறவினர்களை மற்றும் கிராமத்தினரை கிறிஸ்துவண்டை வழிநடத்த; திட்டமிட்டுள்ள அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

நவாப்பூர்:

திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

துதிக்க: நான்கு பேர் இயேசுவின் அன்பினை அறிந்துகொண்டனர். பிஜாதேவி கிராமத்தைச் சேர்ந்த சதிபாய் அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். ஹருடிதாரா மற்றும் வசலாய் கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். வெள்ளை அணுக்கள் குறைபாட்டிலிருந்து மார்த்தா குணமடைந்தார். சிறுநீரக அறுவை சிகிச்சையின்போது ஏற்பட்ட தவறினால் தீராத தலை மற்றும் இருதய வலியினால் அவதிப்பட்ட ஆசீர்வாத் என்ற நபருக்கான விசுவாசிகளின் ஜெபத்தைக் கேட்டு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தொடர்ந்து வாந்தி மற்றும் காய்ச்சலால் அவதியுறும் அமிலா பேன் குணமடைய; குஷ்ட ரோகத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாட்டிபாய் மற்றும் வாய் புற்றுநோயினால் அவதிப்படும் ரஜேந்திரன் ஆகியோர் அற்புத சுகம்பெற; நவகாவ் மற்றும் சோல்ஹார் கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலமும், அரசாங்க அனுமதியும் கிடைக்க ஜெபிப்போம்.



போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

துதிக்க: கதரதேவ் கிராமத்தைச் சேர்ந்த லக்ஹாரி அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். படாலா கிராமத்தில் நடத்தப்பட்ட தேடுவோர் முகாமில் இரண்டு குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டனர். நடத்தப்பட்ட சிறுவர் முகாமில் 110 சிறுவர்கள் கலந்துகொண்டு தேவ வசனங்களை கற்றுக்கொண்டனர். கிராம சபைகளில் நிர்வாகக் கூட்டம் சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: துர்படியா கிராத்தைச் சேர்ந்த அர்ஜுன் சிறுநீரக பிரச்சனையிலிருந்தும், லக்காடியா கிராமத்தின் சுராப் சிங் காச நோயிலிருந்தும், ஜாய்யெடி கிராமத்தின் விக்ரம் தொழு நோயிலிருந்தும், தேவூடா கிராமத்தின் சச்சின் பக்கவாதத்திலிருந்தும் பூரண சுகம் பெற; லக்காடியா கிராமத்தின் நேஹா அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

இகத்புரி: நாகராஜன் & திலகவதி

துதிக்க: பதன்கவாடி மற்றும் சோட்டிசிவாடி கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் தேவன் கவிதாவுக்கு சுகப்பிரசவம் அருளினார். தாமனி கிராமத்தில் எதிர்ப்பினால் கிறிஸ்துவை மறுதலித்துச் சென்ற நவ்ரூத் அசுத்தாவியின் பிடியினாலும், மீனா வெட்டு காயத்தினால் அவதிப்பட்டனர். விசுவாசிகள் அவர்களை சந்தித்து ஜெபித்தபோது தேவன் இருவருக்கும் சுகமருளினார். குரோலி கிராமத்தில் நடத்தப்பட்ட சிறுவர் கூடுகையில் ஏராளமானோர் கலந்துகொண்டு வேத வசனங்களை கற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தாமனி கிராமத்தில் ஊழியர் களுக்குக் காணப்படும் எதிர்ப்புகள் நீங்கி நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; முகுந்த்வாடி கிராமத்தைச் சேர்ந்த கமல் பாய் மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற்று ஆலயம் வந்து தேவனைத் தொழுதுகொள்ள ஜெபிப்போம்.

கர்நாடகா

நிட்குண்டி: மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா

துதிக்க: ஏழு இடங்களில் இரவு கூட்டங் களின் மூலம் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். மூன்று பேர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். ஜெபத்தின் மூலம் சைநாத், கணையக் கல் பிரச்சனை நீங்கி சுகம் பெற்றார். நீண்ட நாட்களாக நரம்பு தளர்ச்சியினால் அவதிப்பட்டு வந்த பிரேமா ஜெபத்தின் மூலம் குண மானார். இரத்தக் குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டிருந்த சில்பாவிக்கு ஜெபத்தின் மூலம் பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நுறையீரல் பிரச்சனையினால் மூச்சுவிட சிரமப்படும் கங்காதேவிக்கு தேவன் பூரண சுகமருள; தொண்டையில் ஏற்பட்டுள்ள அடைப்பினால் சாப்பிட கஷ்டப்படும் ஹிராபாய் குணமடைய; கணவனை இழந்து இரண்டு பிள்ளை களுடன் வாழ்வாதாரம் இன்றி அவதிப்படும் பிரேமா குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. வீபா G. சந்திரா ஸ்ரீனிவாசன்
திருமதி. செல்வ மொரினா மனாசே டேனியல்

ஷிக்காவ்:

நரேந்திரா குமார் & காஜல்

துதிக்க: ஒருவர் கிறிஸ்துவின் அன்பிற்கு தன்னை ஒப்புக்கொடுத்துள்ளார். இரத்தம் மிகக்குறைவாக இருந்ததினால் பிரவசத்தின் போது மருத்துவரால் கைவிடப்பட்ட கங்கம்மா, சபையாரின் ஊக்கமான ஜெபத்தினால் சுகப்பிரசவத்தில் குழந்தை பெற தேவன் கிருபை செய்தார். மரணத் தருவாயிலிருந்த தேணுகாதேவி விசுவாசி களின் ஜெபத்தினால் குணமடைந்தார். பெண்கள் மற்றும் சபை மூப்பர்கள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது.

ஜெபிக்க: நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள ஹெல்சேக்கோ, பிஸ்னோலி, டார்லெகெட்டா மற்றும் காம்லி ஹெப்பா கிராமங்களில் ஜெபக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட; வேதாகம கல்லூரியில் படித்துவரும் சங்கீதா மற்றும் சந்திரன் ஆகியோர் படிப்பை சிறப்பாக முடித்து ஊழியம் செய்ய; விஸ்வா, அனிதா, கீதா, மெஹா, சுவர்ணா ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; முழு நேர ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்துள்ள மகேஷ்க்காக ஜெபிப்போம்.

ஹலியால் & கானாப்பூர்:

தாங்லால் ஸௌ & நெம்ஸாவா

துதிக்க: இரத்த புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தருவாயிலிருந்த பசவராஜ் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருகிறார். திருமணமாகி ஆறு வருடங்களுக்குப் பிறகு ஜெபத்தின் மூலம் ஹன்னப்பா & ரேணுகா தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். மத தீவிரவாதிகளின் மிரட்டல்களுக்கு மத்தி யிலும் இட்டகி கிராம சபை விசுவாசிகள் தைரியமாக ஞாயிறு ஆராதனை மற்றும் பிற கூட்டங்களை நடத்தி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய விசுவாசி பிங்கியின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; சுமித்ரா & நாகப்பா குடும்பம் விசுவாசத்தில் வேரூன்றி வளர; தொண்டை வீங்கி சாப்பிட முடியாமல் அவதியுறும் மல்லப்பா பூரண சுகம்பெற; செங்கல் சூளைக்கு வேலைக்கு சென்றிருக்கும் விசுவாசிகள் பத்திரமாக வீடு திரும்ப; வேலை செய்யும் இடங்களில் சாட்சியினை காத்துக்கொள்ள; நன்கட மற்றம் இட்டாஹி கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் மற்றும் பஞ்சாயத்து அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

ஆந்திரப் பிரதேசம்

சதும்: அனில் மஹாலி & பிரசாந்தி

துதிக்க: மிக பயங்கரமான விபத்திலிருந்து விசுவாசி எலிஷாவை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். விசுவாசிகளுக்கு மிஷன் மற்றும் தொலைநோக்கு பயிற்சியை நடத்த தேவன் உதவி செய்தார். கடந்த மாதம் அனைத்து கூடுகைகளையும் சிறப்பாய் நடத்த தேவன் உதவி செய்தார். புதிதாக ஒருநபர் இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜெய & சன்னிரா, உஷா & முரளி, சரஸ்வதி & நாகராஜ், ஹரிகா & அசோக் ஆகிய குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; பின்வாங்கிப்போன விசுவாசிகள் மீண்டும் சபைக்குத் திரும்ப; ஜானகிராம் மற்றும் ராஜன்னா பக்கவாதத்திலிருந்து பூரண சுகம்பெற; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுவோர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; ஸ்ரீகாந்த் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஏசு பாபு A.

மடகசிரா:

பால் ரவிராஜ் & ஹேமலதா

துதிக்க: அசுத்தாவியின் பிடியிலிருந்து தொடர் ஜெபத்தின் மூலம் நாகராஜ் குடும்பம் விடுதலை பெற்றது. ஆறு நபர்கள் இயேசுவின் அன்பினை அறிந்து கொள்ளவும், நான்கு இடங்களில் இயேசு படம் திரையிடப்படவும், சுவிசேஷ பிரதிகளை அநேகர் பெற்றுக்கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். நாராயணா & ஆதிலக்ஷ்மி குடும்பம் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீய நண்பர்களின் சகவாசத்திலிருந்து ப்ரவீன் விடுபட; நரம்பு தளர்ச்சியிலிருந்து ஆராதியா சுகம்பெற; சிவலம்மா, ஒபுலம்மா, ராமாஞ்சுலு ஆகியோர் விசுவாசத்தில் பெலப்பட; குடிப்பழகத்திலிருந்தும், தவறான உறவுகளிலிருந்தும் மசேஷா விடுதலைபெற பாரத்துடன் ஜெபிப்போம்.

தமிழ்நாடு

இளம்பிள்ளை:

செல்வகுமார் R. வில்சன் & ஜெயா ஹெலன் ரோஸ்

துதிக்க: கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். பத்து ஆண்டுகளாக பெலவீனப்பட்டிருந்த சரண்யா, கிரேஸி ஆகியோருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். விஷ்ணு பிரியாவுக்கு ஜெபத்தின் மூலம் வேலைக் கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பாவ பழக்கத்தில் சிக்குண்ட மம்தாவின் மகள் செல்வி விடுதலை பெற; கை மற்றும் கண்ணில் ஏற்பட்டுள்ள கட்டியினால் அவதிப்படும் எட்வர்டுக்கு தேவன் பூரண சுகமருள; கோகுல், புவனேஷ்வரி ஆகியோருக்கு தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையை கட்டளையிட; இளம்பிள்ளை பணித்தளத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடம் கிடைக்க ஜெபிப்போம்.

மேச்சேரி:

தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி

துதிக்க: நீண்ட நாட்களாக சரீர பெலவீனத்துடன் இருந்த மேரிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுக மருளினார். சதீஷ்-பவித்ரா தம்பதியினரை ஆபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். சுகவீனப்பட்டிருந்த நாகராஜின் குழந்தைக்கு தேவன் சுகமருளினார். புதிதாக புகழேந்தி-ஸ்ரீபிரியா தம்பதியினர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சதீஷின் வியாபாரத்தை தேவன் ஆசீர்வதித்து அவர்களின் கடன் பிரச்சனையை நீக்க; ரஜினா & பியூலா ஆரம்பித்துள்ள தையல் பயிற்சிப் பள்ளியை தேவன் ஆசீர்வதிக்க; வேலை நிமித்தம் வெளி மாவட்டங்களுக்குச் சென்றுள்ள விசுவாசிகள் சுகபத்திரமாய் இருக்க ஜெபிப்போம்.

417 மிஷனரி ஆல்பம்



திரு. ஹென்றி சாலமோன் & திருமதி. ஏஞ்சல் ஜெபா

தென் தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பிள்ளையான்மனை கிராமத்தில் திரு. கனகராஜ் & திருமதி. கமலா தம்பதியினருக்கு 10.05.1986 அன்று மூத்த மகனாக திரு. ஹென்றி சாலமோன் பிறந்தார். இவரது பிறப்பிற்குமுன் இவரது தந்தை கோயம்புத்தூரில் மளிகைக் கடை நடத்தி வந்தார். தந்தையின் குடிப் பழக்கத்தினிமித்தம் மளிகைக் கடையை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால், திருச்சியிலுள்ள தாயாரின் பெற்றோர் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். அங்கு அருகாமையில் வசிக்கும் மேரி டீச்சர் வீட்டில் நடைபெற்று வந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஜெபக்கூட்டத்தில் தவறாது கலந்துகொண்ட இவரது தாயார் கருவிலிருக்கும் தன் குழந்தையை தேவ பணிக்கென அர்ப்பணித்தார். எத்தனையோ இடையூறுகள் வந்தபோதிலும் இவரது தாயார் மகனுடைய படிப்பிலும், ஆவிக்குரிய வாழ்விலும் மிகவும் கவனம் செலுத்தி வந்தார். விடுதியில் படித்த இவர் தேவ வசனத்தில் பெலப்பட்டு, தேவனோடுள்ள ஐக்கியத்தில் வளர்ந்தார். திடீரென விடுதி மூடப்படவே 9ஆம் வகுப்பிற்குப் பின் தாயாருடன் தங்கி படிப்பினைத் தொடர்ந்தார். வேனிற்கால விடுமுறையின்போது தன் படிப்பிற்கு பணம் சேர்க்க சென்னைக்கு வந்து கிடைத்த வேலைகளைச் செய்துவந்தார். பணம் கையில் சேர்ந்ததால் கெட்ட நண்பர்களின் சகவாசத்தால் தீய வழியில் ஈடுபட்டார். ஏறத்தாழ ஏழு வருடங்கள் நிலையில்லா வேலை, நிம்மதியில்லா வாழ்க்கை என வாழ்ந்துகொண்டிருந்த அவரிடம், அவருடைய மாமா இவரது தாயாரின் அர்ப்பணிப்பைக் குறித்து நினைப்பூட்டி ஜெபிக்கத் தூண்டினார். நெகேமியா 8:10 வசனத்தின் மூலம் அவர் மனந்திரும்பி இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக்கொண்டார். 2011ஆம் ஆண்டு ஒரு மிஷனெரியாகச் செல்ல தன்னை அர்ப்பணித்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார். ஒரு வருடம் சென்னை தலைமை அலுவலகத்தில் பணியாற்றிய போது மூத்த ஊழியர்களால் அவரது திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தின் விக்கிரமசிங்கபுரத்தில் திரு. சொர்ணராஜ் & திருமதி. லீலா புஷ்பம் தம்பதியினருக்கு 25.02.1986 மூன்றாவது மகளாக பிறந்தார் சகோதரி ஏஞ்சல் ஜெபா. சிறுவயதிலிருந்தே விடுமுறை வேதாகம பள்ளி, ஞாயிறு பள்ளி மற்றும் FMPB ஜெபக்கூட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். 11ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த போது ஒரு கூட்டத்தில் திரு. ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணனின் செய்தியின் மூலம் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். பின்பு தேசத்தின் மீதுள்ள கரிசனையால் தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தார். கல்லூரி படிப்பை முடித்த இவர் 2006இல் FMPBஇல் இணைந்தார். 2007இல் ஜான்சியில் மிஷனெரி பயிற்சி முடித்து குஜராத்திலுள்ள ஜாவ்டா ஆங்கில பள்ளியில் ஆசிரியராக தன் ஊழியத்தை தொடர்ந்தார். 28.05.2012 அன்று திரு. ஹென்றியுடன் திருமணத்தில் ஒன்றிணைக்கப்பட்டு ஜான்சியிலேயும், பின்னர் குஜராத் மாநிலத்தின் ஜன்கேடா, தேபாய், கவாண்ட் மற்றும் நஸ்வாடி ஆகிய பகுதிகளில் டுங்கராபீல் இன மக்கள் மத்தியிலேயும் குடும்பமாக ஊழியம் செய்தனர். தற்போது இவர்கள் கவாண்ட் பணித்தளத்தையும் மற்றும் சிறுவர் விடுதியையும் கவனித்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு இரண்டு மகன்களை கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். மூத்தமகன் ஜோஹன் அப்துல் (15.05.2013) சந்தோஷ் வித்யாலயாவில் 8ஆம் வகுப்பு படிக்கிறான். இரண்டாவது மகன் ஜவன் இம்மானுவேல் (29.07.2020) வரும் மே மாதம் பள்ளிக்குச் செல்லவிருக்கிறான். இந்த குடும்பத்தினை நமது ஜெபத்தில் நினைவுகூறுவோம்.

உம்மண்டை ஏற்றுக்கொள்ளும்

Regd. Newspaper for India No.17759/69

அப்பா, அப்பா,
ஏன் என்னை கைவிட்டீர் என்று
உம் குரல் கேட்குதையா,
என் தப்பால், தப்பால் வந்த வினை என்று
என் நெஞ்சம் நொறுங்குதையா.

என் பாவம் போக்க, ரட்சிப்புப் பெற,
உம்மையே தந்தீரையா,
சிலுவையில் உம்மையே தந்தீரையா.

1 சிரசினில் முள் முடி,
ரத்தம் வழிந்திட,
சாட்டையால் அடித்தார்களே,
பாவம் அறியாத ஆட்டுக்குட்டியை,
உம்மை ஆணியால் அடித்தார்களே,
ஐயா, உம்மை சிலுவையில் அறைந்தார்களே,
எத்தனை கொடிய வேதனை இருப்பினும்,
தன் பாவம் அறியாது செய்கிறார்கள் என்று
மன்னித்து விட்டீரையா,
நீர் மன்னித்து விட்டீரையா.

2 அன்னையைக் கண்டதும்,
தன் கடன் உணர்ந்து,
மெய் வலி மறந்து,
சீடரிடம் ஒப்படைத்தீர்,
"இனி உன் தாயை, ஏற்றுக்கொள்"
என்று உரைத்தீர்,
தேகத்தில் நீர் வற்றி,
ரத்தம் சாரையாய் வழிய,
தாகத்தில் நாவு வரலே,
"தாகமாய் இருக்கிறேன்" என்று.

உம் நாவுக்கு நன்நீர் தர
நாதி இல்லை ஐயா,
நாதி இல்லை ஐயா.

3 எல்லாம் முடிந்தது என்று,
என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று
பிதாவிடம் ஒப்படைத்தீர்,
உம்மையே ஒப்படைத்தீர்,
கள்ளனாய் உம் பக்கம் வந்து
மன்னிப்பு கேட்கிறேன் ஐயா
நான் மன்னிப்பு கேட்கிறேன் ஐயா,
என்னையும் ஒருநாள்
உம்மண்டை ஏற்றுக்கொள்ளுமையா,
என்னை சேர்த்துக்கொள்ளுமையா.

திரு. ஞானமணி அம்புரோஸ்
FMPB US – காலிபோர்னியா



Published by: S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***